# சித்திரம் கலை

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 13

**(2018 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

DRAFT

**அழகியற் கல்வித்துறை**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**இலங்கை**
**www.nie.lk**
**info@nie.lk**

**சித்திரம் கலை**
தரம் - 13
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2018

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

DRAFT

**அழகியற் கல்வித்துறை**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :***
தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களையும் கல்வி தொடர்பாக பல்வேறு கல்வி விற்பன்னர்கள் முன்வைத்த கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட கலைத்திட்ட நியாயப்படுத்தல் செயன்முறையின் விளைவாக, பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம் பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வித்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ் நியாயப்படுத்தல் செயன்முறையானது அடிப்படை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில், தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் நேயப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

DRAFT

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டங்கள், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து

விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், வேலை உலகிற்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் சமூகத்தினை மேம்படுத்துவதாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

DRAFT

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன பூகோள நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத் துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன் படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாட நிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத் தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

DRAFT

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அங்கீகாரமும்**
கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

**பாடஇணைப்பாக்கம்**

| | |
|---|---|
| திரு. எம்.ஜீ.ஏ.கே.யூ. பண்டார | - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை |
| திரு. ரவீந்திர தேனுவர | - விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை |

**பாட நிபுணர்கள்**

| | |
|---|---|
| பேராசிரியர் சுசிரிபால மாலிம்பட | - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியல் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் ரம்யவர்தன பொடிநிலமே | - சிரேஷ்ட விரிவுரையாளர் அழகியல் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர் மங்கலிக்கா ஜயதுங்க | - சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| கலாநிதி தா. சனாதனன் | - சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி உபாலி ரஞ்சித் ரணவக்க | - உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணியகம், ஹொரண |

**உள்வாரி வளப்பங்களிப்பு**

| | |
|---|---|
| திரு. எம்.ஜீ.ஏ.கே.யூ. பண்டார | - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை |
| திரு. ஞானசிரி பீ. கமகே | - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை |
| திரு. ரவீந்திர தேனுவர | - விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை |
| திருமதி. சமரி தபஸ்வரகே | - உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை |
| திருமதி. எம்.பீ. பிரேமதிலக்க | - உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை |

DRAFT

**வெளிவாரி வளப்பங்களிப்பு**

| | |
|---|---|
| திருமதி. எச்.ஏ. சஞ்சீவி மஞ்சரி | - ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு |
| திரு. ஜே.ஏ. வஜிர நளிந்த ஜயதிலக்க | - சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியல் பல்கலைக்கழகம் |
| திரு. பிரசன்ன ரணபாகு | - விரிவுரையாளர், தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவனம், கொழும்பு |
| செல்வி. சிறீமதி ஏக்கநாயக்க | - விரிவுரையாளர் (வெளிவாரி) களனி பல்கலைக்கழகம் |
| திரு. எச்.எம்.பீ.எச். பண்டார | - சித்திரக்கலை ஆசிரியர் புனித சில்வெஸ்டர் வித்தியாலயம், கண்டி |
| திரு. தீப்த ஶ்ரீ உதயங்க | - சித்திரக்கலை ஆசிரியர், றோயல் கல்லூரி, மொனராகல |
| திருமதி. கே.எம்.ஏ. அனுபமா பண்டார | - உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு |

| | |
|---|---|
| **மொழி செம்மையாக்கம்** | திரு. திரு. ஶ்ரீநாத் கணேவத்த |
| **மொழிபெயர்ப்பு** | திருமதி. யூ. விவேகானந்தன்<br>ஓய்வு பெற்ற ஆசிரியை, ஹட்டன் வலயம்<br>திரு. பிஷ்ரூள் ஹாசி காசிம்<br>ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம்<br>கொழும்பு |
| **அட்டை வடிவமைப்பு** | திரு. ரவீந்திர தேனுவர, அழகியற் கல்வித்துறை |
| **கணினி வடிவமைப்பு** | திருமதி. எம்.என்.எப். றிஹானா, தே.க.நி. |
| **நானாவித உதவிகள்** | செல்வி. தீபா சிரோமணி, அழகியற் கல்வித்துறை,<br>திரு. பிரேமரத்தின பெரேரா, அழகியற் கல்வித்துறை |

## ஆசிரியர் வழிகாட்டியை பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2015ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படும் 13ம் தரத்துக்கான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட இவ் ஆசிரியர் வழிகாட்டி 2018ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும். வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செற்பாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணை புரிவதற்காக இவ் வழிகாட்டி உங்களுக்கு வழங்கப்படுகிறது. இதனைப் பயன்படுத்தும்போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனஞ் செலுத்துவது முக்கியமானது.

- பாடசாலையின் ஆண்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய, சித்திரக்கலைப் பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான நேரத்தை முகாமைத்துவம் செய்து கொள்ளவும்.
- ஆளுமை வளர்ச்சியை அடிப்பயையாகக் கொண்டு இவ்வாசிரியர் வழிகாட்டியில் 7 தேர்ச்சிகளில் பாடங்கள் வரிசைப்படுததப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் கட்டாயமாகக் கற்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
- பாட உள்ளடக்கத்தில் 1.0 இல் இருந்து 5.0 வரைக்கான செயன்முறை தேர்ச்சிகளில், ஒவ்வொரு தேர்ச்சி மட்டத்திலும் மாதிரி செயற்பாடு ஒன்று மட்டும் உள்ளடக்கப்படடுள்ளது. அத்தேர்ச்சி மடடங்களுக்கு எற்ற விதத்தில் விதந்துரைக்கப்பட்ட தலைப்புகளில் அல்லது பொருத்தமான வேறு தலைப்புகளில் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிட்டுக்கொள்க. விதைந்துரைக்கப்பட்டுள்ள, மற்றும் தாமே தயாரித்த செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.
  - அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்னிலை யொன்றின் மூலம் களியூட்டத்தக்கவாறு பாடத்தைத் தொடங்குவதன் மூலம், மாணவரைப் பாடத்தின்பால் ஈர்த்தல், முன்னறிவை வினவியறிதல் ஆகியன மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  - மாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டு விதைந்துரைக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் முறைகளைப் போலவே உங்களால் பின்பற்றப்படும் வேறு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளையும் உபயோகித்துத் தேவையான முன்னூட்டல்களையம் பின்னூடடல்களையும் வழங்கி, செய்றபாடுகளை இறுதி வரை இட்டுச் சென்று எதிர்பாரக்கப்படும் கற்றல் பேறுகளை அணுகுதல்.
  - முன்வைப்புகள், மதிப்பீடு, மீட்டாய்வு, பின் தொடர் வேலைகள், ஒப்படைத்தல் போன்வற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.
- 6.0, 7.0 எனும் தேர்ச்சிகளுக்கான தேர்ச்சி மட்டங்களில் அடங்கும் பாடங்களை உள்ளடக்கிய செயற்பாடுகள் திட்டமிட்டுள்ளன. சகல செயற்பாடுகளுக்குமான பாடக் குறிப்புகள் சுருக்காகத் தரப்பட்டுள்ளன.

அவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பாடக் குறிப்புகளை போதியளவிலான விபரிப்புடன் கற்பிக்க வேண்டியது உங்கள் கடமையாகும்.

- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்களுக்குப் பின் 6.0, 7.0 எனும் தேர்ச்சிகளில் உள்ளடங்கும் பாடக் குறிப்புகளுக்கான சகல நிழற் படங்களும் உருவப் படங்களும் தரப்பட்டுள்ளன. மாணவருக்குப் பாடவிடயங்களைக் கற்பிக்கும் போது அவற்றைப் பொருத்தமான விதத்தில் உபயோகிப்பது பயன் தரக்கூடியது.

DRAFT

- இவ் ஆசிரியர் வழிகாட்டியானது ஒரு வழிகாட்டி மட்டுமே வழிகாட்டியின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துடன் தொடர்புபட்ட நூல்களையம், இணையத்தளங்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வேறு கல்வி சார்ந்த ஊடகங்களையும் பரிசீலனை செய்வதால் அசிரியர்களும் மாணவர்களும் அறிவு, விழிப்புணர்வு என்பவற்றை முழுமையாகப் பெற்றுவிடுவர். அதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாடு மேலும் சிறப்படையும்.
- ஆக்கபூர்வமான ஆசிரியராகத் தொழிற்படுவதற்காக எண்ணி எளிமையான வழிகாட்டலாக முன்வைக்கப்பட்ட இவ்வாசிரியர் வழிகாட்டி சித்திரக்கலைப்பாட கற்றல் கற்பித்தலையும் கணிப்பீட்டுச் செயற்பாட்டையும், செம்மையாக்க உறுதுணையாக இருக்கட்டும் என வாழ்த்துகிறோம்.

DRAFT

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி | iii |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி | v |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | vi |
| கலைத்திட்டக்குழு | vii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | viii - ix |
| உள்ளடக்கம் | ix |
| பாடத்திட்டம் | x - xl |
| தவணைக்குரிய செயற்பாடுகள் | xli - xlvi |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | 1- 93 |
| புகைப்படத்திரட்டு | 94 - 144 |
| மேலதிக வாசிப்பு நூல்கள் | 145 - 148 |


DRAFT

# பாடத்திட்டத்தின் உள்ளடக்கம்

# 1.0 அறிமுகம்

தனியாட்களிடத்தே இரசனைத்திறன்களை மேம்படுத்தப் பெரிதும் உதவும் அழகியற் கலைப்பாடம் சித்திரப் பாடமெனலாம். கட்புலக் கலைகளின் கீழ் வகைப்படுத்தப்படும் சித்திரக்கலைப்பாடமானது, பாடசாலைக் கலைத்திட்டத்தில் குறிப்பான ஓர் இடத்தைப் பெறும் ஒரு பாடமாகும். அது பாடசாலை மாணவரிடத்தே சமநிலையான ஆக்கியல் ஆளுமையை வளர்ப்பதில் பங்களிப்புச் செய்யவல்லது. தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சித்திரக்கலைப் பாடத்திட்டத்தில் கோட்பாட்டறிவுப் பகுதிகளையும் செய்முறைப்பகுதிகளையும் சமநிலையாகக் கற்க வகை செய்யப் பட்டுள்ளமையால் அக்கருமத்தை மேன்மேலும் வினைதிறனுடையதாய் நிறைவுசெய்து கொள்ள வழிகோலப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு முதல் 6 ஆந் தரம் தொடக்கம் நடைமுறைக்கு வந்த புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்களின் கீழ் 2016 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதபத்திர உயர்தர 12ஆம், 13 ஆம் தரங்களுக்குரிய சித்திரக்கலைப் பாடத்துக்குரிய புதிய பாடத்திட்டம் அறிமுகஞ் செய்யப்படுகின்றது. எமது நாட்டுப் பிள்ளைகளிடத்தே அறிவு, திறன்கள், மனப்பாங்குகளோடு பூரணமான வாழ்க்கை அனுபவங்களையும் வழங்கும் நோக்குடன் விதந்துரைக்கப்பட்டுள்ள ஏழு தேர்ச்சிகளை இப்பாடத்திட்டம் கொண்டுள்ளது. செய்முறைப் பாடப்பகுதிகளை உள்ளடக்கிய ஐந்து தேரச்சிகளும் கலை நயப்பு மற்றும் கலை வரலாற்றை உள்ளடக்கிய இரண்டு தேர்ச்சிகளுமே அவையாகும். பாடசாலை மாணவர்களது ஆக்கியல் சிந்தனை, செய்முறைத்திறன் விருத்தி ஆகியவற்றைக் கலைத்துவ பரிமாணங் களின் வழியே வெளிப்படுத்தி அவர்களிடத்தே பொறுமை, தன்னடக்கம், மனவெழுச்சிக் கட்டுப்பாடு, ஒத்துழைப்பு போன்ற காத்திரமான ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்யப் பங்களிப்புச் செய்யத்தக்கவாறு சித்திரக்கலை செய்முறைப்பாடப்பகுதிகளை உள்ளடக்கிய தேர்ச்சி மட்டங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. பகுத்தறிவுடனும் தர்க்கரீதியிலும் சமநிலையான மனதுடனும் கலைப் படைப்புக்களை மதிப்பிடுவதற்கும் நயப்பதற்கும் அதனூடாகக் கிடைக்கும் அறிவைச் சுய படைப்பாக்கத் துக்கு அடிப்படையாகக் கொள்வதற்கும் தேவையான கற்பனா சக்தியை மேம்படுத்துவதற்கும் கலை வரலாற்றுக்கும் நயப்புக்கும் உரிய தேர்ச்சிகளையும் தேர்ச்சி மட்டங்களையும் கற்பதனூடாகச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

அந்தந்தத் தேர்ச்சிக்கும் தேர்ச்சி மட்டங்களுக்குமுரிய கற்றற் பேறு களும் பாடத்திட்டத்தில் அடக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் பாடம் தொடர்பாக மாணவர் அடைய வேண்டிய அடைவுமட்டங்களை முன்கூட்டியே விளங்கிக் கொள்ள ஆசிரியருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். கற்றற் பேறுகள் குறித்துக் கவனஞ் செலுத்துதலானது, கற்றல் - கற்பித்தற் செயன்முறையைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் முறைமையான வகையில் கணிப்பீடு - மதிப்பீட்டுச் சென்முறையை நடைமுறைப்படுத்து வதற்கும் துணையாக அமையும்.

அந்தந்தத் தேர்ச்சியின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள பாடவிடய உள்ளடக்கம் ஒழுங்காக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. கலை வரலாற் றுக்கும் நயப்புக்குமுரிய பாடவிடய உள்ளடக்கத்தை வரிசைப்

DRAFT

படுத்துகையில், தேர்ச்சிகளுக்கும் தேர்ச்சிமட்டங்களுக்கு அமையலான பாடவிடயங்களை மாத்திரம் தெரிவு செய்வதில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இந்திய ஐரோப்பிய கலை வரலாற்றிலிருந்து தெரிவு செய்த விடய உள்ளடக்கத்தைக் கொண்டு, சித்திரக்கலையின் வெவ்வேறு திசைமுகங்கள் பற்றிக் கற்கச் சந்தர்ப்பமளிக்கப்பட்டுள்ளது.

மாணவர், இப்பாடத்திட்டத்தைப் பயிலுவதனால் சித்திரக்கலையின் பல்வேறு பாடப்பரப்புக்கள் தொடர்பான அடிப்படையான விளக்கமும் இனிவரும் கற்கைக் கருமங்களுக்குரிய சரியான வழிகாட்டலும் கிடைக்கும். மேலும் தனியாளின் வாழ்க்கைக்குத் தேவையான அழகியல் நயப்புத் தொடர்பான சரியான விளக்கத்தையும் வாழ்க்கையின் பல்வேறு சவால்களின் முன்னிலையில் தெளிவான நலிமையாக்கத்தக்க முடிவுகள் தீர்மானங்களை ஆக்கியல் அணுகு முறைகளின் கீழ் பெறுவதற்கும் தேவையான உள ஆயத்தத்தை ஏற்படுத்துவதற்கும் துணையாகும். நவீன வேலை உலகுக்கு இன்றியமையாத செயன்முறைத்திறன்கள் மற்றும் அவற்றின் வெவ்வேறு பரிமாணங்கள் தொடர்பாக மாணவர்க்கு அறிவூட்டம் செய்வதால் எதிர்கால அறைகூவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும். எதிர்கால உலகின் பொறுப்பாளர்களான நிகழ்கால பாடசாலை மாணவர்கள் நல்ல நடத்தைகளைக் கொண்ட ஆக்கியல்மிக்க பிரசைகளாகச் சமூகப்படுத்தல் எனும் இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக இப்பாடத்திட்டம் ஆசிரியருக்குப் பேருதவியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

DRAFT

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

DRAFT

## 3.0 அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

DRAFT

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.



DRAFT

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்வயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## 4.0 சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள்

1. **சூழலைத் துணையாகக் கொண்டு இரசிப்புத் திறனை விருத்தி செய்தல்** - சூழலில் இடம்பெறும் எல்லாத் தோற்றப்பாடுகளும் மனித வாழ்க்கையுடன் தொடர்புடையவை. இயற்கையின் அழகும் எழிலும் சந்தமும் தனியாளிடத்தே ஏற்படுத்தும் களிப்பூட்டும், அனுபவங்கள், கலைப்படைப்புக்களை உருவாக்குவதற்குத் தேவையான கற்பனா சக்தியை மலரச் செய்யும். எனவே இயற்கையின் அழகியல் அனுபவங்கள் மற்றும் பெறுமானங்களை ஆக்கியல் அணுகுமுறைகளின் வழியே மாணவர்கள் அடையச் செய்து அவர்களது இரசனைத்திறனை வளர்ப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

2. **ஆக்கியற் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்** - போட்டாபோட்டியான வாழ்க்கையின் போது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் சவால்களின் முன்னிலையில், சளைக்காது, ஆக்கியல் தீர்வுகள் மற்றும் அணுகுமுறைகளை எட்டுவதற்குத் தேவையான சிந்தனா சக்தியை வளர்த்தலும் கலையுடன் தொடர்புடைய தனியாளின் எதிர்பார்ப்புக்களையும் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்வதற்காக ஆக்கியல் ரீதியான கலைப்படைப்புக்களை ஆக்குவதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்வதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

3. **வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.** - வினைத்திறன், பரஸ்பர நட்புணர்வு, ஒருவரையொருவர் மதித்துச் செயற்படு தன்மை போன்றவை வினைதிறனான வாழ்கையில் தெள்ளத் தெளிவான அம்ச்ங்களாகும். அதுமட்டுமன்றி, கலைத்துவப் பரிமாணங்களின் வழியே தமது மனப்பாங்குகளைம் திறன்களையும் வளர்த்துக் கொள்ளலானது வாழ்க்கையின் செழுமை மீது பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். அதற்கான வழிகாட்டலை வழங்குவதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

4. **சுதேச மற்றும் வெளிநாட்டுக் கலைகளின் தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும்** - சுதேச மற்றும் வெளிநாட்டுச் சித்திரக்கலைத்துறைகள்பற்றிப் பயிலுவதற்கும் அதன் வழியே பெறும் தேர்ச்சிகளை, சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்வதற்கும் சுதேச பண்பாட்டுப் பல்வகைமையை இனங்காண்பதற்கும் உலகக் கலைப்படைப்புக்கள் குறித்துப் பயின்று தமது கலைத்துவ அறிவை விருத்தி செய்து கொள்வதற்கும் தேவையான பாடத்தோடிணைந்த தேர்ச்சிகளை அடைய வகை செய்வதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

5. **திறனாய்வு ஆற்றலை வளர்த்தல்.** - பல்வகை ஊடகங்களின் வழியே எதிர்ப்படும் சித்திரக் கலையுடன் தொடர்புடைய, தரமிக்க உயரிய பெறுமானமுள்ள ஆக்கங்களைத் தெரிவு செய்துகாள்வதற்கும் அவற்றை திறனாய்வு பூர்வமாக இரசிப்பதற்கும் தேவையான திறன்களை வளர்த்தலே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

6. **எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.** - எதிர்கால வேலையுலகு சவால்மிக்கது. தெளிவான, ஆக்கியல்புகளை உள்ளத்துடன் சமனிலையாக வெற்றி கொள்ளலாம். கலைத்துவச் சிந்தனையுடன், தமது எதிர்கால இலக்குகளை சளைக்காது எதிர்கொள்ளக்கூடிய சமனிலையான ஆளுமையைக் கொண்ட எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே இக்குறிக்கோளின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

DRAFT

## 5.0 தேசிய இலக்குகள் மற்றும் சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்களுக்கிடையிலான தொடர்பு

| சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள் | தேசிய இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | i | ii | iii | iv | v | vi | vii | viii |
| 1. சூழலைத் துணையாகக் கொண்டு இரசிப்புத் திறனை விருத்தி செய்தல் | | | ✓ | ✓ | ✓ | | | |
| 2. ஆக்கியற் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல் | | | ✓ | | ✓ | | | |
| 3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல். | | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ |
| 4. சுதேச மற்றும் வெளிநாட்டு கலைகளின் தனித்துவத்தை இனங்காணலும் மதித்தலும். | ✓ | ✓ | | | | | | ✓ |
| 5. திறனாய்வு ஆற்றலை வளர்த்தல். | | | | | ✓ | | ✓ | |
| 6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்க வாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல். | | ✓ | | | ✓ | | ✓ | |

DRAFT

**6.0 தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், பாட உள்ளடக்கம், கற்றற்பேறுகள், பாடவேளைகள்**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **1.0 சுற்றாடல் சார்ந்த கருப் பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.** | 1.1 இரேகைகளைப் பயன்படுத்தி மனிதர், விலங்குகளின் உருவங்களை வரைவார். | • இரேகைக் கற்றல்<br>– மனித உடல்நிலைகள்<br>– விலங்குகளின் உடல் நிலைகள்<br>• வர்ணப் பயன்பாடு | • மனிதர், விலங்குகளில் வடிவங்களின் இயல்பையும் தன்மையையும் சிறப்பாக அவதானித்து, இரேகை, வர்ணத்தைப் பயன்படுத்தி பருமட்டான வரைபடத்தை வரைவார். | 50 |
| | 1.2 ஓவிய ஒருங்கிணைப்பின் யதார்த்தங்களைக் கொண்டு இயற்கை, செயற்கைச் சூழலை ஓவியமாக வரைவார் | • மனிதர், விலங்கு, உருவங்கள்<br>• தாவரங்கள்<br>• செயற்கைப் பொருட்கள்<br>• உணர்வு வெளிப்பாடு<br>• பல்வேறு சமூக நிகழ்வுகள் | • தெரிவுசெய்த தலைப்புகளுக்குரிய பரும்படி படங்களை வரைவார்.<br>• இயல்பான தன்மையுடனும் மோடிப்படுத்தப்பட்ட வடிவிலும் இயற்கை, செயற்கை சூழல் சார்ந்த தொனிப்பொருள்களில் ஓவியங்களை ஒழுங்கமைப்பார். | |
| | 1.3 மோடிப்படுத்தப்பட்ட இயல்புகளை உபயோகித்து இயற்கை, செயற்கைச் சூழலை ஓவியமாக வரைவார் | • ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளின் பயன்பாடு<br>– சித்திரம் ஒழுங்குபடுத்தல்<br>– தூர நோக்கு<br>– அளவு, பிரமாணம்<br>– முப்பரிமாண இயல்பு<br>– சமநிலை | • ஓவிய ஒழுங்கமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளைச் சரியான முறையில் பயன்படுத்துவார்.<br>• பல்வேறு வர்ண ஊடகங்களின் நுட்ப முறைகளைச் சரியான முறையில் பயன் | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பல்வேறு வர்ண ஊடகமும் நுட்ப முறைகளும்<br>– கொலாஜ்<br>– போஸ்ரர் வர்ணம்<br>– நீர் வர்ணம் (நீர்முறை, தடிப்பு முறை)<br>– பஸ்ரல்<br>– அக்ரலிக்<br>– பல்வேறு கலைப் பாணி<br>– கலைத்துவ இயல்பு | படுத்தும் ஆக்கத்திறன் களை வெளிப்படுத்துவார்.<br>• இயல்பான தன்மையுடனும் மோடிப்படுத்தப்பட்ட தன்மை யுடனும் ஓவியங்களை ஒழுங்க மைக்கும் போது தனக்கே உரித்தான கலைத் திறன் பண்பைப் பின்பற்று வார்.<br>• சுற்றாடலின் அழகியல் குணஇயல்புகளை தமது நிர்மாணிப்பின் பொருட்டு இணைத்துக் கொள்வார்.<br>• நிர்மாணிப்புக்களில் ஈடுபட்டு பெறும் அனுபவத்தின் மூலம் மனித நேய குண இயல்புகளை வெளிப்படுத் துவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **2.0 சூழலில் காணப்படும் பொருள்களை கூட்டாக ஒருங்கிணைத்துச் ஓவியமாக வரைவார்.** | 2.1 பல்வேறு இயற்கைச் செயற்கைப் பொருட்களை, வெவ்வேறாகக் கற்றறிந்து பருமட்டான படங்களை வரைவார். | • இரேகைக் கற்றல்<br>• இயற்கை, செயற்கைப் பொருட்கள்<br>– பல்வேறு கேத்திர கணித வடிவமுடைய பொருட்கள்<br>– தாவரப் பகுதிகள்<br>• பல்வேறுபட்ட இரேகைகள்<br>• முப்பரிமாண இயல்பு, ஒளி, நிழல்<br>• பல்வேறுபட்ட வர்ண ஊடகப் பயன்பாடு | • சிறப்பாக அவதானித்து பொருட்களைக் கற்று பரும் படிப்படங்கள் வரைவார்.<br>• பல்வேறு தன்மை கொண்ட இரேகைகளைப் பயன் படுத்திப் பொருட்கள், தாவரப் பகுதிகளின் முப்பரிமாண இயல்பைக் கற்பார்.<br>• உரிய கோட்பாடு, அடிப் படைத் தத்துவங்களைப் பின்பற்றி தளத்திற்குப் பொருத்தமான வகையில் பொருட் கூட்டத்தை இரேகை மூலம் வரைவார். | 40 |
| | 2.2 இயற்கை, செயற்கைப் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியமாக வரைவார். | • தளப்பயன்பாடு<br>• கண்மட்டம்<br>• ஒழுங்கமைத்தலின் அடிப்படைக் கோட்பாடுகள்<br>– அளவுப் பிரமாணம்<br>– தூர நோக்கு<br>– முப்பரிமான இயல்பு, ஒளி, நிழல்<br>– சமநிலை | • பல்வேறுபட்ட வர்ண ஊடகங்களுக்கு உரிய நுட்ப முறைகளை, உரிய முறையில் பயன்படுத்தி பொருட்களின் முப்பரிமாண இயல்பு, ஒளி நிழல், மேற்பரப்புத்தன்மை வெளிப் படும் வகையில் வர்ணம் தீட்டுவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • மேற்பரப்புத்தன்மை<br>• வர்ணப் பயன்பாடும் நுட்ப முறையும்<br>– நீர்வர்ணம்<br>– பஸ்ரல்<br>– அக்றலிக்<br>– கலப்பு ஊடகம்<br>• கலைத்துவ இயல்பு | • பொருட் கூட்ட ஒழுங்கமைப்பிற்குப் பொருத்தமாக பின்னணியை வர்ணம் தீட்டுவார்.<br>• சித்திர ஒழுங்கமைப்பில் சுய கலைத்துவப் பண்பின் திறனை வெளிப்படுத்துவார். | |
| **3.0 பயன்பாட்டுத் தேவைகளுக்கான அலங்கார நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார்.** | 3.1 ஆபரணங்களை நிர்மாணிப்பார். | • பயன்பாடு/ அன்றாட பாவனைத் தேவைகள்<br>• சுற்றாடலைக் கற்றல்<br>– பல்வேறுபட்ட வடிவங்கள்<br>– கோலங்கள்<br>• திட்டமிடுகின்ற எண்ணக் கருக்கள்<br>• ஆபரணங்கள் தொடர்பாகக் கற்றல்<br>– பெண்கள், ஆண்களுக்கான ஆபரணங்கள்<br>– வரலாற்றுத் தகவல்கள்<br>– தற்காலப் போக்கு (Trend) | • நவ நாகரீக ஆபரணம் பற்றிய பல்வகையான தகவல்களைச் சேகரித்தல்.<br>• ஆபரண நிர்மாணிப்பின் பொருட்டுச் சுற்றாடலைக் கற்று புதிய திட்டமிடல் எண்ணக்கருக்களை நிர்மாணிப்பார்.<br>• ஊடகம் தொடர்பில் அவதானத்தைச் செலுத்திய நாகரீக ஆபரண நிர்மாணிப்பின் பொருட்டு பரும்படி படங்களையும் திட்டமைப்புப் | 40 |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • அத்துறை பற்றிக்கற்றல்<br>– ஆபரண உற்பத்தி<br>– நிறுவனம்<br>– ஆபரண விற்பனை நிலையங்கள்<br>• திட்டமிடல்<br>• திட்டமிடலின் அடிப்படைத் தத்துவங்கள்<br>– சந்தம்/ இலயம்<br>– சமநிலை<br>– ஒத்திசைவு<br>– ஒருமைப்பாடு<br>• திட்டமிடப்பட்ட வரைபடம்<br>• முப்பரிமாண வரைபடம்<br>• மாதிரி வடிவமைப்பு<br>• பல்வேறு ஊடகப் பயன்பாடு<br>• வர்ணம், நுட்ப முறை என்பவற்றின் உபயோகம்<br>• பூரணப்பாடு<br>• ஆய்வறிக்கைகள்/ அறிக்கைகள் தயாரித்தல் | படங்களையும் வரைவார்.<br>• உரிய நுட்ப முறைகளைப் பின்பற்றி ஆபரணங்களை நிர்மாணிப்பார்.<br>• நிர்மாணிப்பின் தரம் மேலும் அதிகரிக்கும் வகையில், பொருட்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தும் திறமைகளை வெளிப்படுத்துவார்.<br>• கற்றல் தொடர்பாக முறையாகத் தகவல்களைத் திரட்டி, அறிக்கையைத் தயாரிப்பார்.<br>• விருத்தியுடன் கூடிய கருத்துக்களை முன்வைத்து நிருமாணிப்புக்களை மதிப்பிடுவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.2 ஆடைகளுக்கான புதிய நாகரீக வடிவங்களை நிர்மாணிப்பார். | • பயன்பாட்டு/ அன்றாட பாவனைத் தேவைகள்<br>• பல்வேறு பண்பாடுகளுக் கேற்ற நவ நாகரீக உடை<br>• பல்வேறு விழாக்களுக்குப் பயன்படுத்தும் நவ நாகரீக உடை<br>• ஆடை வடிவமைப்பு<br>– பெண்<br>– ஆண்<br>• பல்வேறு உடல்நிலைகளைக் கொண்ட நவ நாகரீக வண்ணம் கொண்ட உருவங்கள்<br>• திட்டமைப்பின் அடிப்படைத் தத்துவம்<br>– சந்தம்/ இலயம்<br>– சமநிலை<br>– ஒத்திசைவு<br>– ஒருமைப்பாடு<br>• திட்டமிடப்பட்ட வரைபடம்<br>• நவீன படைப்புக்கள்<br>• வர்ண ஊடகப் பயன்பாடு | • பல்வேறு பண்பாடு களுக் கும் விழாக்களுக்கும் பயன் படுத்தும் ஆடைகளுக்கான நவ நாகரீக வடிவ மைப்புத் தொடர்பான தகவல்களை ஆராய்வார்.<br>• பல்வேறுபட்ட உடல்நிலை களைக் கொண்ட பெண் கள், ஆண்களுக்கான நவ நாகரீக உருவங்களை வரையும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.<br>• திட்டமிடலின் அடிப்படைத் தத்துவத்துவங்களை பின்பற்றி பெண், ஆண் இரு பாலாருக்குமான நவ நாகரிகமான ஆடை அலங் கரிப்புக்களை திட்டமிட்டு வரைவார்.<br>• நவ நாகரிக நிர்மாணிப்புக ளுக்கான சந்தர்ப்பம், துணி வகை, வர்ணங்கள், அலங் கார வேலைப்பாடுகள், பால்வகை மீது கவனம் செலுத்துவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – நீர் வர்ணம் (தடிப்பான, திரவத்தன்மையான)<br>– கலப்பூடகம்<br>• மேற்புரத்தன்மை/ இழையமைப்பு<br>• நுட்ப முறைகள்<br>• பூரணத்துவம் | • வர்ணம் தீட்டும் நுட்ப முறைகளைப் பின்பற்றி சுயமான கலைப்பாணி திறமைகளுடன் திட்டமிட்ட சித்திரத்தை வர்ணம் தீட்டு வார்.<br>• நிர்மாணச் செயற்பாடொன்று தொடர்பாக முறையாகக் குறிப்பெடுத்து வைத்து அறிக்கையைத் தயாரித்துக் கொள்வார். | |
| | 3.3 பல்வேறுபட்ட தேவைகளின் பொருட்டு அலங்காரச் சித்திரங்களை நிர்மாணிப் பார். | • பாவனை/ அன்றாட பயன் பாட்டுத் தேவை<br>• பல்வேறுபட்ட அலங்கரிப்பு முறைகள்<br>– பரவுருவ அலங்கரிப்பு<br>– முழுத்தள அலங்கரிப்பு<br>– கரை அலங்கரிப்பு<br>• கைத்தொழிலுக்குப் பொருத்தமுடையதாக<br>• பரும்படிப் படங்கள்<br>• பல்வேறுபட்ட வடிவங்கள்<br>• அலங்கார அலகுகள்<br>• மீண்டும், மீண்டும் இடுதல் | • பல்வேறுபட்ட அலங்கரிப்புக் களின் இயல்புகளை உதா ரணங்களுடன் விளக்கு வார்.<br>• உரிய அடிப்படை அங்கங் கள் கோட்பாடுகளைப் பின் பற்றி அலங்கரிப்பு நிர் மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• பாவனைத் தேவைக்கும் கைத்தொழிலுக்கும் பொருந்தும் வகையில் கவனம் செலுத்தி ஆக்கச் சிறப்புடைய அலங்கரிப்புக் களை வரைவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • கோலங்கள்<br>• அளவு<br>• திட்டமிடலின் அடிப்படைக் கோட்பாடுகள்<br>– சந்தம்<br>– சமநிலை<br>– ஒத்திசைவு<br>– ஒருமைப்பாடு<br>• நவீன நிருமாணிப்புகள்<br>• வர்ணப் பயன்பாடு<br>• நுட்ப முறைகள்<br>• பூரணப்பாடு | • பொருத்தமான வர்ணங்களையும் நுட்பமுறைகளையும் உபயோகித்து அலங்கரிப்புகளை வர்ணம் தீட்டுவார்.<br>• கவனத்துடனும் சுத்தமாகவும் பொறுமையுடனும் செயலொன்றைப் பூர்த்தி செய்வார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| **4.0 உற்பத்தி மற்றும் சேவைத் தேவைக்கான கிரபிக் ஆக்கங்களைப் படைப்பார்.** | 4.1 பரவலான தொனிப்பொருள் களுக்கமைய சுவரொட்டி களை நிமாணிப்பார். | • தேவை<br>• திட்டமிடல்<br>• தளத்தையும் தளப்பரப்பை யும் பயன்படுத்தல்<br>• அச்சுப் பதிப்பதற்குப் பொருந்துதல்.<br>• தொடர்பாடல்<br>• ஆக்கச் சிறப்புடைய எழுத்துக்கள்<br>• குறியீடுகளும் மாதிரி ஓவியங்களும்<br>• வர்ண, நுட்பமுறைப் பயன்பாடு | • தெரிவு செய்யப்பட்ட தொனிப்பொருளின் கருத்து வெளிப்படும் வகையில் பொருத்தமான குறியீடு களையும் உருவங்க ளையும் உபயோகித்து சுவரொட்டிகளை நிர்மா ணிக்க உகந்த பரும்படி யான வரைபடங்களை வரைவார்<br>• தளம், தளப்பரப்பு தொடர் பான விளக்கத்துடன் குறி யீடுகளும் உருவங்களும் எழுத்துகளும் பொருந்தும் வகையில் தளத்தில் நிலை நிறுத்தி சுவரொட்டிகளைத் திட்டமிடுவார்.<br>• தொனிப்பொருளுக்குப் பொருத்தமான எழுத்துக் களையும் மற்றும் திட்ட மைப்புக்குப் பொருந்தும் எழுத்துருக்களின் அளவை யும் கருதி எழுத்துக்களை சுவரொட்டிகளில் வரைவார். | 40 |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • தொடர் பாடலுக் குரிய கருத்து வெளிப்படும் வகையில் வர்ணங்களைத் தெரிவு செய்வார்<br>• சுவரொட்டிச் சித்திர நிருமாணிப்பிற்கு பொருத்தமான வர்ண ஊடகம் மற்றும் நுட்பமுறைகளைப் பயன் படுத்தும் திறனை வெளிப் படுத்துவார். | |
| | 4.2 பலவித உற்பத்திகளையும் சேகைளையும் விளம்பரப் படுத்த கிரபிக் நிர்மாணிப்புகளைச் செய்வார். | • வணிகத் தேவை<br>• தொடர்பாடல்<br>• இரேகைகளினதும் தளவுருவங்களினதும் உபயோகம்<br>• வர்ணங்களும் நுட்பமுறைகளும்<br>• எழுத்தமைப்பு<br>– அடிப்படை வடிவம்<br>– எழுத்துக் கோலம்<br>– எழுத்தின் பிரமாணம்<br>• பல்வேறு கிரபிக் நிர்மாணம்<br>– (லேபிள்) முகப்புறைகள்<br>– பொதியுறை, கொள் கலன்கள்<br>– இலச்சினைகள் | • கிரபிக் நிருமாணிப்பில் வணிகத் தேவைகளுக்குப் பொருத்தமான உருவம், வடிவங்களைப் பயன்படுத்தி பரும்படியான வரைபடங்களை வரைவார்.<br>• பொருத்தமான எழுத்தமைப்பு, அளவுப்பிரமாணம், என்பன உருவங்களுடன் பொருந்தும் படியாக தளத்தையும் இடைவெளியையும் திட்டமிட்டுக் கொள்வார்.<br>• உற்பத்தி மற்றும் சேவைகளின் பிரச்சாரம் மிக முனைப்பா கும் வகையில் வர்ணத்தையும் நுட்பத்தையும் பயன்படுத்துவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | – விளம்பரங்கள்<br>– வாழ்த்திதழ்கள் | • நிர்மாணிப்பைத் திட்டமிடும் போது கேத்திர கணித உப கரணங்களைப் பிழையின்றி கையாளுவார்.<br>• பல்வேறு கிரபிக் நிர்மா ணிப்புக்களில் தொடர்பாடல் கருத்திற்கமைய, தேவை யை இனங்கண்டு கொண்டு நிர்மாணிப்பில் ஈடுபடுவார். | |
| | 4.3 பாடல், கவிதை, புதுக்கவிதை, நாவல்கள், சிறுகதை புத்த கங்களின் உட்பக்கங்களுக் குப் பொருத்தமான விளக்கப் படங்களை வரைவார். | • பாடல், கவிதை, புதுக் கவிதை<br>• நாவல்கள், சிறுகதைகளில் தெரிந்தெடுத்த சந்தர்ப்பங்கள்<br>• பரும்படி படங்கள்<br>• வேறுபட்ட கலைப்பாணிகள்<br>• இரேகைகள்<br>• வடிவங்கள்<br>• வர்ணப் பயன்பாடும் நுட்ப முறைகளும்<br>• தொடர்பாடல் தன்மை<br>• உள்ளடக்கத்திற்குப் பொருந் தும் தன்மை<br>• அச்சுப்பதித்தலுக்கு ஏற்ற அளவுப் பிரமாணம்<br>• கலைத்துவப் பண்பு | • உள்ளடக்கம், பரிமாணம் பற்றிய அவதானத்துடன் இரேகை, வடிவங்களைக் கையாண்டு பருமட்டான வரைபடத்தை வரைவார்.<br>• தெரிந்தெடுத்த உள்ளடக் கத்திற்குப் பொருத்தமாக பல்வேறு பாணியைப் பின் பற்றிக் கதைக்காட்சி விளக்க சித்திரத்தை நிர்மாணிப்பார்.<br>• வர்ணம், நுட்ப முறையைப் பயன்படுத்தி கதைக் காட்சி விளக்கச் சித்திரத்தை வர்ணம் தீட்டுவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.4 தெரிவு செய்யப்பட்ட கணினியின் மென்பொருள்களை உபயோகித்துக் கிரபிக் நிர்மாணப்புகளைச் செய்வார். | • கனிணி மென்பொருள்<br>– Gimshop<br>– Inkscape<br>– Photoshop<br>– Illustrator<br>– Paint<br>– Powerpoint<br>• பல்வேறுபட்ட கிரபிக் நிர்மாணங்கள்<br>– சுவரொட்டிகள்<br>– இலச்சினைகள்<br>– வாழ்த்திதழ்களும் அழைப்பிதழ்களும்<br>– பெயர்ப்பலகைகள்<br>– புத்தக அட்டைகள்<br>• வியாபாரத் தேவை<br>• கட்புலனான உருவங்கள்<br>• எழுத்துகள்<br>• வர்ணங்கள்<br>• தொடர்பாடல் கருத்து<br>• அச்சிடுதலுக்கு பொருந்தும் தன்மை | • சுயமான கலைத்துவப் பண்புகளை நிர்மாணிப்புச் செயற்பாட்டின் பொழுது உயர்மட்டத்தில் பயன்படுத்துவார்.<br>• கிரபிக் நிர்மாணிப்பிற்கு ஏற்ற கனிணி மென்பொருளைச் செயல்படுத்தும் திறமையை வெளிப்படுத்துவார்.<br>• வியாபாரத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் கிரபிக் நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.<br>• அச்சிடுதல் தொடர்பான அறிவாற்றலுடன் கணினி கிரபிக் நிர்மாணிப்பைத் திட்டமிடுவார்.<br>• கணினி தொழில் நுட்பமுறை மற்றும் சுய கலைத் திறன் எனும் ஆற்றல்களுடன் கிரபிக் நிர்மாணிப்புத் திறமையை வெளிப்படுத்துவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **5.0 பல்வேறு ஊடகங் களைப் பயன்படுத்தி சிற்பங்களை செதுக்கல் வேலைப் பாடுகளை ஆக்குவார்.** | 5.1 களிமண் ஊடகத்தைப் பயன் படுத்தி மனித வடிவங்களை ஒழுங்கமைத்து சிறப மொன்றை நிர்மாணிப்பார். | • பரும்படிப் படங்கள்<br>• அப்புதல் நுட்ப முறைக்குப் பொருத்தமான திட்டமைப்பு<br>• ஊடகப் பயன்பாடு<br>– களிமண்<br>• நுட்பமுறைகளும் உபகரண ங்களின் பயன்பாடும்<br>• கலைத்துவ இயல்புகள்<br>• மேற்பரப்புத்தன்மை/ இழையமைப்பு<br>• ஒழுங்கமைப்பு<br>• ஆக்கச் சிறப்புடைய தன்மை | • அப்புதல் நுட்ப முறை பற்றிய விளக்கத்துடன் சிற்பம் ஒன்றை நிர்மாணிக் கப் பருமட்ட வரைபடங் களை வரைவார்.<br>• ஆக்கச் சிறப்புடன் வடிவ ங்களை ஒழுங்கமைப்பார்.<br>• ஊடகத்தைத் தயார் செய்ய வும் கையாளவும் சரியான முறைகளைப் பயன்படுத்து வார்.<br>• அப்புதல் நுட்ப முறைக்கு ஏற்ப நிர்மாணிப்பில் ஈடு படுவார்.<br>• ஒழுங்கமைத்தலுக்கும் வெளிப்பாட்டிற்கும் ஏற்ப மேற்பரப்புத் தன்மையை அமைத்துக் காட்டுவார்.<br>• உபகரணங்களைக் கையாளும் நுட்பத் திறன் களை வெளிப்படுத்துவார்.<br>• திட்டமிடலுக்கு ஏற்ப ஒழுங் குமுறையில் செயற்பாட்டில் ஈடுபடுவர். | 20 |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.2 கலப்பு ஊடகங்களைப் பயன் படுத்தி தாவரம், விலங்கு உருவங்களை ஒன்றிணைத்துச் சிற்பம் ஒன்றை நிர்மாணிப்பார். | • பரும்படிப் படங்கள்<br>• தாவரம், விலங்குகளின் வடிவங்கள்<br>• நுட்ப முறைக்குப் பொருத் தமான திட்டமைவு<br>• கலப்பூடகப் பயன்பாடு<br>• பல்வேறுபட்ட நுட்ப முறைகளின் உபயோகம்<br>• முப்பரிமாண இயல்பு<br>• கலைத்துவ இயல்புகள்<br>• வர்ணப்பயன்பாடு<br>• ஒழுங்கமைப்பு<br>• ஆக்கச் சிறப்புடைய தன்மை | • கலப்பூடகத்தைப் பயன் படுத்தி சிலை ஒன்றை நிர் மாணிப்பதற்கு பருமட்டான வரைபடங்களை வரைவார்.<br>• ஊடகங்களின் தனித்துவ இயல்புகளுக்கு ஏற்ப பொருத்தமான நுட்ப முறை களைப் பயன்படுத்துவார்.<br>• பொருத்தமான வர்ணத்தை யும் வர்ணம் தீட்டும் நுட்ப முறைகளையும் பயன் படுத்தி முப்பரிமாண இயல்புகளுடன் வர்ணம் தீட்டுவார்.<br>• உபகரணப் பயன்பாடு, தொழில் நுட்ப அறிவு தொடர்பான திறன்களை வெளிப்படுத்துவார்.<br>• ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை மன அடக்கத்துடன் பாதுகாப்பாக நிர்மாண செயற்பாட்டில் ஈடுபடுவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **6.0 சமய, பண்பாட்டு அம்சங்கள் உண்ணாட்டு வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப் படைப்புகள் சமகாலக் கட்புலக் கலைப் படைப்புகள் மற்றும் பொதுசன தொடர் பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.** | 6.1 இலங்கையில் 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களின் நிர்மாணிப்புக்களைக் கற்றறிவார். | • ஹரி பீரிஸ்<br>– ஜைன பவனம்<br>– இந்திராணி - பிரதிமை ஓவியம்<br>• ஐவன்பீரிஸ்<br>– திரும்பி வருதல் (The Return)<br>– கல்கிசை (Mount Lavinia)<br>• ஜஸ்ரின் தெரணியகல<br>– தங்க மீனும் பெண் பிள்ளையும்<br>– கண்ணாடியின் முன்னால் பெண்<br>• ரிச்சட் கேப்ரியல்<br>– ஞானமுள்ள, ஞானமற்ற கன்னியர்கள்<br>– வயல்<br>• டபிள்யூ.ஜே.ஜீ.பீலிங்<br>– ஐஸ்கிறீம் வண்டி<br>– அசையாப் பொருள் கூட்டம்<br>• ஜோஜ் கீட்<br>– இயமனை தோற்கடித்தல் (கோதமி விகாரை)<br>– பீமனும் ஜரசந்தனும்<br>• எல்.ரி.பீ. மஞ்சுஸ்ரீ | • இலங்கை கட்புலக் கலையின் நவீனத்துவ ஆரம்ப கலைஞர்கள் உருவாவதற்கு அடிப்படையாக அமைந்த பின்னணியையும் அவர்களது பொதுக் குறிக்கோள்களையும் விளக்குவார்.<br>• 43ம் குழுக் கலைஞர்களின் நிர்மாணிப்புகளும் அவற்றில் செல்வாக்குச் செலுத்தியுள்ள கீழைத்தேச, மேலைத்தேச கலைப் பண்புகளையும் இனங்கண்டு விமர்சித்து இரசனையில் ஈடுபடுவார்.<br>• 43ம் குழுவை சேர்ந்த கலைஞர்கள் இலங்கையின் கட்புலக் கலைக்கு ஏற்படுத்திய தாக்கத்தை விளக்குவார். | 40 |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.2 இலங்கையில் சமகால ஓவியச் சிற்பக் கலைஞர்களின் ஆக்கங்களைக் கற்றறிவார். | – பத்தினி தேவாலயம்<br>– பெண் உருவம்<br>• எஸ்.ஆர். கனகசபை<br>– Black out<br>– பிரதி வடிவம்<br><br>• ஸ்டென்லி அபேசிங்க<br>– கடற் கன்னியின் நடனம்<br>– இளமையும் குழந்தைப் பருவமும்<br>• ஏ. மார்க்<br>– பெயரிடப்படாத சிற்பம்<br>– மனிதனும் நாய்களும்<br>• திஸ்ஸ றணசிங்க<br>– கடினச் செயல் - சிற்பம் (துஸ்கர கிரியாவ)<br>– மகீஷாசுரச் சிலை (Buffalo Demon's End)<br>• எச்.ஏ. கருணாரட்ன<br>– வாழ்க்கையின் அரவணைப்பு<br>– பெயரிடப்படாத சிற்பம் Untitle | • 20ம் நூற்றாண்டின் இலங்கை கட்புலக் கலையில் நவீனத்துவ அரூப வாத ஓவிய, சிற்பக் கலையின் அணுகுமுறைகள் பற்றி விளக்குவார்.<br>• இலங்கைக் கட்புல கலையின் மரபுரீதியான ஊடகங்கள், நுட்ப முறை மற்றும் நிர்மாணிப்பு முறை உபயோகத்தின் மாற்றத்தை விளக்குவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.3 இந்திய கலைஞர்களுடைய ஆக்கங்களைக் கற்றறிவார். | • ஜெமினி றோய்<br>– தாயும் சேயும்<br>– பூனையும் சிங்கறாலும்<br>• அம்ரிதா ஷர்கில்<br>– மூன்று பெண் பிள்ளைகள்<br>– கிராமத்து மணப் பெண்கள் | • இந்திய நவீனத்துவக் கலையின் புதிய போக்குகள் பற்றி விளக்குவார்.<br>• இந்திய கட்புலக் கலை வரலாற்றில் பெண் கலைஞர்களின் பங்களிப்பு பற்றித் தெரிந்தெடுத்த பெண் கலைஞர்களின் ஊடாக விளக்குவார். | |
| | 6.4 ஐரோப்பிய மீயதார்த்தவாதக் கலைகளின் நிர்மாணிப்புக் களைக் கற்றறிவார் | • சல்வடோர் டாலி (Salvador Dali)<br>– (The Presistence of Memory) நீடித்த நினைவு<br>– உறக்கம் (Sleep)<br>• ப்ரீடா காலோ<br>– சுய பிரதிமை ஓவியம் (முள்மாலை)<br>– ப்ரீடா இருவர் | • மீயதார்த்தவாதக் கலைகளின் இயல்புகளும் அதற்கு அடிப்படையாக அமைந்த எண்ணக்கருக்களையும் தத்துவங்களையும் விளக்குவார்.<br>• தெரிந்தெடுத்த மீயதார்த்தவாதக்கலை ஆக்கங்களின் தொகுப்பொன்றை அவை உபயோகித்துள்ள எண்ணக்கருக்களின் அடிப்படையில் பகுத்தாய்ந்து மதிப்பிடுவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.5 அரூப வாதக் கலைஞர்களது நிர்மாணிப்புகளைக் கற்றறி வார். | • வசிலி கன்திஸ்கி (Wassily Kandinsky)<br>– Composition - VII<br>– Accented corners No. 247 (1923)<br>• பியே மொன்றியன்<br>– Lozenge Composition with yellow, black, red and gray<br>– Compasition II in red, blue and yellow | • அருபவாத கலையின் இயல்புகளும் அவை நவீனத்துவ கலை மாற்றத் திற்கு ஏற்படுத்திய பங் களிப்பையும் விமர்ச்சிப்பார்.<br>• அருபவாத கலை நிர்மா ணங்களை விமர்சன ரீதியில் நயப்பார். | |
| | 6.6 ஐரோப்பிய சிற்பக் கலை ஞர்களின் நிர்மாணிப்புக் களைக் கற்றறிவார். | • ஒகஸ்தே ரொடின் (Auguste Rodin)<br>– சிந்தனையாளர் (The Thinker)<br>– 'கலேஸ்' நகர குடிமக்கள் (The Burghers of calais)<br>• ஹென்ரி மூர் (Henry Moore)<br>– சாய்ந்திருக்கும் உருவம் (Reclining figure)<br>– அரச குடும்பம் (King and Queen) | • ஐரோப்பிய சிற்ப நிர் மாணிப்புகள் சிலவற்றின் தொனிப்பொருள், கலைப் பாணி, ஊடகம், நுட்ப முறைகளை விளக்குவார்.<br>• தெரிவு செய்யப்பட்ட ஐரோப்பிய சிற்பக் கலைஞர்கள் இருவரின் நிர் மாணிப்புகளில் காணப்படும் வேறுபாடு களை ஒப்பீட்டு ரீதியில் மதிப்பிடுவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **7.0 வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளி நாட்டுச் சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்து வங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்பு களைப் படைப்பாக்கத் திற்காகப் பயன்படுத்து வார்.** | 7.1 யாபகுவ கட்டட நிர்மாணிப் புக்களை கற்றறிவார். | • அரண்மனை<br>• படி வரிசை<br>• புன்கலசத்துடனான பெண்ணுருவங்கள்<br>• சிங்க உருவங்கள்<br>• நுழை மண்டபத்தின் அடித்தள செதுக்கல்கள்<br>• கதவு நிலைகள் மற்றும் காற்றுத்துளைகள் | • யாபகுவ கட்டடக்கலை நிர்மாணிப்புகளின் சிறப்பை இனங்கண்டு விளக்குவார்.<br>• யாபகுவ நிர்மாணிப்பின் பொருட்டுப் பயன்படுத்தியுள்ள தொழில்நுட்ப முறை, ஊடகப் பாவனையின் சிறப்பு. கட்டடக் கலையின் பண்புகள் என்பவற்றை விளக்குவார்.<br>• யாபகுவ கட்டடக்கலை நிர்மாணிப்புக்களின் கலைத்துவ இயல்புகளை இரசிப்பார். | 70 |
| | 7.2 கம்பளைக்காலத்துக் கட்டடக் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார். | • கடலதெனிய விகாரை<br>• இலங்காதிலக விகாரை | • கடலதெனிய, இலங்காதிலக விகாரை நிர்மாணிப்புக்களுக்குப் பயன்படுத்தி இருக்கும் ஊடகம், தொழிநுட்ப முறைகளை விளக்குவார்.<br>• கடலதெனிய, இலங்காதிலக விகாரை நிர்மாணிப்புக்களின் கட்டடக் கலை இயல்புகள், நுட்ப முறை, கலைத்துவப் பண்புகளை விளக்குவார். | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.3 கம்பளைக் காலத்தினதும் கண்டிக் காலத்தினதும் மரச் செதுக்கல்களைக் கற்றறிவார். | • அம்பக்கே தேவலாயம்<br>• பனாவிட்டிய தங்குமிடம் | • அம்பக்கே தேவலாயம், பனாவிட்டிய தங்குமடங்களின் கட்டடக் கலைப் பண்புகளையும் தொழில் நுட்ப முறைகள் பற்றியும் விளக்குவார்.<br>• அம்பக்கே தேவலாயம், பனாவிட்டிய தங்குமடங்களின் செதுக்கல்களின் கருப்பொருள்களைப் பகுத்தாய்வார்.<br>• அம்பக்கே தேவாலயம், பனாவிட்டிய தங்குமடத்தின் செதுக்கல் நிர்மாணிப்புக்களின் ஊடகம், ஒழுங்கமைப்பு, உணர்வு வெளிப்பாடு, தேசிய ரீதியான தனித்துவமான பண்புகள் கலைத்துவப் பண்புகள் என்பவற்றை விளக்குவார். | |
| | 7.4 இந்தியாவின் பல்லவ கலை மரபைக் கற்றறிவார். | • கட்டடக்கலை<br>– பஞ்சபாண்டவர் இரதம், கடற்கரைக் கோவில் (மாமல்லபுரம்) | • பல்லவக் கட்டடக் கலையினதும் தெரிவுசெய்தெடுத்த செதுக்கலொன்றின் கலைப் பாணி, திட்டமிடப் பட்டுள்ள தன்மை, ஊடகம், | |



DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • செதுக்கல்கள்<br>– ஆகாய கங்கையின் இறக்கம் (மாமல்லபுரம்) | தொழினுட்பம், சமய எண்ணக்கருக்களின் தாக்கத்தையும் கலைப் பண்புகளையும் விபரிப்பார். | |
| | 7.5 இந்திய சோழர் கலை நிர்மாணிப்புகளைக் கற்றறிவார். | • கட்டடக்கலை<br>– இராஜ ராஜேஸ்வரி கோவில் (தஞ்சை)<br>• சிலை<br>– ரிஷபம் வாகனதேவர்<br>– சிவதட்ஷணாமூர்த்தி ஆலயம் (தஞ்சாவூர்) | • சோழர் கட்டடக்கலை, சிற்பகலையின் கலைத்துவப் பண்புகள், ஊடகம், தொழினுட்பம், சமய எண்ணக் கருக்களின் தாக்கம், திட்டமிடப்பட்டுள்ள தன்மைகளை விளக்குவார். | |
| | 7.6 இந்திய மொகலாய கலையைக் கற்றறிவார் | • கட்டடக்கலை<br>– தாஜ்மகால்<br>• மொகலாய ஓவியக்கலை<br>– பாபூர் சக்கரவர்த்தியின் பூங்கா அவதானிப்பு<br>– அக்பர் அரசனின் யுத்தக் காட்சி | • இந்திய தாஜ்மகால் மாளிகையை நிர்மாணித்த நோக்கம், கட்டட நிர்மாண பண்புகள், ஊடகப் பயன்பாடு, நுட்பமுறை, கலைப் பண்புகள் என்பவற்றைப் பகுத்தாய்வார்.<br>• இந்திய மொகலாய ஓவியங்களுக்குப் பயன்படுத்தி இருக்கும் கருப்பொருள், நுட்பமுறை | |

DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | கலைப்பாணி, உணர்வு வெளிப்பாடு, கலைத்துவப் பண்புகளை விளக்குவார்.<br>• இந்திய மொகலாய ஓவிய நிர்மாணிப்புகளில் தாக்கத்தை ஏற்படுத்திய வெளிநாட்டு, உள்நாட்டு கலைத் தழுவல்களைப் பற்றி விளக்குவார். | |
| | 7.7 இந்திய ராஜபுத்தான ஓவியக் கலை நிர்மாணிப்புக்களைக் கற்றறிவார். | • இராக ராஜினிச்சித்திரங்கள்<br>• ராதா கிருஸ்ணன் சித்திரங்கள் | • இந்திய ராஜபுத்தான ஓவியக் கலையில் தாக்கத்தை ஏற்படுத்திய இந்து சமய எண் ணக்கருக்களும் விபரங்களும், பிரதேசத்து பண்பாட்டு அம்சங்களையும் விமர்சித்து கட்டுரை அமைப்பார்.<br>• தெரிவு செய்து எடுத்த நிர் மாணிப்புக்களின் ஊடாக, ராஜபுத்தான ஓவியக் கலையின் பாணி, நுட்ப முறை, ஊடகம் மற்றும் கலைத்துவப் பண்புகளை விளக்குவார். | |



DRAFT

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 7.8 உரோமக் கட்டடக் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார். | • வெற்றி வளைவு (Triumple Arches)<br>– ரயிட்டஸ் (The Arch of Titus)<br>– கொன்ஸ்ரன்ரயின் வளைவு (The Arch of Constantine)<br>• வெற்றித்தூண் (Victory Columns/Triumple Columns)<br>– ரொஜன் தூண் (The Trajan Column)<br>• கொளோசியம் (Colosseum) | • உரோம லௌகீக கட்டட நிர்மாணிப்புக்குரிய அங்கங்கள் உருவாகுவதற்குக் காரணமாக அமைந்த பின்னணி, கட்டட வடிவமைப்பு, அலங்காரம், தொழில் நுட்பங்களை விளக்கிக் கூறுவார். | |
| | 7.9 உரோமச் சிற்பங்களைக் கற்றறிவார் | • யூலியஸ் சீசர் (Julius Caesar)<br>• கறகல்ல (Caracalla)<br>• ஒகஸ்ரஸ்சீசர் (Auguatus Casesar) | • உரோம லௌகீக பிரதிமைச் சிற்பக் கலையின் அடிப்படைப் பண்புகள், உணர்வு வெளிப்பாடு, நுட்பமுறைகளை பகுத்தாய்ந்து விபரிப்பார். | |
| | 7.10 உரோம ஓவியங்களைக் கற்றறிவார். | • சுருள் வடிவக் கேசமுடைய பெண் ஒருத்தியின் இடுப்பு வரையான மமீயின் பிரதிமை உருவம் (Mummy Portrait of a Woman with Ringlet Hairstyle.)<br>• டயோனிசியஸ் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புயைய ஓவியங்கள் - பெண் ஒருவரைத் தண்டிக்கும் காட்சி | • உரோம ஓவியக் கலையின் கருப்பொருள், பாணியின் இயல்பு, நுட்ப முறை என்பவற்றைத் தெரிந்தெடுத்த உதாரணங்களின் ஊடாக விளக்குவார். | |

DRAFT

## முதலாம் தவணை


| செயற்பாடு | | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| 1.1.1 | பல உடல் நிலைகளையுடைய மனித உருவங்களை வரைவோம். | 04 | 1 |
| 1.1.2 | பல விலங்கு உடல் நிலைகளை இரேகைகளால் கற்றறிவோம். | 02 | 3 |
| 1.2.1 | ''சமய விழா நிகழ்வொன்று'' எனும் தொனிப்பொருளில் ஓவியமொன்றை வரைவோம். | 04 | 5 |
| 1.2.2 | ''கிராமத்துச் சூழல்'' உடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் | 04 | 6 |
| 1.3.1 | திருமண வைபவத்தின் நிகழ்வொன்றை மோடிப்படுத்தி வரைவோம். | 04 | 7 |
| 2.1.1 | பெட்டியொன்று அந்தூரிய தாவரச்செடியொன்றுடனான சாடியொன்று, செவ்விளநீர் ஒன்று என்பனவற்றை இரேகைகளால் வரைவோம். | 04 | 09 |
| 2.1.2 | பெட்டியொன்றும் அதன் ஒரு மூலை மறையும் விதத்தில் தொங்கவிடப்பட்ட பூக்களுடனான துணியொன்றையும் கற்றறிவோம். | 02 | 10 |
| 2.2.1 | வெள்ளைத் தாள் ஒன்றினால் மூடப்பட்ட பெட்டியொன்றும் அதன் மீது விரித்துத் தொங்கவிடப்பட்ட பூக்களுடனான வர்ணத் துணித்துண்டொன்றும் அரைவாசிக்கு நீர் நிரப்பப்பட்ட கண்ணாடிப் போத்தலுக்குள் இடப்பட்ட வர்ண இலைகளுடனான குறோட்டன் கிளையொன்றும் கோப்பையொன்றில் வைக்கப்பட்ட 1/4 பங்கை விடக் குறைவான பகுதி வெட்டியகற்றப்பட்ட வத்தகைப்பழம் ஒன்றும், பெட்டியொன்றின் மீது வைக்கப்பட்ட வெண்கலப் பாத்திரம்(Bowl) ஒன்றினுள் இடப்பட்ட பிடி வெளியே தெரியும் விதத்திலான கத்தியொன்றும் ஒழுங்கிணைத்து சித்திரம் வரைவோம். | 04 | 11 |
| 2.2.2 | பொருட் தொகுதியொன்றை ஒழுங்கிணைத்து வரைவோம் | | |
| 3.1.1 | நவ நாகரீக ஆபரணத் தொகுதியொன்றை நிர்மாணிப்போம். | 04 | 14 |
| 3.2.2 | விழா நிகழ்வொன்றுக்கான ஆண், பெண் இருபாலாரின் நவ நாகரீக ஆடைகளை நிர்மாணிப்போம். | 04 | 19 |
| 3.2.3 | பாடசாலையின் கீழைத்தேய, மேற்கத்தேய வாத்தியக் குழுவிற்கான நவ நாகரீக ஆடையொன்றை நிர்மாணிப்போம் | 04 | 20 |
| 3.3.1 | பெண்களின் ஆடைகளுக்குப் பொருத்தமான துணியொன்றுக்கு அலங்காரமொன்றை நிர்மாணிப்போம் | 04 | 21 |
| 4.1.1 | உற்பத்தித் திறனின் ஊடாக அபிவிருத்தியை நோக்கி எனும் தொனிப் பொருளில் சுவரொட்டியொன்றை நிர்மாணிப்போம். | 04 | 24 |
| 4.2.1 | பாடசாலைக் கலை விழாவுக்கான உத்தியோக பூர்வ இலட்சினையொன்றை நிர்மாணிப்போம் | 04 | 26 |


DRAFT

| செயற்பாடு | | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|---|
| **4.4.1** | நவீன ஊடகங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய புத்தகமொன்றுக்குப் பொருத்தமான வெளிப்புற அட்டையொன்றைக் கணினி மென்பொருள்களை உபயோகித்து நிர்மாணிப்போம். | 04 | 31 |
| **5.1.1** | மனித உருவங்களை ஒருங்கிணைத்து சிற்பமொன்றை நிர்மாணிப்போம். | 05 | 33 |
| **6.1.1** | 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களின் நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம். | | 32 |
| | (ஹரீ பீரிஸ், ஐவன் பீரிஸ், ஜஸ்ரின் தெரணியகல, ரிச்சட் கேப்ரியல், ஜோஜ் கீட், எல்.டி.பி. மஞ்சு ஸ்ரீ, எஸ். ஆர். கனகசபை, கே. கனகசபாபதி) | 16 | 37 |
| **7.1.1** | யாப்பகுவ கட்டட நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம். | 06 | 67 |
| **7.4.1** | பல்லவ காலத்து நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம். (பஞ்ச பாண்டவர் இரதங்கள், கடற்கரை கோவில், ஆகாய கங்கையின் இறக்கம்) | 04 | 78 |
| **7.8.1** | உரோமக் கட்டட நிர்மாண்புகளை மதிப்பிடுவோம் (வெற்றி வில் வளைவு (Triumple Arches), ரயிட்டஸ் (Arch of Titus), கொன்ஸ்ரன்ரயின் வளைவு (The Arch of Constantine), வெற்றித்தூண்கள் (Column Victory), ரொஜன் தூண் (The Trajan column), கொளோசியம் விளையாட்டரங்கு (Colosseum) | 04 | 88 |


DRAFT

## இரண்டாம் தவணை

| செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|
| **1.2.3** "நகரச் சூழல்" உடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம். | 04 | 6 |
| **1.3.2** வரலாற்று ரீதியான நிகழ்வொன்றை வரைவோம் | 04 | 8 |
| **1.3.3** இயற்கைச் சூழலுடன் தொடர்புடைய தொனிப்பொருள் ஒன்றை ஓவியமாக வரைவோம் | 04 | 8 |
| **2.1.3** அரைவாசிக்கு நீர் நிரப்பிய கண்ணாடிப் போத்தல் ஒன்றுக்குள் இடப்பட்ட ஐந்து இலைகளுடனான குறோட்டன் கிளையொன்றைக் கற்றறிவோம். | 04 | 10 |
| **2.1.4** பீங்கானொன்றில் வைக்கப்பட்ட ஒரு துண்டு வெட்டி அகற்றப்பட்ட வத்தகைப்பழம் ஒன்றை கற்றறிவோம். | 04 | 10 |
| **2.2.3** பொருட் தொகுதியொன்றை ஒழுங்கிணைத்து வரைவோம் | 04 | 13 |
| **2.2.4** பொருட் தொகுதியொன்றை ஒழுங்கிணைத்து வரைவோம் | 04 | 13 |
| **2.2.5** பொருட் தொகுதியொன்றை ஒழுங்கிணைத்து வரைவோம் | 04 | 13 |
| **3.1.2** சீகிரியா பெண் ஓவியங்களின ஆபரணங்களை உற்று நோக்கிய பின் மணப்பெண் ஒருவருக்கான ஆபரணத் தொகுதியொன்றைத் திட்டமிட்டு வரைந்து வர்ணம் தீட்டுவோம் | 04 | 16 |
| **3.2.4** "சூழலின் அழகு ராணி" எனும் போட்டியில் பங்கு கொள்ள இருக்கும் யுவதி ஒருவருக்குப் பொருத்தமான நவ நாகரீக ஆடையொன்றை நிர்மாணிப்போம் | 04 | 20 |
| **3.3.2** ஆக்கபூர்வமான விதத்தில் அமைந்த "TABLE MAT" ஒன்றுக்குப் (மேசைப்பாய்) பொருத்தமான முழுத்தள அலங்கார வேலைப்பாடொன்றை நிர்மாணிப்போம். | 03 | 23 |
| **3.3.3** திரைச் சேலைக்கானச் செங்குத்தாக அமையும் பொருத்தமான முழுத்தள அலங்காரமொன்றை நிர்மாணிப்போம். | 03 | 23 |
| **4.1.2** "நச்சுத் தன்மையில்லா உழவுத் தொழிலும் ஆரோக்கியமாக வாழும் மக்கள் இனத்தாரும்" எனும் கருப்பொருளில் சுவரொட்டி ஒன்றை நிர்மாணிப்போம் | 04 | 25 |
| **4.2.2** சமய விழா ஒன்றினை மையமாகக் கொண்டு வாழ்த்து இதழ் ஒன்றை நிர்மாணிப்போம். | 04 | 27 |
| **4.3.1** தேசப்பற்றை எடுத்துரைக்கும் புதுக்கவிதைத் தொகுதி ஒன்றுக்கான வர்ண விளக்கப்படமொன்றை நிர்மாணிப்போம் | 04 | 28 |
| **5.2.1** வீட்டு அலங்காரத்துக்குப் பயன்படுத்தக்கூடிய விலங்கு தாவர உருவங்களை ஒழுங்கிணைத்து சிற்பமொன்றை நிர்மாணிப்போம் | 10 | 35 |
| **6.2.1** இலங்கையின் நவீன ஓவியச், சிற்பக் கலைஞர்களின் நிர்மாணிப்புகளைக் கற்றறிவோம். (ஸ்டென்லி அபேசிங்க, ஏ. மார்க்கு, திஸ்ஸ றணசிங்க, எச்.ஏ. கருணாரட்ன) | 08 | 43 |

DRAFT

| செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|
| **6.3.1** ஜெமினி றோய், அம்ரிதா ஸர்கில் ஆகியோரின் ஓவியங்களை மதிப்பிடுவோம் | 04 | 47 |
| **6.4.1** சல்வடோர் டாலி (Salvador Dali) யின் நிர்மாணிப்புக்களைக் கற்றறிவோம் | 02 | 50 |
| **7.2.1** கடலாதெனிய இலங்காதிலக விகாரைகளின் கட்டடக் கலையையும் கலை நிர்மாணிப்புக்களையும் கற்றறிவோம். | | |
| **7.5.1** சோழர் கலை நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம். | 06 | 71 |
| (இராஜ ராஜேஸ்வரக் கோவில், சிவதட்சணாமூர்த்தி | 05 | 81 |
| **7.6.1** இந்திய மொகலாயக் கட்டடக் கலை நிர்மாணிப்புகளையும் ஓவியக் கலையையும் மதிப்பிடுவோம் (தாஜ்மகால், பாபர் சக்கரவர்த்தியின் பூங்கா அவதானிப்பு, அக்பர் அரசனின் யுத்தக் காட்சி) | 04 | 83 |
| **7.9.1** உரோம சிற்பங்களை நிர்மாணிப்போம் (யூலியஸ் சீசர் (Julius Caesar), கெரகெல்லா (Caracalla), ஒகஸ்ரஸ் சீசர் (Auguatus Casesar) | 04 | 91 |


DRAFT

## மூன்றாம் தவணை


| செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|
| **1.2.5** ''மலை சார்ந்த சூழல்'' உடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் | 04 | 6 |
| **1.2.6** கற்பனையான தொனிப்பொருளைக் கொண்ட ஓவியமொன்றை வரைவோம் | 04 | 6 |
| **1.3.4** சுதேச பாரம்பரிய நாட்டார் கலையுடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் | 04 | 8 |
| **1.3.5** சமூக மீள் இணக்கப்பாட்டை கருப்பொருளாகக் கொண்டு ஓவியமொன்றை வரைவோம். | 04 | 8 |
| **2.1.5** கைப்பிடியுடனான தேநீர்க் கோப்பையும் சிறிய மட்குடமொன்றையும் கற்றறிவோம். | 02 | 10 |
| **2.2.6** பொருட் தொகுதியொன்றை ஒழுங்கிணைத்து வரைவோம் | 03 | 13 |
| **2.2.7** பொருட் தொகுதியொன்றை ஒழுங்கிணைத்து வரைவோம் | 03 | 13 |
| **2.2.8** பொருட் தொகுதியொன்றை ஒழுங்கிணைத்து வரைவோம் | 03 | 13 |
| **3.2.1** நவ நாகரீக நிர்மாணிப்புகளுக்குப் பொருத்தமான மனித உருவங்களை வரைவோம். | 04 | 16 |
| **3.2.5** பாரம்பரிய நடனமொன்றுக்குப் பொருத்தமான ஆடைத் தொகுதியொன்றை நிர்மாணிப்போம். | 04 | 20 |
| **3.3.4** சேலைக் கரைக்காக அரூப வடிவங்களை கிடையாக இருக்கும் வித்தில் உபயோகித்து முழுத்தள அலங்கார வேலைப்பாடொன்றை நிர்மாணிப்போம். | 03 | 23 |
| **4.1.3** ''சுபீட்சமான எதிர்காலத்துக்காகப் போதையற்ற சமூகத்தை உருவாக்குவோம்'' எனும் தலைப்பில் சுவரொட்டி ஒன்றை நிர்மாணிப்போம் | 04 | 25 |
| **4.3.2** தெரிவு செய்யப்பட்ட நாவல் ஒன்றின் உள்ளங்கவர்ந்த நிகழ்வொன்றுக்காக விளக்கப் படமொன்றை நிர்மாணிப்போம். | 04 | 30 |
| **4.4.2** ''பாடசாலையின் சித்திரக் கலை மன்றத்துக்கான உத்தியோகபூர்வ சின்னமொன்றைக் கணனி மென் பொருள்களை உபயோகித்து நிரமாணிப்போம்.'' | 04 | 32 |
| **4.4.3** ''பாரம்பரிய நாட்டார் கலைத்தொழிலை பாதுகாப்போம்'' எனும் தொனிப் பொருளில் கணனி மென் பொருள்களை உபயோகித்து சுவரொட்டியொன்றை நிரமாணிப்போம். | 04 | 32 |
| **5.1.2** களி மண் ஊடகத்தை உபயோகித்து மார்பளவுச் சிலை ஒன்றை நிர்மாணிப்போம் | 05 | 34 |
| **6.4.2** ஜோன் மிரோவின் ஓவியங்களைக் கற்றறிவோம் | 02 | 53 |
| **6.5.1** வசிலி கன்டிஸ்கியின் நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம் | 02 | 56 |
| **6.5.2** பியற் மொன்றியனின் (Piet Mondrean) ஓவியங்களைக் கற்றறிவோம். | 02 | 58 |
| **6.6.1** ஓகஸ்தே ரொடின் அவர்களின் சிற்ப நிர்மாணிப்புக்களைக் கற்றறிவோம் | 02 | 61 |
| **6.6.2** ஹென்ரி மூரின் சிற்பங்களைக் கற்றறிவோம். | 02 | 64 |


DRAFT

| செயற்பாடு | பாடவேளைகள் | பக்கம் |
|---|---|---|
| **7.3.1** எம்பக்க ஆலயம், பனாவிட்டிய மடம் என்னவற்றில் காணப்படும் மரச்செதுக்கல்களைக் கற்றறிவோம். | 06 | 75 |
| **7.7.1** இந்திய ராஜபுத்தான ஓவியக் கலையை மதிப்பிடுவோம். (இராக இராகினி ஓவியங்கள், ராதா கிருஸ்னா ஓவியங்கள்) | 03 | 86 |
| **7.10.1** உரோம ஓவியங்களைக் கற்றறிவோம் (Pompeian painter with painted statue and framed paint ing pompe II) வர்ணமூட்டப்பட்ட சிலையுடன் சட்டகத்துள் காணப்படும் ஓவியமொன்றுடன் காணப்படும் பொம்பிய ஓவியக் கலைஞன் (Mummy protrait of a woman with Ringlet hair style) சுருள் வடிவ கேசமுடைய பெண் ஒருத்தியின் இடுப்பு வரையான மமீயின் பிரதிமை உருவம் | 04 | 93 |

DRAFT

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுக்கான அறிவுறுத்தல்கள்

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : இரேகைகளை பயன்படுத்தி மனித, விலங்குகளின் உருவங்களை வரைவார்.**

**செயற்பாடு 1.1.1 :** பல உடல் நிலைகளையுடைய மனித உருவங்களை வரைவோம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இரேகைச் சித்திரம் வரையப் பொருத்தமான தாள்கள், பென்சில்கள் (2B, 4B, 6B, 10B), கரி, பஸ்ரல் வர்ணம், தேர்ச்சி மட்டம் 1. 2 க்கான தலைப்புகளுக்குப் பொருந்தும் மனித உடல் நிலைகளையுடைய இரேகைகளின் மாதிரிப் படங்கள், காணொளிக் காட்சிகள், நிழற்படங்கள் அடங்கிய இறுவெட்டுக்கள்

**கற்றற் பேறுகள் :**

- பல உடல் நிலைகளையுடைய மனித உருவங்களின் பரும்படிப் படங்களை வரைவார்.
- அளவுப் பிரமாணத்துடன் சமநிலைத்தன்மை, இயற்கையான வடிவங்கள், குணவியல்புகள் புலப்படும் விதத்தில் பரும்படி படங்களை வரைவார்.
- பல வயது மட்டங்களையுடைய மனித உடல் நிலைகளை வரையக் கூடிய திறமையை வெளிப்படுத்துவார்.
- பலவித ஊடகங்களின் அவற்றுக்கே உரித்தான நுட்ப முறைகளைக் கையாண்டு இரேகைச் சித்திரங்களை வரையும் திறமையை வெளிப்படுத்துவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- மனித உருவங்களின் அடிப்படை வடிவங்களும் அளவுப் பிரமாணமும்
- செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் வேளையில் காணப்படும் மனிதர்களின் உடல் நிலைகள்
- ஒளி நிழல் சந்தம், சமநிலை, முப்பரிமாண இயல்புகள்
- இரேகைகளின் தன்மையை உகந்த வகையில் உபயோகித்தல்
- பல வகையான ஊடகங்களைக் கையாளும் திறமை

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- தேர்ச்சி 1.2 க்கான தலைப்புக்களின் கீழ் வரையப்பட்ட மாதிரிச் சித்திரங்கள், படங்கள், நிழற்படங்கள் என்பவற்றை அவதானிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- அவற்றை அவதானித்த பின் பல மனித உடல் நிலைகளின் பருமட்டான படங்களை வரையத் தேவையான வழிகாட்டல்களை மாணவருக்கு வழங்குக.
- பல சந்தர்ப்பங்கள், அவற்றில் அவதானிக்கக் கூடிய செயற்பாடுகளில் காணப்படும் மனித உடல் நிலைகள், குணவியல்புகள், உணர்வு வெளிப்பாடு, ஆடை அணிகள் பற்றிக் கவனம் செலுத்தச் செய்க.
- அவதானிப்பையும் மாணவர்களின் கற்பனையையும் ஒன்று திரட்டி மனித உருவங்களை வரையச் செய்க.
- மனித உருவங்களை ஒருங்கிணைத்துச் சித்திரங்களை வரைக. அப்போது பின்வரும் விடயங்கள் மீது அவதானம் செலுத்துக.
  - அளவு
  - பரிமாணம்
  - பல உடல் நிலைகள்
  - சமநிலைத் தன்மை
  - சந்தம்
  - உணர்வு வெளிப்பாடு
  - உடலின் புறத் தோற்றம்
- தடித்த இரேகைகள், மென்மையான இரேகைகள் எனும் இரேகைகளின் பல வகைத் தன்மையை உபயோகித்து உருவங்களின் வடிவம், முப்பரிமாணத் தன்மை என்பன புலப்படும் வகையில் வரையத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- வரைய உபயோகிக்கும் ஊடகத்துக்கு உகந்த நுட்பமுறைகளையும் இரேகைகளின் பல விதத் தன்மையையும் கவனத்திற் கொண்டு உருவங்களின் முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்தத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- மனித உருவங்களை வரையும்போது ஒவ்வொரு உருவங்களுக்கிடையில் உள்ள தொடர்பு பற்றிக் கவனம் செலுத்துக.
- மாணவர்களின் அடைவு மட்டங்களுக்கேற்ப மனித உருவங்களின் கைகள், கால்கள், முகம், உடல் நிலைகள் பற்றி மேலும் கற்றறிய வாய்ப்பளிக்கும் நோக்குடன் வரைவதில் ஈடுபடுத்துக.
- வரையும் திறமையை அதிகரிக்கும் நோக்குடன் தொடர் பயிற்சிகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டும் என்பது பற்றி அறிவுறுத்துக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பல உடல் நிலைகளையுடைய மனித உருவங்களின் பரும்படி படங்களை வரைக.
- சந்தம், அளவு, பரிமாணம், சமநிலைத்தன்மை, குணவியல்புகள் என்பன புலப்படும் விதத்தில் மனித உருவங்களை வரைக.
- பல்வேறுபட்ட ஊடகங்களில் அவற்றக்குரிய நுட்ப முறைகளில் மனித உருவங்களை வரைக.
- பல வயதுகளைச் சித்தரிக்கும் மனித உருவங்களை வரைக. இங்கே உணர்வு வெளிப்பாடு, ஒவ்வொரு உருவங்களுக்கிடையில் உள்ள இடைத் தொடர்பு பற்றிக் கவனஞ் செலுத்துக.
- பல மனித உடல் நிலைகளையுடைய உருவங்களை வரையப் பயிற்சி பெறுவதற்காக, பரும்படி படங்கள் அடங்கிய புத்தகமொன்றை அமைத்து, அவற்றை இற்றைப்படுத்தி, பயிற்சிகள் பலவற்றில் ஈடுபடுக.

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : இரேகைகளை பயன்படுத்தி மனித, விலங்குகளின் உருவங்களை வரைவார்.**

**செயற்பாடு 1.1.2 :** பல விலங்கு உடல் நிலைகளை இரேகைகளால் கற்றறிவோம்.

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இரேகை சித்திரம் வரையப் பொருத்தமான தாள்கள், பென்சில்கள் (2B, 4B, 6B, 10B), கரித்துண்டுகள், பஸ்ரல் வர்ணம்
- இரேகைகளால் வரையப்பட்ட பல விலங்கு உடல் நிலைகளின் மாதிரிச் சித்திரங்கள்
- தேர்ச்சி மட்டம் 1.2 க்குரிய தலைப்புக்களின் கீழ் காணப்படும் விலங்குகளின் நிலைகளைச் சித்தரிக்கும் நிழற்படங்கள், காணொளிகள் அடங்கிய இறுவட்டுக்கள்

**கற்றற் பேறுகள் :**

- விலங்குகளின் பல்வேறுபட்ட உடல் நிலைகளை வரைவார்.
- அளவு பிரமாணம் என்பவற்றைக் கருதி விலங்குகளின் இயற்கை வடிவங்களை வரைவார்.
- விலங்குகளின் பல உடல் நிலைகளில் காணப்படும் சந்தத்துடனான அசைவுகளை இரேகைகளால் வரைவார்.
- இரேகைகளை வரையும் பல முறைகளைக் கையாண்டு விலங்குருவங்களின் முப்பரிமாணத் தன்மை, குண இயல்புகள் என்பவற்றை வெளிப்படுத்துவார்.
- பல ஊடகங்களை உபயோகித்து இரேகைகள் வரையும் திறமையை வெளிப்படுத்துவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஆய்வு முறை, அவதானிப்பு முறை, ஒப்படை, செயற்றிட்டம், செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- பல செயற்பாடுகளைச் சித்தரிக்கும் நிலைகளைக் கொண்ட விலங்குருவங்கள்
- விலங்குருவங்களின் அடிப்படை வடிவங்களும் அமைப்புகளும்
- விலங்குருவங்களின் சரியான அளவு பிரமாணம் எனும் பண்புகள்
- ஒளி, நிழல், முப்பரிமாணத் தன்மை, குணவியல்புகள், சந்தம், அசைவு என்பவற்றைக் காண்பித்தல்
- இரேகைகளின் பலவகைத் தன்மை
- பல ஊடகங்களின் பயன்பாடு

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- தேர்ச்சி மட்டம் 1.2 இற்குரிய தலைப்புக்களக்கான விலங்குச் செயற்பாடுகளின் நிலைகளைக் குறிக்கும் நிழற்படங்கள், காணொளிகள் என்பவற்றை அவதானிக்கவும் ஆய்வு செய்யவும் மாணவர்களைப் பணிக்க.
- இரேகைகளால் வரையப்பட்ட பல விலங்கு உடல் நிலைகள் அடங்கிய மாதிரி சித்திரங்களின் ஊடாக இரேகைகள் பற்றிக் கற்றறிய வாய்ப்பளிக்க.
- பல ஊடகங்களின் சிறப்பியல்புகள், அவ்வூடகங்களின் குணவியல்புகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு வரையும் முறைகள் பற்றிய விளக்கத்தை அளிக்க.
- இரேகைகளை உபயோகித்து விலங்கு உருவங்களை வரையச் செய்க.
- விலங்குருவங்களை வரையும்போது பின்வரும் விடயங்கள் மீது அவதானம் செலுத்துக.
    - இயற்கையான பண்புகளும் குண இயல்புகளும்
    - அளவும் பிரமாணமும்
    - விலங்குகளின் பல உடல் நிலைகளின் சந்தம்
    - விலங்குகளின் பலவித அசைவுகள் (இயக்க நிலை) விலங்குகளின் பல்வகைமை
    - பலவித முறைகளில் இரேகைகள் மூலம் ஒளி நிழல் காண்பித்தல், முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்துதல்
- பல ஊடகங்களை உபயோகித்து விலங்குருவங்களை வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- ஓவியம் வரையும் போது பயன்படும் கோட்பாட்டு விதிகள் வெளிப்படுத்தும் வேளைகளில் தேவையான உதவியை வழங்குக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பல விலங்குருவங்களின் பரும்படி படங்களை வரைக.
- விலங்குகளின் பலவகைத் தன்மைக்கு ஏற்ப அளவுப் பிரமாணம் என்பவற்றை சரியாகக் காண்பிக்க.
- விலங்குகளின் உடல் நிலைகள், உணர்வு வெளிப்பாடு, சந்தம் என்பவற்றைச் சரியாகக் காண்பிக்க.
- இரேகைகளை பல முறைகளில் உபயோகித்து ஒளி நிழல், முப்பரிமாணத் தன்மை எனும் இயல்புகளை வெளிக் கொணர்க.
- பல ஊடகங்களை உபயோகித்து விலங்குருவங்களை வரையும் செயற்பாடுகளில் ஈடுபடுக.

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : ஓவிய ஒருங்கிணைப்பின் இயல்பான முறைகளைக் கொண்டு இயற்கை, செயற்கைச் சூழலை ஓவியமாக வரைவார்.**

**செயற்பாடு 1.2.1 :** ''சமய விழா நிகழ்வொன்று'' எனும் தொனிப்பொருளில் ஓவியமொன்றை வரைவோம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- சித்திரம் வரையப் பொருத்தமான தாள்கள், பென்சில்கள், தூரிகைகள், பல வர்ண ஊடகங்கள் (பஸ்ரல், நீர்வர்ணம், அக்றலிக்)
- பல ஊடகங்களை உபயோகித்து யதார்த்த உருவ ஒழுங்கமைப்பு முறையில் வரையப்பட்ட மாதிரி சித்திரங்கள்
- உண்ணாட்டு, வெளிநாட்டு முன்னோடிக் கலைஞர்களின் யதார்த்த உருவ ஒழுங்கமைப்பு முறையில் வரையப்பட்ட ஓவியங்களின் நிழற்படங்கள்

DRAFT

**கற்றற் பேறுகள் :**

- தொனிப்பொருளுக்குப் பொருத்தமான சித்திரமொன்றை வரைவதற்கான பருமட்டானப் படத்தை வரைவார்.
- சித்திரம் வரையும் கோட்பாட்டு விதிகளைச் சரியாக உபயோகிப்பார்.
- தெரிவு செய்யப்படும் ஊடகத்துக்குப் பொருத்தமான நுட்ப முறைகளை உபயோகித்து வர்ணம் தீட்டுவார்.
- ஒளிநிழல், முப்பரிமாணத் தன்மை என்பவற்றுடன் யதார்த்தமான பண்புகளையும் வெளிப்படுத்தி வரைவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஆய்வு முறை, அவதானிப்பு முறை, ஒப்படை, செயற்றிட்டம், செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- முன்னோடிக் கலைஞர்களின் ஓவியங்கள் அடங்கிய நிழற் படங்களின் துணையுடன் இயல்பான ஓவிய நிர்மாணிப்புகள் பற்றிக் கற்றறியச் சந்தர்ப்பம் வழங்குக.
- இயல்பான ஓவியங்களின் விசேட பண்புகள், உபயோகிக்கப்பட்டுள்ள இயற்கை, செயற்கை வடிவங்கள், வர்ணங்கள் என்பன பற்றி விளக்குக.
- தலைப்புக்குப் பொருத்தமாக இயல்பான கோட்பாடு விதிகளுக்கு அமைய பரும்படிப் படங்களை வரைய மாணவர்களைப் பணிக்க.
- இரேகைகளால் சித்திரம் வரையும்போது தளத்தைச் சரியாக உபயோகிக்க அறிவுரை வழங்குக.

- ஓவியத்தை ஒருங்கிணைக்கையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை தெளிவுபடுத்துக.
    - தலைப்புக்குப் பொருந்தியிருத்தல்
    - முன்னணி, இடையணி, பின்னணி பற்றிக் கவனஞ் செலுத்துதல் (தூரநோக்கு)
    - மனித உருவங்களின் இடைத்தொடர்பு பொருந்தியிருத்தல்
    - மனித உருவங்களை வரையும் போது பின்வரும் விடங்களில் கவனஞ் செலுத்துக.
        - சந்தம், உணர்வு வெளிப்பாடு
        - பலவித செயற்பாடுகளைச் சித்தரிக்கும் உடல் நிலைகளும் கதாபாத்திரங்களின் பல்வகைமையும்
        - ஆடை அணிகள், பின்னணிக் காட்சிகள்
    - இயல்பான பண்புகள் புலப்படும் விதத்தில் வர்ணம் தீட்டும்போது ஒளி நிழல், முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்துதல் வர்ண ஊடகத்துக்குப் பொருத்தமான நுட்ப முறைகளை உபயோகித்தல், உபகரணங்களைச் சரியாகக் கையாளுதல் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவுரைகளை வழங்குக.
- மன அடக்கத்துடன் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வழிகாட்டுக.
- தேவையான முன்னூட்டல்களையும் பின்னூட்டல்களையும் வழங்கி மாணவருக்கு உதவுக.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தலைப்புக்குப் பொருத்தமாக இயல்பான வடிவங்களைக் கொண்ட மனிதர்களின் பல உடல் நிலைகளையும் சூழலின் பருமட்டானப் படங்களையும் வரைக.
- பரும்படி படத்தை உபயோகித்து பென்சில் இரேகைச் சித்திரமொன்றை வரைக.
- ஊடகத்தின் தன்மையைக் கருதி உரிய கோட்பாட்டு விதிகளுடன் நுட்ப முறைகளை சரியாகப் பயன்படுத்துக.
- உபகரணங்களைச் சரியாகக் கையாண்டு தமக்கே உரிய பாணியை வெளிப்படுத்துக.
- இயல்பான பண்புகளை வெளிப்படுத்தவும், ஆக்கபூர்வமான தன்மையைக் கொண்டிருக்கவும் வேண்டும் என்பது பற்றிக் கவனம் செலுத்துக.

DRAFT

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

பின்வரும் தலைப்புக்களின் கீழ், இயற்கை செயற்கைச் சூழல் தொடர்பான ஓவியங்களை வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

1.2.2 ''கிராமத்துச் சூழல்'' உடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் (4 பாடவேளைகள்)

1.2.3 ''நகரச் சூழல்'' உடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் (4 பாடவேளைகள்)

1.2.4 அன்பு, மகிழ்ச்சி, துன்பம், திகில், ஆர்வம் போன்ற உணர்வுகள் வெளிப்படும் நிகழ்வொன்றை ஓவியமாக்குவோம். (4 பாடவேளைகள்)

1.2.5 ''மலை சார்ந்த சூழல்'' உடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் (4 பாடவேளைகள்)

1.2.6 கற்பனையான தொனிப்பொருளைக் கொண்ட ஓவியமொன்றை வரைவோம் (4 பாடவேளைகள்)

**தேர்ச்சி 1.0 : சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்களை ஒழுங்கமைப்புச் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : ஓவிய ஒருங்கிணைப்பின் இயல்புக்கு மாறான ஒருங்கிணைப்பு முறைகளில் இயற்கை, செயற்கைச் சூழலை ஓவியமாக வரைவார்.**

**செயற்பாடு 1.3.1 :** திருமண வைபவத்தின் நிகழ்வொன்றை இயல்புக்கு மாறான ஒருங்கிணைப்பு முறைகளுடன் வரைவோம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- சித்திரம் வரையப் பொருத்தமான தாள்கள், பென்சில்கள், தூரிகைகள், பல வர்ண ஊடகங்கள் (பஸ்ரல், நீர்வர்ணம், அக்றலிக்)
- பல ஊடகங்களை உபயோகித்து இயல்புக்கு மாறாக வரையப்பட்ட ஓவியங்களின் மாதிரிப் படங்கள் அல்லது நிழற்படங்கள்
- மோடிப்படுத்தப்பட்ட கண்டிய காலத்து ஓவியப் பிரதிகள் எகிப்திய கலையின் மோடிப்படுத்தப்பட்ட ஓவியங்கள்

**கற்றற் பேறுகள் :**

- தொனிப்பொருளுக்குப் பொருத்தமான இயல்புக்கு மாறாக அமையும்படி பரும்படி படங்களை வரைவார்.
- திருத்தமான அளவுப் பரிமாணத்துடன் மோடிப்படுத்தி வடிவங்களை வரைவார்.
- இயல்புக்கு மாறாக வரையும் முறைகளைக் கடைப்பிடித்து இரேகைச் சித்திரங்களை வரைவார்.
- கலைப் பாணிக்கு உகந்த வர்ணங்களையும் இரேகை களையும் உபயோகிப்பார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல், ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- தொனிப்பொருளுக்குப் பொருத்தமாக இயல்புக்கு மாறான வடிவங்களுடன் பலவித மனித உடல் நிலைகள், பின்னணி என்பன
- கலைப்பாணிக்குரிய சித்தரிப்பு முறைகள்
- இரேகைகளை வரைதல்
- வர்ண ஊடகங்களின் உபயோகம்
- இயல்புக்கு மாறான முறைக்கு உகந்த வர்ணங்களின் உபயோகம், இரேகைகள், கையாளும் நுட்பமுறை

- உபகரணங்களை சரியாக உபயோகித்தல்
- தொனிப்பொருளுக்குரிய வெளிப்பாட்டுப் பண்பும், ஆக்கபூவமான தன்மையும்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

- கண்டியகால விகாரை ஓவியங்களையும், எகிப்தியக் கலையின் மோகப்படுத்தப்பட்ட ஓவியங்கள் என்பவற்றையும் மாணவருக்கு காண்பிக்க
- மாதிரிச் சித்திரங்களைக் கற்றறிவதால் இயல்புக்கு மாறான முறையில் வரையப்பட்ட ஓவியங்களின் பண்புகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக
- இயற்கை செயற்கை வடிவங்கள் இயல்புக்கு மாறாக வரையும் விதத்தையும், வர்ணம் இடும் போதும் இரேகைகள் கையாளும் போதும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் பற்றியும் விளக்குக
- தலைப்புக்கு பொருத்தமாக பரும்படி படங்களை வரையச் சந்தர்ப்பம் வழங்குக
- அப்போது பின்வரும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்துக
    - தளத்தைச் சரியாக உபயோகித்தல்
    - இயல்புக்கு மாறான பண்புகளை கடைப்பிடித்தல்
    - ஆக்கபூர்வமான சந்தமுள்ள வடிவங்கள்
    - நுட்பமான தன்மை, தூய்மை
    - மன அடக்கத்துடன் ஓவியத்தைப் பூர்த்தி செய்தல்

## கணிப்பீடும் மதிப்பீடும்

- தொனிப்பொருளுக்குப் பொருத்தமாக இயல்புக்கு மாறான வடிவங்களை உபயோகித்தது ஓவியத்தின் பரும்படி படத்தை வரைக
- பல வர்ண ஊடகங்களின் பண்புகளுக்கேற்ப வர்ணம் தீட்டுக
- மென்மையான சந்தமுள்ள இரேகைகளை உபயோகித்து ஓவியத்தின் உருவங்களை வெளிக்கொணரச் செய்க
- ஆக்கபூர்வமான தன்மையுடன் இயல்புக்கு மாறான பண்புகள் புலப்படும் விதத்தில் ஓவியத்தைப் பூரணப்படுத்துக

DRAFT

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

தேர்ச்சிமட்டம் 1.3 இன் கீழ் பின்வரும் தொனிப்பொருள்களுக்குப் பொருத்தமான தலைப்புக்களை உள்ளடக்கி இயல்புக்கு மாறான வகையில் ஓவியங்களை வரையச் செய்க

1.3.2 வரலாற்று ரீதியான நிகழ்வொன்றை வரைவோம் (4 பாடவேளைகள்)

1.3.3 இயற்கை சூழலுடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் (4 பாடவேளைகள்)

1.3.4 சுதேச பாரம்பரிய நாட்டார் கலையுடன் தொடர்புடைய தொனிப்பொருளொன்றை ஓவியமாக வரைவோம் (4 பாடவேளைகள்)

1.3.5 சமூக மீள் இணக்கப்பாட்டைக் கருப்பொருளாகக் கொண்டு ஓவியமொன்றை வரைவோம் (4 பாடவேளைகள்)

**தேர்ச்சி 2.0 : சுற்றாடலில் காணப்படும் பொருட்களைக் கூட்டாக ஒருங்கிணைத்து ஓவியமாக வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 : பல இயற்கை செயற்கைப் பொருட்களை வெவ்வேறாகக் கற்றறிந்து பருமட்டான படங்களை வரைவார்.**

**செயற்பாடு 2.1.1 :** பெட்டியொன்று அந்தூரிய தாவரச்செடியொன்றுடனான சாடியொன்று, செவ்விளநீர் ஒன்று என்பனவற்றை இரேகைகளால் வரைவோம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வெள்ளைத் தாள் ஒன்றினால் சுற்றப்பட்ட பிஸ்கட் பெட்டியொன்று, அந்தூரியம் தாவரச்செடியொன்றுடனான சாடியொன்று, காம்புடனான செவ்விளநீர் ஒன்று, பொருட்களை வைக்கப் பொருத்தமான பலகையொன்று, இரேகைகள் வரையப் பொருத்தமான தாள்கள், பென்சில்கள் (2B, 4B, 6B, 10B), கரி, பஸ்ரல் வர்ணம், பல முறைகளில் இரேகைகளால் வரையப்பட்ட சித்திரங்கள்

DRAFT

**கற்றற் பேறுகள் :**

- பலகை மீது வைக்கப்பட்டுள்ள பொருட்களின் வடிவங்களையும் வேறுபாட்டுத் தன்மையையும் விபரித்துக் கூறுவார்.
- அளவுப் பரிமாணம் பற்றிய பரந்தறிவுடன் பொருட்களை இரேகைகளால் வரைவார்.
- பல ஊடகங்களை உபயோகித்து தடித்த மென்மையான இரேகைகளால் பொருட்களின் வடிவம், முப்பரிமாண இயல்பு மேற்பரப்புத் தன்மை என்பவற்றை வெளிப்படுத்துவார்.
- நிர்மாணிப்புகளை மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறை செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- பலகை மீது கண் மட்டத்துக்குக் கீழே வைக்கப்பட்ட பொருட்களை அவதானித்தல்
- பொருட்களின் வடிவத்தினதும் மேற்பரப்புத் தன்மையினதும் வேறுபாடு
- பொருட்களின் வடிவம், முப்பரிமாண இயல்பு என்பன தெளிவாகத் தோன்ற ஒளி செல்வாக்குச் செலுத்தும் விதம்
- பொருட்களைப் பார்த்து வரையும் போது அதற்குரிய கோட்பாடுகளை உபயோகித்தல். (அளவு, பரிமாணம், தூரநோக்கு, முப்பரிமாண இயல்பு, மேற்பரப்புத் தன்மை, கண்மட்டம் என்பன)

- பொருட்களின் முப்பரிமாணத் தன்மையையும் குண இயல்புகளையும் வெளிப்படுத்தப் பென்சில் மற்றும் வேறு ஊடகங்கள் என்பன மூலம் இரேகைகளின் பல்வகைத்தன்மையையும், ஊடகங்களைக் கையாளும் வேறுபட்ட முறைகளையும் உபயோகித்தல்.

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பொருட்களைப் பார்த்து வரையப் பொருத்தமானவாறு வகுப்பறையிலுள்ள மேசை, கதிரைகளை அரை வட்டமாக ஒழுங்குபடுத்துக.
- பலகை மீது கண் மட்டத்துக்குக் கீழே இருக்குமாறு பொருட்களை ஏற்ற விதத்தில் ஒழுங்கிணைக்குக.
- பொருள்களின் வடிவத்தையும் மேற் பரப்புத்தன்மையையும் அவதானித்து அவை பற்றி விளக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க.
- பொருள்கள் மீது ஒளிபடும் விதத்தினடிப்படையில் அவற்றின் முப்பரிமாணத் தன்மை வர்ணங்கள், வடிவமைப்பு என்பன தோன்றும் விதத்தை விளக்குக.
- மாதிரிச் சித்திரங்கள் மூலம் பல் ஊடகங்களை உபயோகிக்கும் விதம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- கையைச் சுயாதீனமாக அசைத்து ஓவியங்களை வரைய மாணவர்களைப் பணிக்க.
- பொருட்களின் அடிப்படையான கேத்திர கணித வடிவத்தை இனங்கண்டு, அவற்றின் வெளிப்புறத் தோற்றத்தை வரைய வழிகாட்டுக.
- தடிப்பான இரேகைகள், மென்மையான இரேகைகள் போல நிற வேறுபாடுகளுடனான பல வகை இரேகைகளைக் கொண்டு பொருட்களின் வடிவத்தையும் முப்பரிமாணத் தன்மையையும் வெளிக்கொணரச் செய்க.
- பொருட்களின் குண இயல்புகளை வெளிக்கொணர இரேகைகளைக் கையாள வேண்டிய நுட்ப முறைகளின் விதங்களைக் காண்பிக்குக.
- பல ஊடகங்களை உபயோகித்து மேலதிக பயிற்சிகளில் ஈடுபடச் செய்க.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பொருட்களில் காணப்படும் பல்வகைத் தன்மையை அவதானிக்க.
- அளவுப்பரிமாணம் எனும் இயல்புகளுக்கிணங்க இரேகைகளால் பொருட்களை வரைக.
- பொருட்களின் முப்பரிமாணத்தன்மை அதன் இயல்பு என்பன இரேகைகளின் தன்மையைக் கொண்டு வெளிப்படுத்துக.
- ஊடகங்களுக்குப் பொருந்தும் நுட்பமுறைகளை உபயோகித்து வரையும் திறனை வெளிப்படுத்துக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

2.1.2 பெட்டியொன்றும் அதன் ஒரு மூலை மறையும் விதத்தில் தொங்கவிடப்பட்ட பூக்களுடனான துணியொன்றையும் கற்றறிவோம்.
(2 பாடவேளைகள்)

2.1.3 அரைவாசிக்கு நீர் நிரப்பிய கண்ணாடிப் போத்தல் ஒன்றுக்குள் இடப்பட்ட ஐந்து இலைகளுடனான குறோட்டன் கிளையொன்றைக் கற்றறிவோம். (2 பாடவேளைகள்)

2.1.4 பீங்கானொன்றில் வைக்கப்பட்ட ஒரு துண்டு வெட்டி அகற்றப்பட்ட வத்தகைப்பழம் ஒன்றைக் கற்றறிவோம். (2 பாடவேளைகள்)

2.1.5 கைப்பிடியுடனான தேநீர்க் கோப்பையையும் சிறிய மட்குடமொன்றையும் கற்றறிவோம்.
(2 பாடவேளைகள்)

**தேர்ச்சி 2.0 : சுற்றாடலில் காணப்படும் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியமாக வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : இயற்கை, செயற்கைப் பொருட்களை ஒருங்கிணைத்து ஓவியமாக வரைவார்.**

**செயற்பாடு 2.2.1 :** வெள்ளைத் தாள் ஒன்றினால் மூடப்பட்ட பெட்டியொன்றும் அதன் மீது விரித்துத் தொங்கவிடப்பட்ட பூக்களுடனான வர்ணத் துணித்துண்டொன்றும் அரைவாசிக்கு நீர் நிரப்பப்பட்ட கண்ணாடிப் போத்தலுக்குள் இடப்பட்ட வர்ண இலைகளுடனான குறோட்டன் கிளையொன்றும் கோப்பை யொன்றில் வைக்கப்பட்ட 1/4 பங்கை விடக் குறைவான பகுதி வெட்டியகற்றப்பட்ட வர்த்தகைப்பழம் ஒன்றும் வரைவோம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- மேலே உள்ள செயற்பாட்டுக்குரிய பொருட்கள்
- பொருட்களை வைக்கப்பொருத்தமான பலகை ஒன்று
- வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான காகிதத் தாள்கள்
- தூரிகைகளும் வர்ணங்களும்
- பல வர்ண ஊடகங்களை உபயோகித்து வரையப்பட்ட மாதிரி ஓவியங்கள், நிழற்படங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பலகை மீது வைக்கப்பட்டுள்ள பொருட்களின் தன்மையை விபரித்துக் கூறுவார்.
- அளவுப்பரிமாணம், கண்மட்டம், தூரநோக்கு, இடப்பரப்பை உபயோகித்தல் என்பவற்றைச் சரியாகக் கருதி பொருட் கூட்டத்தை இரேகைகளால் சித்திரத்தை வரைவார்.
- பொருட் தொகுதிக்குப் பொருந்தும் விதத்தில் அளவிடைக்கும் கண் மட்டத்துக்கும் ஏற்ற விதத்தில் பலகையை வரைவார்.
- பல வர்ண ஊடகங்களுக்குப் பொருந்தும் நுட்ப முறைகளை உபயோகித்து, ஒளி நிழல் காண்பித்து, முப்பரிமாணத் தன்மை, மேற்பரப்புத் தன்மை, தூரநோக்கு எனும் பண்புகளை வெளிப்படுத்தி பொருட் தொகுதியை வர்ணம் தீட்டுவார்.
- பொருட் தொகுதி தெளிவாகத் தெரியும் விதத்தில் பின்னணிக்கு வர்ணம் தீட்டுவார்.
- பூர்த்தி செய்யப்பட்ட ஓவியத்தை நயந்து மதிப்பிடுவர்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

DRAFT

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- கண் மட்டத்துக்குக் கீழே அமையும் விதத்தில் பலகை மீது பொருட் தொகுதியை ஒருங்கிணைத்தல்.
- பொருட்களின் வடிவங்களும் பண்புகளும் வேறுபடும் விதம்
- ஒருங்கிணைக்கப்பட்ட பொருட் தொகுதியை ஓவியமாக வரையும் போது பின்பற்ற வேண்டிய கோட்பாட்டு முறைகள் (அளவுப்பரிமாணம், தூரநோக்கு, முப்பரிமாணத் தன்மை, மேற்பரப்புத் தன்மை, தளப் பிரயோகம், கண்மட்டம்)
- பல வர்ண ஊடகங்களுக்குப் பொருந்தும் நுட்பமுறைகள் (நீர் வர்ணம், பெஸ்டல், அக்ரலிக்)
- உபகரணங்களைக் கையாளுதல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- கண் மட்டத்துக்குக் கீழே இருக்கும் படி பலகையொன்றின் மீது பொருட்களை ஒழுங்கிணைக்குக. பின்னணிக்கு வெள்ளைத் தளம் ஒன்றை ஒழுங்குபடுத்துக.
- வகுப்பறையில் உள்ள மேசைகள் கதிரைகளை அரைவட்ட வடிவில் ஒழுங்குபடுத்துக. சகல பொருட்களும் எல்லா மாணவர்களும் பார்க்கக் கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்துக. (பொருட் தொகுதியில் இருந்து 2.5 மீற்றர் அளவு தூரம் இருக்கும் விதத்திலும் ஓர் அரை வட்ட ஒழுங்கில் 15 மாணவர்கள் அடங்கும் விதத்திலும் அவர்களை அமரச் செய்தல் பொருத்தமானது)
- பொருட் தொகுதியைக் குழுவின் சகல மாணவர்களும் பார்க்கக் கூடிய விதத்தில் ஒழுங்குபடுத்துக.
- பொருட் தொகுதியின் வடிவங்கள் பண்புகள் வேறுபடும் விதம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
- ஒளிபடும் விதத்துக்கு ஏற்ப பொருட்களின் வடிவம், முப்பரிமாணத்தன்மை, நிழல் விழும் விதம் பற்றி விளக்குக.
- மாதிரிப் படங்களைக் கொண்டு தளம், இடப்பரப்பு என்பவை சமநிலை பேணும் விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள விதம் வர்ண ஊடகங்கள் பலவற்றில் காணப்படும் தன்மை, உபயோகித்துள்ள நுட்ப முறைகள் எனும் விடயங்களை அவதானித்து ஆராய்ந்தறிய மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- இடப் பரப்பின் உபயோகம் பற்றிய அறிவைக் கொண்டு தளத்தின் சமநிலை பேணப்படும் விதத்தில் பொருட் தொகுதியை இரேகைகளால் வரையத் தேவையான அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- அடிக்கடி அழிப்பானைப் பாவித்து அழிப்பதால், வர்ணம் தீட்டும்போது ஏற்படும் அசௌகரியம் பற்றி விளக்கி, அழிப்பான் உபயோகிப்பதை மிகக் குறைக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி விளக்குக.
- வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்ப முறைகளை உபயோகித்து உரிய கோட்பாடுகளுக்கிணங்கலாகப் பொருட் தொகுதியை வர்ணம் தீட்டும்படி மாணவர்களைப் பணிக்குக.
- பின்னணிக்கு வர்ணம் தீட்டும்போது பொருள் தொகுதி தெளிவாகத் தோற்றமளிக்க வேண்டும் என்பது பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.
- வர்ண ஊடகங்களையும் உபகரணங்களையும் சரியாக கையாளத் தேவையான அறிவுரைகளைப் பெற மாணவர்களுக்கு உதவுக. செயற்பாட்டில் ஈடுபடும்போது நேர முகாமைத்துவம் மீது கவனஞ் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைக்குக.
- மாணவர்களது வரையும் திறனை இனங்கண்டு அவற்றை விருத்தி செய்து கொள்ளத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குக

DRAFT

- பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணிப்புக்களை நயந்து மதிப்பிடச் சந்தர்ப்பமளிக்குக.
- பொருத்தமான விதத்தில் நேர முகாமைத்துவம் செய்து ஒழுங்கிணைத்த பொருள் தொகுதிகளை ஓவியமாக வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பலகை மீது வைக்கப்பட்டுள்ள பொருட் தொகுதியை நன்றாக நோக்குக.
- பொருட் தொகுதியின் வடிவமைப்புக்கு ஏற்ற தளத்தை உபயோகித்து பென்சிலால் ஒழுங்கிணைக்கப்பட்ட பொருட் தொகுதியை வரைக.
- பொருட் தொகுதியை வரையும் போது அளவு, பரிமாணம், தூர நோக்குப் பண்புகள், கண் மட்டம் என்பவை மீது அவதானஞ் செலுத்தி வரைதலில் ஈடுபடுக.
- தூர நோக்குப் பண்புகளைச் சரியான விதத்தில் காண்பித்து வரைதற் தாளில் பொருட் தொகுதியினை வரைக.
- முப்பரிமாணத் தன்மை, பொருள்களின் மேற்பரப்புத் தன்மை என்பவற்றை வர்ண ஊடகங்களைக் கொண்டும், உரிய நுட்ப முறைகளைக் கொண்டும் ஒளி நிழல் காண்பிப்பதன் மூலம் வெளிப்படுத்துக.
- பொருட் தொகுதி தெளிவாகத் தெரியும் விதத்தில் பின்னணிக்கு வர்ணங்களை உபயோகிக்குக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

- சதுரமுகி, கனவுரு வடிவங்கள் - வெள்ளைத் தாளினால் சுற்றப்பட்ட பெட்டிகள்
- அலங்காரங்கள் உள்ள அல்லது அற்ற வர்ணத் துணிகள்
- கோளவடிவப் பொருட்கள் - கரப்பந்து/ காற்பந்து, பப்பாசிக்காய், வத்தகைப்பழம் (ஒரு துண்டு வெட்டியகற்றப்பட்டவை/ படாதவை), செவ்விளநீர், அப்பிள், தோடை, அன்னாசி, குடுமியுடனான உரித்த தேங்காய்/ காய் வகைகள் மட்பாத்திரங்கள்
- உருளை வடிவமான பொருட்கள் - போத்தல்/ குவளை/ பேணி/ கோப்பை/ கண்ணாடிக் குவளை
- பூக்களைக் கொண்ட/ பூக்களற்ற விசித்திரமான தாவரங்கள், கிளைகள், (அந்தூரியம், தேமா, அலரி, குறோட்டன், செவ்வரத்தை)
- வெண்களிப் பாத்திரங்கள் - சோசர் (Saucer), பீங்கான், கண்ணாடிப் பாத்திரங்கள் (Bowl), தாம்பாளம், மேசைக்கத்திகள், கடதாசிச்சுருள்கள், தூரிகைகள்
- மேற்குறிப்பிடப்பட்ட பல வடிவங்களையும் பல இயல்புகளையும் கொண்ட இயற்கை, செயற்கைப் பொருட்களுள் சிலவற்றைத் தெரிவு செய்து பொருட் தொகுதியை ஒழுங்கிணைத்து வரையும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- ஒரு செயற்பாட்டுக்கு 4 பாடவேளைகள் வீதம் 2.2.2, 2.2.3, 2.2.4, 2.2.5, 2.2.6, 2.2.7, 2.2.8 செயற்பாடுகளுக்குரிய செயற்பாடுகளை ஒழுங்கமைக்குக.
- பொருட் தொகுதியை ஒழுங்கிணைக்கையில் சதுரமுகி அல்லது கனவுரு வடிவப் பொருளொன்று, மரக்கிளையொன்று, தாவரமொன்று, துணித்துண்டொன்று, கோள வடிவப் பொருளொன்று, காயொன்று, உருளை வடிவப் பொருளொன்று என்பவற்றின் பல்வேறுபட்ட ஆறு அல்லது ஏழு0 பொருட்களைத் தெரிவு செய்து அவற்றை ஒழுங்கிணைக்க வேண்டும்.

DRAFT

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்கான அலங்கார நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : ஆபரணங்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.1.1 :** நவ நாகரீக ஆபரணத் தொகுதியொன்றை நிர்மாணிப்போம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- நவ நாகரீக ஆபரணங்களை உள்ளடக்கிய உருவப் படங்கள், இறுவட்டுக்கள், அலங்கார ஆபரணத் தொகுதிகள், வரைதற் தாள்கள், பென்சில்கள், தூரிகைகள், கேத்திர கணித உபகரணங்கள், வர்ண ஊடகங்கள்

**கற்றற் பேறுகள் :**

- வெளிக்களக் கற்றல் மூலமும் நூல் நிலையங்களை உபயோகித்தும் செயற்பாட்டுக்குரிய தகவல்களைச் சேகரிப்பார்.
- சுற்றுப் புறச் சூழலைக் கற்றறிந்து ஆபரணங்களுக்காகப் புதிய வடிவங்களைத் திட்டமிடுவார்.
- திட்டமிடப்படும் சித்திரங்களை வரைவார்.
- சீரான முறையில் கற்றறிந்து பெற்ற தகவல்களைத் திரட்டி இறுதி விடயத்தைக் கண்டறிவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

DRAFT

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- ஊடகங்கள் பலவற்றை உபயோகித்து நிர்மாணிக்கப்பட்ட (சிரட்டை, பிளாஸ்ரிக், களிமண், சிப்பி, மணி வகைகள், கடதாசிகள்) மாதிரி ஆபரணத் தொகுதிகள், உருவப்படங்கள் என்பவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- கீழே உள்ள விடயங்கள் வெளிப்படும் விதத்தில் அந்நிர்மாணிப்புகள் பற்றிய கலந்துரையாடலொன்றை நிகழ்த்துக.
    - வரலாற்றுத் தகவல்கள்
    - தற்போதைய தகவல்கள்
    - ஆபரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் தகவல்கள்
    - பெண், ஆண், சிறுவர் என்பவருக்கு ஏற்ற விதத்திலும் அவர்களது வயதுக்கு ஏற்ற விதத்திலும் காணப்படும் ஆபரணங்களின் வேறுபாடு
    - ஆபரணங்களின் பல்வகை வடிவங்கள்
- இப்பாடம் செயற்றிட்ட வடிவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.

- செயற்பாட்டின் ஒவ்வொரு படிமுறையும் மதிப்பீட்டுக்கு உட்படும் என்பதைப் பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.
- கண்டறிந்து பதியப்பட்ட தகவல்களும் படங்களும் உள்ளடக்கிய செயற்றிட்ட அறிக்கையொன்றைச் செயற்பாட்டின் இறுதியில் சமர்ப்பிக்க வேண்டும் என்பது பற்றி விளக்குக.

**செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

- ஊடகங்கள் பலவற்றினால் (சிரட்டை, பிளாஸ்ரிக், களிமண், சிப்பி, மணிவகைகள், கடதாசி) நிர்மாணிக்கப்பட்ட ஆபரணத் தொகுதிகளையும் நிழற் படங்களையும் காண்பித்து ஆய்வொன்றை நடத்த மாணவர்களைப் பணிக்குக.

  வரலாற்றில் காணப்பட்டதும், நடைமுறையில் காணப்படுகிறதுமான ஆண், பெண் இரு பாலாருடைய ஆபரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பற்றி ஆராயந்து, தகவல்களைத் திரட்டும் படி மாணவர்களைப் பணிக்குக.
- அவர்கள் கண்டறிந்த விடயங்களை வகுப்பில் முன்வைக்க வாய்ப்பளிக்குக.
- சூழலில் இருந்து விடயங்களை ஆராய்ந்தறியும் போது, கண்டறிந்து கொண்ட பல்வேறு வடிவங்களுடைய பெண்களின் ஆபரணத் தொகுதியொன்றை (மாலை, தோடு, வளையல், மோதிரம் என்பவை அடங்கலாக) நிரமாணிக்கத் திட்டமிட மாணவர்களுக்கு வழிகாட்டுக. அப்போது கீழே உள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்துக.
  - உபயோகப்படுத்த உத்தேசித்துள்ள நிகழ்வும் அதனை நிர்மாணிக்கப் பயன்படுத்தும் ஊடகமும்
  - ஆபரணத் தொகுதியைத் திட்டமிடும் போது அலங்கார வேலைப்பாடுகளின் கோட்பாடுகளான (சந்தம், சமநிலைத் தன்மை, ஒத்திசைவு, ஒருமைப்பாடு) எனும் விடயங்களில் கவனஞ் செலுத்துதல்.
  - மானிட அங்க இலட்சணங்களைக் கருதி ஆபரணங்களைத் திட்டமிடுதல்
  - ஆக்கபூர்வமான வடிவங்களைத் தெரிவு செய்தல்
  - வடிவமைப்புகளின் மேற்பரப்பில் அழகிய அலங்கார வேலைப்பாடுகளை இடல்
  - மாணவர்கள் நிர்மாணித்த பலவித திட்டமைப்புகளில் எதேச்சையாக ஒன்றைத் தெரிவு செய்ய அறிவுரை வழங்குதல்.
  - தெரிவு செய்யப்பட்ட திட்டமைப்புக்கான ஓவியத்தை வரைந்து வர்ணம் தீட்ட மாணவர் களைப் பணிக்க.
  - ஆபரணத் தொகுதியை நிர்மாணிக்க உத்தேசித்திருக்கும் ஊடகத்தின் பண்புகள் தோன்றும் விதத்தில், ஓவியத்தை முப்பரிமாண இயல்புகளுடன் வரையவும் வர்ணமிடவும் அறிவுறுத்துக.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- வெளிக்கள கற்றல் மூலமும் நூலகத்தையும் உபயோகித்தும் அலங்கார வேலைப் பாடுகளைக் கொண்ட ஆபரணங்களின் தகவல்களைத் திரட்டிக் குறிப்பிடுக.
- சூழலில் காணப்படும் பலவித வடிவங்களை ஆராய்ந்தறிந்து அலங்கார வேலைப்பாடுகள் கொண்ட ஆபரணத் தொகுதியொன்றை நிர்மாணிக்கப் பரும்படிப் படங்களை வரைக.
- அலங்கார வேலைப்பாடுகளின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் உபயோகித்து தெரிவு செய்யப்பட்ட திட்டமைப்புச் ஓவியத்தை வரைக.

DRAFT

- முப்பரிமாண இயல்புகளுடன் ஆபரணத் தொகுதி, நிர்மாணிக்க உத்தேசிக்கும் ஊடகத்தின் தன்மை புலப்படும் விதத்தில், வர்ண ஊடகங்களுக்கு உகந்த நுட்ப முறைகளில் வர்ணம் தீட்டுக.
- செயன்முறைச் செய்பாடுகளாக ஆபரணத் தொகுதியொன்றை அமைப்பதாயின் அதற்காக மரத்தூசி, கடதாசிக் கூழ், பாண் கூழ், களிமண் போன்ற ஊடகங்களை உபயோகிக்கலாம்.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

பின்வரும் செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடுத்துக

3.1.2 சீகிரியா பெண் ஓவியங்களின் ஆபரணங்களை உற்று நோக்கிய பின் மணப்பெண் ஒருவருக்கான ஆபரணத் தொகுதியொன்றைத் திட்டமிட்டு வரைந்து வர்ணம் தீட்டுக.
(4 பாடவேளைகள்)

DRAFT

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்கான அலங்கார நிர்மாணிப் புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : ஆடைகளுக்கான புதிய நாகரீக வடிவங்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.2.1 :** நவநாகரீக நிர்மாணிப்புகளுக்குப் பொருத்தமான மனித உருவங்களை வரைவோம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பல கலாசாரங்களுக்குரிய ஆண், பெண், சிறுவர்களின் நவ நாகரிக ஆடைகளின் நிழற் படங்கள், உருவப் படங்கள், இறுவெட்டுக்கள்
- மனித எலும்புக்கூடொன்றைக் குறிக்கும் உருவப்படம்
- பொதுவான மனித உருவங்கள் (பெண், ஆண், சிறுவர்
- பெண், ஆண் (சிறுவர், இளைஞர்) நவீன பாணியிலான உருவப் படங்கள்
- சித்திரம் வரையும் தாள்கள்
- பென்சல்கள்
- அளவுகோல்கள்

DRAFT

**கற்றற் பேறுகள் :**

- அக்கடமிக் மனித உருவங்களுக்கும் நவநாகரிக மாதிரியமைப்புகளுக்குமாக வரையப்படும் மனித உருவங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அவை தொடர்பான அறிவுடன் விளக்குவார்
- நவ நாகரிக பாணியிலான பல உடல் நிலைகளைக் குறிக்கும் ஆண், பெண் இருபாலாரின் உருவங்களை வரையும் திறனை வெளிப்படுத்துவார்.
- அன்றாடம் உபயோகப்படுத்தும் நவநாகரிகம் பற்றிக் கற்றறிவார்

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- பல்வேறுபட்ட கலாசாரங்களுக்குரிய நவ நாகரீக ஆடைகள்
- நவ நாகரீக ஆடைகளின் வேறுபாடுகள்
- பொதுவான மனித உருவங்களினதும் நவ நாகரீக மனித உருவங்களினதும் வேறுபாடுகள் (சிறுவர், இளைஞர்), (ஆண், பெண்) வேறுபாடுகள்
- பல உடல் நிலைகளும் அவற்றின் அசைவு, சமநிலைத்தன்மை, சந்தம்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- நவ நாகரீக ஆடைகளுடனான மனிதர்களின் உருவப்படங்கள், நிழற்படங்கள், இறுவெட்டுக்கள் என்பவற்றை நோக்கி நவீன பாணி ஆடைகளுடனான மனித உருவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.
- நவ நாகரீக ஆடைகளுக்காக மனித உருவங்களை வரையும் போது அவை பொதுவாக உள்ள மனித உருவங்களை விட உயரம் கூடும் படி அவற்றின் அளவீடுகள் மாறும் விதத்தை, மாதிரி உருவங்கள் மூலமாக விளக்குக.
- பெற்றுக்கொண்ட நவநாகரீக உருவங்களை அவதானித்தறியச் சந்தர்ப்பம் வழங்குக.
- அகலம் குறைந்த தோள்களும், அகன்ற இடையும், நீளம் கூடிய கை கால்களும், கூரான நாடியைக் கொண்ட முகமும் உள்ளதாக நவ நாகரிக பெண் உருவமொன்றை வரையத் தேவையான அறிவுறுத்தல்களை மாதிரிப் படங்களைக் காண்பிப்பதன் மூலம் வழங்குக.
- நவ நாகரீக ஆண் உருவங்கள், அகலமான தோள்களும், ஒடுங்கிய இடையும், தோள்களிலிருந்து இடுப்பு வரை உடலினமைப்பு V எழுத்து வடிவிலும் கட்டம் போன்ற அமைப்புடைய சற்று அகன்ற முகமும் உடையதாக வரைய வேண்டும் என்பதை மாதிரிப் படங்களின் துணையுடன் விளக்குக.
- பெண் உருவங்களின் இரு கைகளினதும் முழங்கைப் பகுதிக்கு கீழ்ப்பகுதி உடலில் இருந்து விலகியும் ஆண் உருவங்களின் இரு கைகளினதும் முழங்கைக்கு கீழ்ப்பகுதி உடலை நோக்கியும் இருக்குமாறு மனித உருவங்கள் வரையப்படும் என்பதை காண்பிக்க.
- பல கோணங்களில் இருந்து நோக்கும்போது நடக்கிற உடல் நிலையைக் குறிக்கும் உருவமொன்றின் பாதங்கள் (முன்பக்கத் தொற்றம், பின்பக்கத் தோற்றம், பக்கத் தோற்றம்) நிலத்தைத் தொடும் விதத்தை விளக்குக.
- நவ நாகரீக ஆண், பெண் உருவங்களை வரையும்போது சந்தர்ப்பத்திற்குப் பொருந்தும் விதத்தில் சிகை அலங்காரமும் நவீன பாணிக்கமைய வரையலாம் என்பதைக் காண்பிக்குக.
- நவ நாகரீக எல்லா உருவங்களும் சந்தம், சமநிலை எனும் தன்மைகளுடன் அசைகிற உடல் நிலையைக் கொண்டிருத்தல் அவ்வுருவங்கள் அதிகக் கவர்ச்சியுடன் இருக்கக் காரணமாகிறது என்பதைக் காண்பிக்க.
- உடல் நிலைகளை திருத்தமான வடிவமைப்புடன் வரைய வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.
- நவ நாகரீக ஆண், பெண் உருவங்களை வரையச் செய்க.
- தேர்ச்சி மட்டம் 3. 2 க்கான நவ நாகரீக ஆடை அலங்கார நிர்மாணிப்புகள் தொடர்பான தகவல்களையும் அவற்றுக்குரிய பரும்படிப் படங்களையும் திரட்டிக் கோவையாக முன்வைக்கும்படி மாணவர்களை அறிவுறுத்துக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- காலத்துக்கமைய நவ நாகரீக ஆடைகளில் உண்டான மாற்றங்களை உதாரணங்களுடன் விளக்குக.
- அக்கடமிக் மனித உருவங்களுக்கும் நவநாகரிக மாதிரியமைப்புகளுக்குமாக வரையப்படும் மனித உருவங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அவை தொடர்பான அறிவுடன் விளக்குவார்
- முன்பக்கத் தோற்றத்துடனும் பக்கத் தோற்றத்துடனும் ஆண், பெண் நவநாகரீக மனித உருவங்கைள வரைக.
- நவ நாகரீக மனித உருவின் சந்தம், அசைவு, சமநிலைத் தன்மை எனும் பண்புகளை இரேகைகள், தளவடிவங்கள், வர்ணங்கள் என்பன உபயோகித்து வெளிப்படுத்துக.
- தேர்ச்சி மட்டம் 3.2 க்கான தகவல்கள், உருவப் படங்கள் எனும் விடயங்களை உள்ளடக்கிய கோவையொன்றை முன்வைக்க.

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்கான அலங்கார நிர்மாணிப் புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : ஆடைகளுக்கான புதிய நாகரீக வடிவங்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.2.2 :** விழா நிகழ்வொன்றுக்கான ஆண், பெண் இருபாலாரின் நவ நாகரீக ஆடைகளை நிர்மாணிப்போம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பலவித கலாசாரங்களுக்குரிய ஆண், பெண், சிறுவர்களின் நவ நாகரீக ஆடைகள் காணக்கூடிய நிழற் படங்கள், இறுவட்டுக்கள்
- சித்திரம் வரையும் தாள்கள்
- பென்சில்கள், Felt Pen, தூரிகைகள்
- பல வர்ண ஊடகங்கள் (பெஸ்டல், நீர் வர்ணம், நிறப் பென்சில்கள்)

**கற்றற் பேறுகள் :**

- பலவித கலாசாரங்களுக்கான நவ நாகரீக ஆடைகளை ஆராய்ந்தறிவார்.
- பல்வேறுபட்ட விழாச் சந்தர்ப்பங்களில் அணியப்படும் அவற்றுக்குப் பொருத்தமான நவ நாகரீக ஆடைகளைப் பற்றிக் கலந்துரையாடுவார்.
- விழா நிகழ்வொன்றுக்குப் பொருந்தும் ஆண், பெண் இரு பாலாரின் நவ நாகரீக ஆடைகளை நிர்மாணிப்பார்.
- மனித உடலமைப்பின் தன்மையை அறிந்து அலங்கார வேலைப்பாடுகளின் கோட்பாடுகளையும் உபயோகித்து நவ நாகரீக ஆடைகளைத் திட்டமிடுவார்.
- பொருத்தமான வர்ண ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் உபயோகித்து வர்ணம் தீட்டுவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள், தனிச்செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- பல்வேறுபட்ட கலாசாரங்களுக்குரிய நவ நாகரீக ஆடைகள்
- பல விழா நிகழ்வுகளுக்குப் பொருந்தும் நவ நாகரீக ஆடைகள்
- பல மெய் நிலைகளைக் கொண்ட ஆண், பெண் இரு பாலாரினது நவ நாகரீக உருவங்கள்

- சந்தம் சமநிலை, ஒத்திசைவு, ஒருமைப்பாடு என்பன நவ நாகரீக உருவமொன்றில் தோன்றும் விதம்
- பல வர்ண ஊடகங்கள் (பெஸ்ரல், நீர் வர்ணம், அக்றலிக், நிறப் பென்சில்கள்)
- வர்ணம் தீட்டும் நுட்ப முறைகளைப் பொருத்தமாக உபயோகித்தல், நீர் வர்ணத்தை அடர்த்தி கூடிய குறைந்த விதங்களில் உபயோகித்தல் பெஸ்ரல், நீர் வர்ணத்தைக் கலப்பூடகமாக உபயோகித்தல்.
- நவ நாகரீக ஆடை நிர்மாணிப்பின் போது உபயோகிக்கப்படும் துணி வகை, அவற்றின் வர்ணம், கோலங்கள், மேற்பரப்புத் தன்மை

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பல்வேறுபட்ட கலாசாரங்களுக்குரிய நவ நாகரீக ஆடைகள் பற்றிய விடயங்களை மாதிரி உருவப் படங்களை ஆதாரமாகக் கொண்டு கலந்துரையாடலொன்றை நிகழ்த்துக.
- பல விழா நிகழ்வுகளின்போது அவற்றின் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான விதத்தில் நவ நாகரீக ஆடைகள் வேறுபடுவதை விளக்குக.
- ஆண், பெண் இரு பாலாரும் நவ நாகரீக விடயங்களில் அக்கறை கொண்டுள்ளனர் என்பதைக் காண்பிக்குக.
- சாதாரண உருவங்களுக்கும் நவ நாகரீக உருவங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை உருவப் படங்களைக் கொண்டு விளக்குக. அத்துடன் ஆண், பெண் இருபாலாரின் நவ நாகரீக உருவங்களின் வேறுபாட்டையும் படங்களைக் கொண்டு விளக்குக.
- மனித உடல் நிலையின் தன்மையையும் விழா நிகழ்ச்சியின் சந்தர்ப்பத்தையும் கருதி அதற்குப் பொருந்தும் விதத்தில் நவ நாகரீக ஆடைகளை வரைய வேண்டிய அறிவுரைகளை மாணவர்களுக்கு வழங்குக.
- ஆடைகளைத் திட்டமிடும்போது ஆடைகளின் மேற்பரப்புத் தன்மை, அவற்றின் அலங்கார வேலைப்பாடுகள் என்பன மீது கவனம் செலுத்தும் படியான அறிவுறுத்தல்களையும் மாணவர்களுக்கு வழங்குக
- நவ நாகரீகத்தின் தன்மைக்கு ஏற்ப வர்ணங்களை பொருத்தமாக உபயோகிக்கச் செய்க
- பல வர்ண ஊடகங்கள் உபகரணங்கள் நுட்பமுறைகள் என்பவற்றை உபயோகிக்கத் தேவையான வழிகாட்டல்களை வழங்குக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பல்வேறுபட்ட கலாசாரங்களுக்குரிய நவ நாகரீக ஆடைகளை அறிமுகப்படுத்துக.
- நவ நாகரீக நிர்மாணிப்புகளில் ஈடுபடும் போது கவனிக்க வேண்டிய விடயங்களை விளக்குக.
- நுட்ப முறைகளையும், ஊடகங்களையும் உரிய முறையில் உபயோகித்து ஆண், பெண் இரு பாலாருக்குமான நவ நாகரீக ஆடைகள் சிலவற்றை நிர்மாணிக்க.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் :

- தேர்ச்சி மட்டம் 3.2 க்குரிய கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளில் ஈடுபடச் செய்க.

3.2.3 பாடசாலையின் கீழைத்தேய, மேற்கத்தேய வாத்தியக் குழுவுக்கான நவ நாகரீக ஆடையொன்றை நிர்மாணிப்போம் (04 பாடவேளைகள்)

3.2.4 ''சூழலின் அழகு ராணி'' எனும் போட்டியில் பங்கு கொள்ள இருக்கும் யுவதி ஒருவருக்குப் பொருத்தமான நவ நாகரீக ஆடையொன்றை நிர்மாணிப்போம் (4 பாடவேளைகள்)

3.2.5 பாரம்பரிய நடனமொன்றுக்குப் பொருத்தமான ஆடைத் தொகுதியொன்றை நிர்மாணிப்போம். (4 பாடவேளைகள்)

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்கான அலங்கார நிர்மாணிப் புக்களில் ஈடுபடுவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 : பல்வேறுபட்ட தேவைகளின்பொருட்டு அலங்காரச் சித்திரங்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.3.1 :** பெண்களின் ஆடைகளுக்குப் பொருத்தமான துணி யொன்றுக்கு அலங்காரமொன்றை நிர்மாணிப்போம்

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- துணிகள், கடதாசிகள், சாடிகள் என்பவற்றில் காணப்படும் பரவுருவ அலங்காரங்களைக் கொண்ட மாதிரிச் சித்திரங்களும் நிழற்படங்களும்
- கேத்திர கணித உபகரணங்கள், பிரதியிடத் தேவையான தாள்கள், சித்திரம் வரையும் தாள்கள்
- பென்சில்கள், தூரிகைகள், வர்ண ஊடகங்கள் (பெஸ்ரல், நீர் வர்ணம், நிறப் பென்சில்கள்)

**கற்றற் பேறுகள் :**

- பாவனைத் தேவைகளுக்காக பரவுருவ அலங்காரங்களை உபயோகப்படுத்தலாம் என்பது பற்றி உதாரணங்களுடன் விளக்குவார்.
- பரவுருவ அலங்காரமொன்றை நிர்மாணிக்கும் விதத்தை விளக்குவார்.
- அலங்கார அலகொன்றை அல்லது பலவற்றை உபயோகித்துப் பரவுருவ அலங்கார வேலைப்பாடுக்கான பரும்படி படத்தை வரைவார்.
- அச்சுத் தொழிலுக்குப் பொருந்தும் வித்தில் பரவுருவ அலங்காரத்தைத் திட்டமைப்பார்.
- குறிப்பிட்ட அளவீட்டுடன் அலங்கார அலகொன்றை இட்டு கோலமொன்றை அமைத்துக் காட்டுவார்.
- சீத்தைத் துணிக்கு உகந்த வர்ணங்களைத் தெரிவு செய்து வர்ண ஊடகங்களக்குப் பொருந்தும் நுட்ப முறைகளையும் உபயோகித்து பரவுருவ அலங்காரத்தை வர்ணம் தீட்டுவார்.
- பாவனைப் பொருட்களை அலங்கரிப்பதற்காக பரவுருவ அலங்கார நிர்மாணங்களை உபயோகிப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

DRAFT

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- பலவிதமான அலங்கார அலகுகளைப் பரவுருவ அலங்காரத்துக்கு இடல்
- பாவனைத் தேவைக்காக அலங்கார வேலைப்பாடுகளை உபயோகித்தல்
- அச்சுத் தொழிலுக்காகப் பரவுருவத்தை திட்டமைக்கும் விதம்
- அலங்கார அலகுகளை திரும்பத்திரும்ப இடுவதன் மூலமும், சம இடைவெளியைப் பேணுவதன் மூலமும் பரவுருவ அலங்காரத்தை அமைத்தல்
- அலங்கார அலகுகளைப் பரவுருவமாக வரையும் போது அதில் சந்தம், சமநிலை, ஒத்திசைவு, ஒருமைப்பாடு என்பவற்றை வெளிக்கொணரச் செய்தல்
- புதிய அலங்கார வேலைப்பாடுகளை நிர்மாணித்தல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பரவுருவ அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்ட துணி, கடதாசி, சாடி என்பவற்றை காட்சிப்படுத்துவதுடன் அவை பற்றிக் கலந்துரையாடுக.
- பரவுருவ அலங்காரம் என்பது அலங்கார அலகுகளை திரும்பத் திரும்ப இடுவதால் அமைக்கப்படும் ஒரு நிர்மாணிப்பென மாதிரி உருவப் படங்கள் மூலம் விளக்குக.
- பாவனைத் தேவைக்காக அலங்காரங்களை நிர்மாணிக்கும்போது அலங்கார அலகொன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவீட்டு முறையில் இடுவதால் கோல வடிவமொன்றை உருவாக்கலாம் எனபதை விளக்குக.
- அலங்கார அலகுகள் பலவற்றை நிரமாணிக்க வாய்ப்பளித்து அதிலிருந்து ஒன்றை அல்லது பலவற்றைத் தெரிவு செய்து பரவுருவ அலங்காரமொன்றை நிர்மாணிக்க வழி காட்டுக.
- அச்சுத் தொழிலுக்காக பரவுருவ அலங்காரங்களை வரையும் போது தளம் செவ்வக வடிவத்தைக் கொள்ளுதல் அச்சுத்தொழிலை இலகுபடுத்துமென வழிகாட்டிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- அலங்கார அலகுகள் இடும்போது அவ்வலகின் பாதியுருவத்துக்கு நேர் எதிரே மீதிப் பாதியை வரைந்தால் ஒழுங்கு முறையிலமைந்தப் பரவுருவ அலங்காரமொன்று பெறப்படும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
- தளத்தினுள் தெரிவு செய்யப்பட்ட அலங்கார அலகினைப் பிரதி செய்து பரவுருவமாக வரைந்து கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குக.
- அலங்காரத்தின் தன்மை, தேவை, அலங்காரத்தை அச்சுப் பதிக்கும் ஊடகம் என்பவைக்கு ஏற்ற விதத்தில் வர்ணங்களை உபயோகிக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறி வர்ணம் தீட்ட வழிகாட்டுக.
- பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணிப்புகளை மதிப்பிட வாய்ப்பளிக்க.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- பரவுருவ அலங்காரம் என்றால் என்ன என்பதைக் கூறுக.
- பரவுருவ அலங்காரமொன்றை நிர்மாணிக்கும் விதத்தை விபரிக்க.
- சீத்தை அலங்காரத்துக்குப் பொருத்தமான அலங்கார அலகொன்றை அல்லது பலவற்றை நிர்மாணிக்க.
- தெரிவு செய்யப்பட்ட அலகுகளைக் கொண்டு அச்சுத் தொழிலுக்கு ஏற்ற விதத்தில் பரவுருவ அலங்காரத்துக்குத் திட்டமிட்ட படமொன்றை வரைக.

DRAFT

- பரவுருவத் தன்மைக்கிணங்க ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவீடுகளுக்கமையச் சந்தத்துடன் கோலவடிவத்தை அமைத்துக் கொள்க.
- பொருத்தமான வர்ணங்களைத் தெரிவு செய்து, உபயோகிக்கும் வர்ண ஊடகத்துக்கு ஏற்ற நுட்ப முறைகளுடன் பரவுருவ அலங்காரத்தை வர்ணம் தீட்டுக.

**உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் :**

- தேர்ச்சி மட்டம் 3.3 க்குரிய கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடச் செய்க.

3.3.2 ஆக்கபூர்வமான விதத்தில் அமைந்த "TABLE MAT" (மேசை காப்புத் துண்டு) ஒன்றுக்கும் பொருத்தமான முழுத்தள அலங்கார வேலைப்பாடொன்றை நிர்மாணிப்போம்.

(03 பாடவேளைகள்)

3.3.3 திரைச் சேலைக்காக செங்குத்தாக அமையும் பொருத்தமான பரவுருவ அலங்கார மொன்றை நிர்மாணிப்போம்.

(03 பாடவேளைகள்)

3.3.4 அரூப வடிவங்கள் கிடையாக இருக்கும் விதத்தில் சேலைக் கரைக்காக பரவருவ அலங்கார வேலைப்பாடொன்றை நிர்மாணிப்போம்.

(03 பாடவேளைகள்)

DRAFT

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்கான கிராபிக் ஆக்கங்களைப் படைப்பார்**

**தேர்ச்சி மட்டம் 4.1 : பரவலான தொனிப்பொருளுக்கமைய சுவரொட்டிகளை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 4.1.1 :** "உற்பத்தித் திறனின் ஊடாக அபிவிருத்தியை நோக்கி" எனும் தொனிப் பொருளில் சுவரொட்டியொன்றை நிர்மாணிப்போம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வேறுபட்ட தொனிப் பொருள்களில் நிர்மாணிக்கப்பட்ட சுவரொட்டிகள், சித்திரம் வரையும் கடதாசிகள், பிரதியிடும் தாள்கள், பென்சில்கள், கேத்திர கணித உபரணங்கள், தூரிகைகள், போஸ்டர் வர்ணங்கள் அல்லது வேறு பொருத்தமான வர்ண ஊடகங்கள்

**கற்றற் பேறுகள் :**

- சுவரொட்டிகள் கிராபிக் கலைக்கான முக்கிய நிர்மாணிப் பெனக் கூறுவார்.
- சுவரொட்டி ஒன்றில் காணப்படும் தனித்துவப் பண்புகளை விபரிப்பார்.
- தொனிப் பொருளுக்குப் பொருந்தும் குறியீடுகள், உருவங்கள், எழுத்துக்கள், தளம், இடப்பரப்பு என்பவற்றை உபயோகித்து சுவரொட்டியைத் திட்டமிடுவார்.
- கருத்தை வெளிப்படுத்தப் பொருத்தமான வர்ண ஊடகங்களை யும் நுட்ப முறைகளையும் உபயோகிப்பார்.
- சுவரொட்டிகளை நயந்துரைப்பார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- சுவரொட்டியொன்றில் காணப்படும் இயல்புகளும் அவற்றின் முக்கியத்துவமும்
- பரந்த தொனிப்பொருளின் செய்தியை எளிமையாகவும் தெளிவாகவும் அர்த்தமுள்ளதாகவும் துரிதமாகவும் அறிவித்தல்.
- குறியீட்டுருக்களினதும் தொனிப் பொருள்களினதும் பொருத்தப்பாடு, ஆக்கபூர்வமான அர்த்தமுள்ள குறுகிய தலைப்பு, அதற்குரிய எழுத்துருக்களின் உபயோகம்
- தளத்தையும் இடப்பரப்பையும் உபயோகித்துத் தொடர்பாடலுக்குரிய கருத்தை வெளிப்படுத்தத் திட்டமிடல்
- நல்ல பூரணத்துவத்தைக் கொண்டிருத்தல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- சுவரொட்டிகளின் தனித்துவமான பண்புகளையும் அவற்றின் உபயோகங்களையும் முன்னர் பெற்ற அறிவைக் கொண்டு கலந்துரையாடுக.
- தளம், இடப்பரப்பு, குறியீட்டுருக்கள், தலைப்பு, எழுத்துருக்கள், வர்ணங்கள் உபயோகித் துள்ள விதம் என்பன தொனிப்பொருளின் கருத்தை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளன என்பதை மாதிரிச் சுவரொட்டிகளை அவதானித்து ஆய்வு செய்யும்படி மாணவர்களைப் பணிக்க.
- உருவங்களும் வர்ணங்களும் குறியீட்டு வடிவில் பல வித தொனிப் பொருள்களில் உபயோகித்துள்ள விதத்தைக் கலந்துரையாடி விளக்குக.
- சுவரொட்டி நிர்மாணிப்பின்போது பரும்படி படங்கள் வரைய வேண்டியதன் முக்கியத் துவத்தை எடுத்துரைக்க.
- திட்டமைப்பின்போது கேத்திர கணித உபகரணங்களைச் சரியாக உபயோகிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.
- சுவரொட்டிச் சித்திரத்துக்குப் பொருந்தும் தலைப்பை அமைத்து எழுத்துருக்களையும் (Font style) அவற்றின் அளவையும் (Font size) எழுத்துருக்கள் அமைக்க வேண்டிய நெறிமுறையில் சுவரொட்டியில் உள்ளடக்க வழிகாட்டுக.
- பிரதியிடும் தாள்களைப் பொருத்தமான முறைகளுடன் உபயோகித்து, வரைய வேண்டிய தாளில் திட்டமைத்த சித்திரத்தை பிரதியிடும் படி பணிக்க.
- போஸ்டல் வர்ணம் அல்லது வேறு வர்ண ஊடகங்களை உபயோகித்து வர்ணம் தீட்டச் செய்க. இங்கே உரிய நுட்ப முறைகளை உபயோகிக்கும்படி அறிவுறுத்துக.
- சுவரொட்டிச் சித்திரம் பூரணப்பாட்டுடன் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குக.
- செயற்பாட்டின் போது மாணவர்களுக்குத் தேவையான அறிவுரைகளையும் உதவியையும் வழங்குக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சுவரொட்டிச் சித்திரமொன்றின் அடிப்படைப் பண்புகளை விபரித்துக் கூறுக.
- தளம், இடப்பரப்பு, குறியீட்டுருக்கள் எழுத்துருக்கள், எழுத்துக்களின் அளவு எனும் விடயங்களைத் தலைப்புக்குப் பொருந்துமாறு சரியாக உபயோகித்துத் தொடர்பாடலுக் குரிய விடயத்தைத் திட்டமைப்புக் கோட்பாடுகளுடன் சுவரொட்டி நிர்மாணிப்பை செய்க.
- பொருத்தமான வர்ண ஊடகங்கள், நுட்ப முறைகள் என்பன உபயோகித்துப் பூரணப் பாட்டுடன் சுவரொட்டிச் சித்திரங்களை வர்ணம் தீட்டுக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

தேர்ச்சி மட்டம் 4.1 க்குரிய கீழே தரப்பட்ட செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடச் செய்க.

4.1.2 ''நச்சுத் தன்மையில்லா உழவுத் தொழிலும் ஆரோக்கியமாக வாழும் மக்கள் இனத்தாரும்'' எனும் கருப்பொருளில் சுவரொட்டியை நிர்மாணித்தல் (04 பாடவேளைகள்)

4.1.3 ''சுபீட்சமான எதிர்காலத்துக்காகப் போதையற்ற சமூகத்தை உருவாக்குவோம்'' எனும் தலைப்பில் சுவரொட்டி ஒன்றை நிர்மாணிப்போம் (04 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவை, தேவைகளுக்கான கிராபிக் ஆக்கங்களைப் படைப்பார்**

**தேர்ச்சி மட்டம் 4.2 : பலவித உற்பத்திகளையும் சேவைகளையும் விளம்பரப் படுத்த கிராபிக் நிர்மாணிப்புகளைச் செய்வார்.**

**செயற்பாடு 4.2.1 :** பாடசாலை கலை விழாவுக்கான உத்தியோக பூர்வ இலட்சினையொன்றை நிர்மாணிப்போம்

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பல்வேறுபட்ட இலட்சினைகளைக் குறிக்கும் நிழற்படங்கள்
- சித்திரம் வரைதற் தாள்கள்
- பிரதியிட உபயோகிக்கப்படும் கடதாசிகள், பென்சில்கள், கேத்திர கணித உபரணங்கள், தூரிகைகள்
- வர்ண ஊடகங்கள் (நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம், ஜெல் பேனை)

**கற்றற் பேறுகள் :**

- இலட்சினை என்பது கிராபிக் சித்திரக் கலையின் முக்கியமான நிர்மாணிப்பென எடுத்துரைப்பார்.
- இலட்சினை ஒன்றின் முக்கியத்துவத்தைப் பற்றியும் அதன் தேவையைப் பற்றியும் விபரித்துக் கூறுவார்.
- இலட்சினை ஒன்றின் அடிப்படையானப் பண்புகளைக் கலந்துரையாடுவார்.
- தொனிப்பொருளுக்குரிய திட்டமைப்பின் பரும்படிப் படங்களை வரைவார்.
- தொடர்பாடலுக்குரிய விடயம் வெளிப்படும் விதத்தில் உருவங்களையும் எழத்துருக்களையம் திட்டமைத்துக் கொள்வார்.
- வர்ண ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் சரியாகப் பயன்படுத்தி நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிக்கும் முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- இலட்சிணை ஒன்றின் பண்புகளும் அதன் முக்கியத்துவமும்
- ஏதேனும் நிறுவனம் ஒன்றின் அல்லது சிறப்பு வாய்ந்த நிகழ்வொன்றின் தனித்துவமான பிரசாரத்தை செய்ய (விளையாட்டுப் போட்டியொன்று, சர்வதேச மாநாடொன்று) இலட்சினை ஒன்றை உபயோகிக்கலாம் என்பது பற்றி

DRAFT

- தொடர்பாடலுக்குரிய பொருள் புலப்படும் விதத்தில் உருவங்கள், எழுத்துக்கள், வர்ணங்கள் என்பவற்றின் உபயோகம்
- பூரணப்பாடும், கவர்ச்சியான தன்மையும் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றி
- செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்
  - இலட்சினை ஒன்றின் தேவையும் அதன் முக்கியத்துவமும் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.
  - மாதிரி இலட்சினைகளின் உருவப்படங்கள், நிழற்படங்கள் என்பவற்றின் துணையுடன் இலட்சினை ஒன்றின் பண்புகளை இனங்காண மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க.
  - குறியீட்டுருக்கள், எழுத்துருக்கள், வர்ணங்கள் என்பன உபயோகித்துள்ள விதம் பற்றி விளக்கமளிக்க.
  - தொடர்பாடலுக்குரிய விடயத்தின் கருத்து புலப்படும் விதத்தை உதாரணங்களைக் கொண்டு விளக்குக
  - தலைப்புக்குப் பொருத்தமான பரும்படிப் படங்களை வரையச் செய்க.
  - இவற்றில் மிகவும் சிறந்த படத்தைத் தெரிவு செய்து, அதிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து மெருகூட்ட உதவுக.
  - அத்திட்டமைப்பை வரையும் போது கேத்திர கணித உபகரணங்களை உரிய விதத்தில் பாவிக்க வேண்டிய முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்க. உரிய நெறிமுறைகளில் திட்டமைப்பைச் சித்திரம் வரையும் தாளில் பிரதியிட்டுக் கொள்வதில் உதவுக.
  - தெரிவு செய்யப்படும் வர்ண ஊடகங்களுக்கப் பொருத்தமான நுட்ப முறைகளில் வர்ணம் தீட்டச் செய்க.
  - தூய்மை, நிறைவு எனும் விடயங்களில் கவனம் செலுத்துக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- இலட்சினை ஒன்றின் தேவையையும் முக்கியத்தவத்தையும் விளக்குக.
- இலட்சினை ஒன்றின் அடிப்படை இயல்புகளை விளக்குக.
- தொனிப்பொருளிலுள்ள தொடர்பாடலுக்குரிய கருத்து வெளிப்படும் விதத்தில் குறியீட்டுருக்கள், எழுத்துருக்கள், வர்ணங்கள் என்பன உபயோகித்து இலட்சினை ஒன்றை நிர்மாணிக்க.
- வர்ண ஊடகங்களுக்கான நுட்ப முறைகளில் வர்ணம் தீட்டச் செய்க.
- பூரணப்பாடு என்பதில் அக்கறை கொண்டு நிர்மாணிப்பில் ஈடுபடுக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

தேர்ச்சி மட்டம் 4.2 க்கான கீழே உள்ள செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடச் செய்க.

4.2.2 சமய விழா ஒன்றினை மையமாகக் கொண்டு வாழ்த்து இதழ் ஒன்றை நிர்மாணிப்போம்.
(04 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்கான கிராபிக் ஆக்கங்களைப் படைப்பார்**

**தேர்ச்சி மட்டம் 4.3 : பாடல், கவிதை, புதுக்கவிதை, நாவல்கள், சிறுகதைப் புத்தங்களின் உட்பக்கங்களுக்குப் பொருத்தமான விளக்கப்படங்களை வரைவார்.**

**செயற்பாடு 4.3.1 :** தேசப்பற்றை எடுத்துரைக்கும் புதுக்கவிதைத் தொகுதி ஒன்றுக்கான வர்ண விளக்கப்படமொன்றை நிர்மாணிப்போம்

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- புதுக்கவிதை எழுதப்பட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகள், பாடல் புத்தகங்கள் என்பவற்றில் வெளியிடப்பட்ட விளக்கப்படங்கள், சித்திரம் வரையும் தாள்கள், பிரதியிடும் தாள்கள், தூரிகைகள், பென்சில்கள், வர்ண ஊடகங்கள் (நீர் வர்ணம், பெஸ்டல், ஜெல் பேனை, ஊற்றுமைப் பேனாக்கள்)

**கற்றற் பேறுகள் :**

- விளக்கப்படங்கள் கிராபிக் கலையின் முக்கியமான நிர்மாணிப்பு எனக் கூறுவார்.
- விளக்கப்படங்களின் பயன்களை விளக்குவார்.
- இலக்கிய நிர்மாணிப்புகளின் பொருட்சுவைக்கேற்ப விளக்கப்படங்களைப் பல விதமான பாணிகளில் நிர்மாணிக்க லாம் என ஏற்றுக் கொள்வார்.
- தொனிப்பொருளுக்கு உரிய விதத்தில் பரும்படி படங்களைப் வரைவார்.
- புதுக்கவிதையின் தொடர்பாடலுக்குரிய விடயமும் சுவையும் வெளிப்படுமாறு இரேகைகள், வடிவங்கள் வர்ணங்கள் என்பவற்றை உபயோகிப்பார்.
- இடப்பரப்பைச் சரியாக உபயோகித்து, அச்சுப் பதித்தலுக்கு ஏற்றவாறு நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.
- நிர்மாணிப்புகளை நயந்து மதிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- இலக்கிய நிர்மாணிப்பக்களின் பொருட்சுவையை அதிகரிக்கவும், வாசகர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளவும் நோக்காகக் கொண்டு வரையும் ஓவியங்கள் விளக்கப்படங்கள் எனப்படும். நிர்மாணிப்பின் தன்மைக்கமைய விளக்கப்படங்களுக்குப் பொருந்தும் ஒரு கலைப் பாணியை உபயோகிக்கலாம்

DRAFT

- இயல்பான வடிவில் அல்லத மொடிப்படுத்தப்பட்ட வடிவில் ஆக்கபூர்வமாக இரேகைகள், வடிவங்கள், வர்ணங்கள் என்பன உபயோகிக்கலாம்.
- பரும்படியாக வரைந்த படத்தை சுவட்டுத் தாள்களின் உதவியுடன் ஓவியம் வரையவிருக்கும் தாளில் பிரதியிட்டுக் கொள்ளுதல்
- வர்ணங்கள், வெளிப்புறக் கோடுகள் என்பன பொருந்தும் விதத்தில் உபயோகித்து நிர்மாணிப்பை முழு நிறைவுடன் பூர்த்தி செய்தல்
- செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்
  - விளக்கப்படங்கள் பற்றி மாணவர்கள் முன்னர் அறிந்திருந்த விடயங்கள் பற்றி வினவுக.
  - விளக்கப்படங்களின் தேவையையும் அவற்றின் சிறப்பியல்புகளையும் பற்றி கலந்துரையாடுக.
  - நிர்மாணங்களின் அடிப்படையில் விளக்கப்பட சித்திரங்களின் தன்மை மாறுபடும் விதத்தை உதாரணங்கள் மூலம் காண்பிக்க.
  - மாதிரி விளக்கப்படங்கள் புதுக்கவிதைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள விதத்தை ஆய்வு செய்ய மாணவருக்குச் சந்தர்ப்பமளிக்க.
  - விளக்கப்படங்களின் முக்கிய காரணியாக இரேகைகள் உபயோகிக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளக்குக.
  - விளக்கப்படத்தின் மூலம் புதுக்கவிதைத் தொகுப்பின் கருத்து வெளிப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துக.
- கருத்தைத் தீவிரப்படுத்த, பொருத்தமான கலைப் பாணியைக் கடைப்பிடிக்க வழிகாட்டுக.
- உருவங்களையும் வர்ணங்களையும் குறியீட்டு வடிவில் காண்பிக்கும் விதம் பற்றி விளக்கமளிக்க.
- பரும்படி படங்கள் வரைந்து அர்த்தமுள்ள சித்திரமொன்றை அமைக்கச் செய்க.
- பிரதியிடும் தாள்களை உபயோகித்து, பருமட்டான படத்தை இறுதிச்சித்திரம் வரைய வேண்டிய வரைதற் தாளில் பிரதியிட்டுக் கொள்ள அறிவுறுத்துக.
- சித்திரத்தின் கலைப் பாணிக்கும் அதன் கருப்பொருளுக்கும் பொருந்துமாறு வர்ண ஊடகங்களால் சித்திரத்தை வர்ணம் தீட்டச் செய்க.
- தேவைக்கேற்பப் புறக்கோடுகள் வரைந்து முழு நிறைவுடன் நிர்மாணிப்பை பூர்த்தி செய்ய அறிவுறுத்துக.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- விளக்கப்படமொன்றின் பயன்களை விபரிக்க.
- விளக்கப்படங்களுக்குரிய கலைப்பாணியின் வேறுபாட்டைத் தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.
- தெரிவு செய்யப்பட்ட இலக்கிய நிர்மாணிப்பொன்றுக்கு அர்த்தமுள்ள, ஆக்கபூர்வமான, அச்சுப்பதித்தலுக்கு பொருத்தமான வகையில் பரும்படி படத்தை வரைக.
- வர்ண ஊடகங்களுக்குரிய நுட்ப முறைகளில் வர்ணம் தீட்டுக.
- சித்திரத்தின் கலைப்பாணிக்கமைய வெளிப்புறக் கோடுகள் வரைந்து பூர்த்தி செய்க.

DRAFT

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

தேர்ச்சி மட்டம் 4.3 க்கான கீழே தரப்பட்ட செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

4.3.2 தெரிவு செய்யப்பட்ட நாவல் ஒன்றின் உள்ளங்கவர்ந்த நிகழ்வொன்றுக்காக விளக்கப் படமொன்றை நிர்மாணிப்போம். (04 பாடவேளைகள்)

DRAFT

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்கான கிராபிக் ஆக்கங்களைப் படைப்பார்**

**தேர்ச்சி மட்டம் 4.4 : தெரிவு செய்யப்பட்ட கணனியின் மென்பொருள்களை உபயோகித்துக் கிராபிக் நிர்மாணிப்புகளைச் செய்வார்.**

**செயற்பாடு 4.4.1 :** நவீன ஊடகங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய புத்தகமொன்றுக்குப் பொருத்தமான வெளிப்புற அட்டை யொன்றைக் கணினி மென்பொருள்களை உபயோகித்து நிர்மாணிப்போம்.

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பல்வேறுபட்ட புத்தக அட்டைகள்
- மென்பொருள்கள் அடங்கிய கணனி இயந்திரம்
- அச்சியந்திரம்
- அச்சிடத் தேவையான தாள்கள்

**கற்றற் பேறுகள் :**

- கிராபிக் நிர்மாணத்துக்கு உதவும் கணனி மென் பொருள்களைக் குறிப்பிடுவார்.
- நிர்மாணிப்புக்குக் கணனி உபயோகப்படும் விதத்தையும் அதன் அனுகூலங்களையும் விளக்கிக் கூறுவார்.
- கணனி மென்பொருள்கள் பற்றிய அறிவையும் திறனையும் உபயோகித்துக் கிராபிக் நிர்மாணிப்புக்களில் ஈடுபடுவார். மற்றவர்களுக்கும் அவர்களது நிர்மாணிப்புகளைச் செய்ய உதவுவார்.
- தேவைக்கேற்ப கிராபிக் நிரமாணிப்புகளில் ஈடுபடுவார்.
- புத்தக அட்டையொன்றின் அளவீடுகளை விபரித்துக்கூறுவார்

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- கலந்துரையாடல் முறை, ஆய்வு முறை, அவதானிப்பு முறை, செயன்முறைச் செயற்பாடுகள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- கிராபிக் நிர்மாணிப்புக்கு உதவும் கணனி மென்பொருள்கள் (Gimshop, Inkscape, Photoshop, illustrator, Paint, Power point)
- விளம்பரத் துறையில் கணனியின் உதவியுடன் செய்யப்படும் கிராபிக் நிர்மாணிப்பின் முக்கியத்துவமும் அதனுடன் தொடர்புபடப்ட தொழில்சார் சந்தையும்
- கணனி மூலம் செய்யப்படும ் கிராபிக் நிரமாணிப்புகளில் உபயோகப்படுத்தும் அடிப்படையான விடயங்கள் (கட்புலனான உருவங்கள், எழுத்துக்கள், வர்ணங்கள்)
- தொடர்பாடலுக்குரிய விடயங்களைக் கவர்ச்சியான முறையில் வெளிப்படுத்துதல்

- ஆக்கபூர்வமான தன்மையுடனும் அச்சுப் பதித்தலுக்குப் பொருத்தமான தன்மையுடனும் இருத்தல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பாடசாலையின் கணனி ஆய்வு கூடப் பொறுப்பாசிரியருடன் தெடர்பு கொண்டு செயற் பாட்டுக்கான தொழினுட்ப வசதிகளைப் பெற்றுக் கொள்க.
- கணனிப் பாடத்துக்குப் பொறுப்பான ஆசிரியரின் உதவியை நாடிக் கணனியையும் மென்பொருள்களையும் உபயோகப்படுத்தும் முறைகள் தொடர்பான அறிவை மீளப் பெறுக. அத்துடன் புதிய, இலகுவான நெறிமுறைகள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்க.
- மாதிரிப் புத்தக அட்டைகளை அவதானிக்கச் செய்து திட்டமைப்பு, ஆக்கபூர்வமான தன்மை என்பவற்றின் சிறப்பை விளக்குக. தேவை ஏற்படின் இணையத்தளத்தில பிரவேசித்து மாதிரிப் உருவங்களைக் கற்றறிய சந்தர்ப்பம் வழங்குக.
- புத்தக அட்டைக்குப் பொருந்தும் கட்புலனான உருவங்களையும் எழுத்துருக்களையும் கணனியில் தேடிப் பெறச் செய்க.
- நிர்மாணப்பைச் செய்ய மாணவர்களுக்கு உதவுக.
- உகந்த முறையில் கட்புலனான உருவங்களையும் எழுத்துருக்களையும் வடிவமைத்து நிரமாணிப்பைத் திட்டமிடத் தேவையான வழிகாட்டல்களை வழங்குக.
- நிர்மாணிப்புக்குத் தேவையான மென்பொருள்களின் Tools ஐ உபயோகிக்கத் தேவையான உதவியைப் பெறுக.
- நிர்மாணித்த புத்தக அட்டையை அச்சுப்பதிக்கச் சந்தர்ப்பமளிக்க.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- கணனி மூலம் கிராபிக் நிர்மாணிப்புச் செய்கையில் உபயோகப்படுத்தும் மென்பொருள்களை குறிப்பிட்டு, கணினியின் துணையுடன் நிர்மாணிப்பில் ஈடுபடுவதால் ஏற்படும் அனுகூலங்களை விளக்கிக் கூறுக.
- கணனி மென்பொருள்களை உபயோகிக்கும் போது உங்கள் திறமையை வெளிப்படுத்துக.
- திட்டமைப்பின் அடிப்படையில் படிமுறைகளுக்கு ஏற்ப கணனியின் உதவியுடன் புத்தக அட்டையொன்றை நிரமாணிக்க.
- தேவைக்கும் நிர்மாணிப்புக்கும் ஏற்ப கட்புலனான உருவங்கள், எழுத்துருக்கள், வர்ணங்கள் என்பவற்றைத் தெரிவு செய்து நிர்மாணிப்பில் ஈடுபடுக.
- கணினி உபயோகம் பற்றிய தம்மிடமுள்ள அறிவுத் திறனை மற்றயவர்களுடன் பகிர்ந்து அவர்களது நிர்மாணிப்புக்குத் தேவையான உதவியை வழங்குக.

## உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

தேர்ச்சி மட்டம் 4.4 க்கான கீழே தரப்பட்ட செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துக.

4.4.2 ''பாடசாலையின் சித்திரக் கலை மன்றத்துக்கான உத்தியோகபூர்வ சின்னமொன்றை கணனி மென் பொருள்களை உபயோகித்து நிரமாணிப்போம்.''

(04 பாடவேளைகள்)

4.4.3 ''பாரம்பரிய நாட்டார் கலைத்தொழிலைப் பாதுகாப்போம்'' எனும் தொனிப் பொருளில் கணனி மென் பொருள்களை உபயோகித்துச் சுவரொட்டியொன்றை நிரமாணிப்போம்.

(04 பாடவேளைகள்)

**தேர்ச்சி 5.0 : பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள் செதுக்கல் வேலைப்பாடுகளை ஆக்குவார்**

**தேர்ச்சி மட்டம் 5.1 : களிமண் ஊடகத்தைப் பயன்படுத்தி, மனித வடிவங் களை ஒழுங்கமைத்து சிற்பமொன்றை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 5.1.1 :** மனித உருவங்களை ஒருங்கிணைத்து சிற்பமொன்றை நிர்மாணிப்போம்.

**பாடவேளைகள் :** 05

**தரவிரத்தி உள்ளீடுகள் :**

- களிமண் ஊடகம்
- சிற்பம் அமைக்கத் தேவையான உபகரணங்கள்
- 1` x 1` அடி அளவிலான பலகையொன்று, கம்பிகள்
- டிமை தாள்கள்
- களி மண்ணை ஊடகமாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்ட மனித உருவங்கள் அடங்கிய படங்கள், நிழற்படங்கள், சிற்பங்கள்

**கற்றற் பேறுகள் :**

- களி மண்ணை ஊடகமாகக் கொண்டு அப்புதல் நுட்ப முறை பற்றிய விளக்கத்துடன் சிற்பமொன்றுக்கான பரும்படி படத்தை வரைவார்.
- ஒழுங்கமைப்புக்கு உகந்ததாக மனித வடிவங்களை வரைவார்.
- தளத்தை அமைப்பதிலிருந்து அப்புதல் முறையின் சரியான படிமுறைகளுடன் பரும்படி வரைபடத்துக்கு இணங்கச் சிற்பத்தை நிர்மாணிப்பார்.
- ஊடகத்தின் தனித்துவமான பண்புகள் தோன்றும் விதத்தில் ஒழுங்கமைத்து நிர்மாணிப்பைச் செய்வார்.
- முப்பரிமாணத் தன்மை, சமநிலை, சந்தம், மேற்பரப்புத் தன்மை பற்றிய விழிப்புடன் செயற்படுவார்.
- செயற்பாட்டில் ஒழுங்கு முறையில் ஈடுபடுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஆய்வு, கலந்துரையாடல் முறை, தனிச் செயற்பாட்டு முறை

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- களி மண் ஊடகத்தைப் பயன்படுத்தி நிர்மாணிப்பதற்காக 2 அல்லது 3 மனித உருவங்களுடனான ஒழுங்கமைப்பின் பரும்படிப் படமொன்றை வரைய மாணவர்களைப் பணிக்க.
- பொருத்தமானவாறு சிற்பத்தின் உயரத்தை தீர்மானிக்குக

DRAFT

- தளம் அமைப்பதில் இருந்து இறுதி நிர்மாணிப்பு வரையிலான சரியான படிமுறைகளை மாணவர்களுக்கு அறிவுறுத்துக.
- சிற்பமொன்றில் இருக்க வேண்டிய முப்பரிமாணத் தன்மை, சமநிலை, சந்தம் மேற்பரப்புத் தன்மை எனும் நுட்ப முறைகள், உத்திகள் பற்றி விளக்குதல்.
- உபகரணங்களைச் சரியாகக் கையாளுதல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- மனித உருவங்களை ஒழுங்கமைத்து அப்புதல் முறை மூலம் நிர்மாணித்த மாதிரி சிற்பங்கள் அல்லது நிழற் படங்களைக் காண்பித்து அவற்றின் வெளிப்புறத் தோற்றம் பற்றி மாணவர்களை அறிவுறுத்துக.
- சுய விருப்பத்துக்கு ஏற்ப சிற்பமொன்றுக்காக ஒழங்கிணைக்கப்பட்ட மனித உருவங்களின் பரும்படி படங்களை வரைய மாணவர்களைப் பணிக்க.
- பரும்படி படங்களின் முன்பக்கத் தோற்றம், பக்கத் தோற்றம், பின்புறத் தோற்றம் என பல் திசைகளில் அவை தோற்றமளிக்கும் விதத்தை வரைய அறிவுறுத்துக.
- அப்புதல் நுட்ப முறை பற்றிய அறிவுடன் ஆக்கபூர்வமாக வடிவங்களைத் திட்டமிட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி வைக்க.
- பரும்படி படங்களுக்கிணங்க 1 x 1 அடி அளவுடைய பலகை மீது செங்குத்தாகத் தாங்கும் கம்பியொன்றை நிலை நாட்டுக. (சிற்பம் நிர்மாணித்த பின் இதனை அகற்ற வேண்டும் என்பதில் கவனம் செலுத்துக.)
- நிர்மாணிக்கப்பட்ட பரும்படிப் படத்துக்கு ஏற்ப அமைத்த கட்டமைப்பின் மீது பதப்படுத்திய களியை உபயோகித்துச் சிற்பத்தைக் கட்டியெழுப்பச் செய்க.
- அப்புதலின்போது பின்வரும் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
  - சமநிலை - சந்தம்
  - மேற்பரப்புத்தன்மை - பிரமாணம்
- உபகரணங்களைக் கையாளும் சரியான முறைகள் பற்றிய அறிவை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்கள் பூர்த்தி செய்த நிர்மாணிப்புக்களை வகுப்பில் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- சுய விருப்பத்தில் 2 அல்லது 3 மனித உருவங்களுடனான களிமண்ணால் அப்பக்கூடிய சிற்பமொன்றுக்காக திட்டமிடப்பட்ட பரும்படி படத்தை வரைக.
- நிர்மாணித்த பரும்படி படத்திற்கு இணங்க களிமண்ணை ஊடகமாகக் கொண்டு சிற்பமொன்றை நிர்மாணிக்குக.
- தரமான நிர்மாணிப்பைப் பெறும் பொருட்டு சிற்பங்களை அப்புதல் செய்யும் அடிப்படைக் கோட்பாட்டு விதிகளைக் கடைப்பிடிக்குக.
- இறுதியில் நிர்மாணிப்பை காட்சிப்படுத்துக.

### உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள்

தேர்ச்சி 5.1 க்கான கீழே உள்ள செயற்பாட்டில் மாணவர்களை ஈடுபடச் செய்க

- 5.1.2 களி மண் ஊடகத்தை உபயோகித்து மார்பளவுச் சிலையொன்றை நிர்மாணிப்போம் (05 பாடவேளைகள்)

**தேர்ச்சி 5.0 :** **வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள் செதுக்கல் வேலைப்பாடுகளை ஆக்குவார்**

**தேர்ச்சி மட்டம் 5.2 :** **கலப்பு ஊடகங்களைப் பயன்படுத்தி தாவரம், விலங்கு உருவங்களை ஒன்றிணைத்துச் சிற்பமொன்றை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 5.2.1 :** வீட்டு அலங்காரத்துக்குப் பயன்படுத்தக்கூடிய விலங்கு தாவர உருவங்களை ஒழுங்கிணைத்து சிற்பமொன்றை நிர்மாணிப்போம்

**பாடவேளைகள் :** 10

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பல்லூடகங்கள், களிமண், சீமேந்து, பிளாஸ்டர் ஒப் பரிஸ், கம்பி, பிளாஸ்டிக், பலகை
- சிற்பம் நிர்மாணிக்கத் தேவையான உபகரணங்கள்
- கலப்பூடகங்களை உபயோகித்து நிர்மாணிக்கப்பட்ட சிற்பங்களைச் சித்தரிக்கும் நிழற் படங்கள், படங்கள்
- டிமைத் தாள்கள்
- வர்ணம் இடத் தேவையான பூச்சு வகை
  உ-ம்: இமல்ஷன், லக்கர், அக்கிரலிக்

**கற்றற் பேறுகள் :**

- கலப்பூடகங்களை உபயோகித்துச் சிற்பமொன்று நிர்மாணிக்கப் பரும்படி படங்களை வரைவார்.
- பல்லூடகங்களின் தனித்துவப் பண்புகளுக்குரிய விதத்தில் நுட்ப முறைகளைப் பயன்படுத்துவார்.
- பொருத்தமான வர்ணங்களை உபயோகிப்பார்.
- உபகரணங்களை பயன்படுத்தும் போது தொழிநுட்பத் திறமைகளை வெளிப்படுத்துவார்
- மன அடக்கத்துடன் நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

அவதானிப்பு முறை, தனி செயற்பாட்டு முறை, குழுச்செயற்பாட்டு முறை, செயற்றிட்டங்கள்

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- வீட்டை அலங்கரிக்கக் கூடிய சிற்பமொன்றுக்காக உபயோகப்படுத்தக்கூடிய பல வகை ஊடகங்களை அறிந்து கொள்ளுதல்
- வீட்டு அலங்கரிப்புக்குப் பொருந்தும், விலங்கு தாவர கலப்புடனான பரும்படி வரைபடங்களை வரைதல்
- ஒழுங்கினைப்பு, சமநிலைத்தன்மை, சந்தம், முப்பரிமாணத் தன்மை பற்றிய அறிவு
- பல்லூடகங்களின் தனித்துவமான பண்புகளும், அவற்றை சிற்ப நிர்மாணிப்புகளுக்கு உபயோகிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நுட்ப முறைகள் பற்றிய அறிவும்
- பொருத்தமான வர்ணங்களை ஆக்கபூர்வமாக உபயோகித்தல்

## செயற்பாட்டை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- பல்லூடகங்களை உபயோகித்து வீட்டு அலங்கரிப்புக்காக நிர்மாணிக்கப்பட்ட சிற்பங்கள் சிலவற்றை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி, அவைகள் பற்றிக் கலந்துரையாடுவதன் மூலம் பாடத்தில் பிரவேசிக்க.
- மாணவர்களைத் தனித்தனியாகவோ அல்லது குழுக்களாகவோ பல்லூடகங்களை உபயோகித்து வீட்டு அலங்கரிப்புக்கான சிற்பமொன்றின் பரும்படி படமொன்றினை வரையச் செய்க.
- திட்டமிடலின்போது இடப்பயன்பாடு, சமநிலை, முப்பரிமாணத் தன்மை பற்றிக் கவனம் செலுத்தும் படி மாணவர்களை அறிவுறுத்துக.
- முன்பக்கத் தோற்றம், பக்கத்தோற்றம், பின்பக்கத் தோற்றம் தென்படும் விதத்தில் பரும்படிப் படங்களை வரைய அறிவுறுத்துக.
- வரைந்த பரும்படிப் படங்களுள் ஒன்றைத் தெரிவு செய்க.
- சிற்ப நிர்மாணிப்புக்கு உபயோகிக்கும் ஊடகங்கள் ஒன்றுடனொன்று வேறுபட்டு இருப்பதால் சிற்பத்தின் ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியாக நிர்மாணித்து பின்பு அவற்றை ஒன்றிணைக்க.

| | | | |
|---|---|---|---|
| உ-ம்: | அடித்தளம் | - | சீமெந்து ஊடகம் |
| | விலங்குருவங்கள் | - | இரும்புத்தகடுகள் |
| | மரங்கள் | - | கம்பி, உலோகச் சாடிகள் என பல்லூடகத்தை உபயோகிக்குக. |

- சிற்பத்தைக் கட்டியெழுப்பும்போது முப்பரிமாணத் தன்மை, மேற்பரப்புத் தன்மை, ஆக்கபூர்வமான தன்மை மீது கவனம் செலுத்தும்படி அறிவுறுத்துக.
- பொருத்தமான வர்ணங்களை உபயோகிக்க வழிகாட்டுக
- பூர்த்தியான நிர்மாணிப்பை வகுப்பில் காட்சிப்படுத்துக.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- கலப்பூடகங்களை உபயோகித்து வீட்டு அலங்கரிப்புக்காகப் பொருந்தும் விலங்கு தாவர உருவங்கள் அடங்கிய சிற்பமொன்றின் பரும்படி படம் ஒன்றைத் திட்டமிடுக.
- திட்டமிட்டதற்கு இணங்க வீட்டு அலங்கரிப்புக்கான சிற்பமொன்றைக் கட்டியெழுப்புக.
- ஊடகங்களை உபயோகிக்கும் போது நுட்ப முறைகள், சிற்ப நிர்மாணிப்பின் அடிப்படை அம்சங்கள், கோட்பாட்டு விதிகள் என்பன சரியாகக் கடைப்பிடிக்குக.
- சிற்பத்தை வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்துக.
- பாதுகாப்புடனும் மன அடக்கத்துடனும் செயற்பாட்டில் ஈடுபடுக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் உண்ணாட்டு, வெளி நாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப் படைப்புகள் சமகால கட்புலக் கலைப் படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : இலங்கையின் 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களின் நிர்மாணிப்புக்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.1.1 :** 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களின் நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம்.
- ஹரீ பீரிஸ், ஐவன் பீரிஸ், ஜஸ்ரின் தெரணியகல, ரிச்சட் கேப்ரியல், ஜோஜ் கீட், எல்.டீ.பி. மஞ்சு ஶ்ரீ

**பாடவேளைகள் :** 16

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புகளின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் படப் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவெட்டுகள், Power Point Presentation, காணொளி எறிவைக் கருவி (Projector), கணினி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையின் நவீனத்துவவாதக் கலையை விளக்குவார்.
- 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் செல்வாக்கைப் பெற்ற ஐரோப்பிய கலைஞர்களின் கலைப் போக்குகளைக் குறிப்பிடுவார்.
- ஒவ்வொரு கலைஞர்களினதும் நிரமாணிப்புப் பாணி, ஊடகம், நுட்ப முறைகளை விளக்குவார்.
- நிர்மாணிப்பின் போது உபயோகித்த பல்வகைப் பாணியை, 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களின் நிர்மாணிப்புக் களினூடாக விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல்/ தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள், கள அவதானிப்புகள்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

DRAFT

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

- இலங்கையின் முதல் நவீனத்துவவாதக் கலைக் குழுவாக 43ம் குழு கருதப்படுகிறது.
- 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகரத்தை மையமாகக் கொண்டு உருவாகிய ஒளியியல் வாதம், பின் ஒளியியல் வாதம் ஆகிய கலைப் போக்குகளின் செல்வாக்கை 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் பெற்றனர்.
- 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பிரான்ஸ், ஜேர்மனில் தோன்றிய கலைப் போக்கான போவிஸம் (Fauvism) மற்றும் கனவடிவவாத செல்வாக்குகளையும் பெற்றனர்.
- பலவகை பாணிகளுடனான நவீனத்துவவாதக் கலைத் துறையை இலங்கையில் தோற்றுவிப்பதே 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களின் முக்கிய பணியானது.

**ஹரீ பீரிஸ் (1904 1988)**

- ஹரீ பீரிஸ் 43ம் குழுவின் உறுப்பினராவார்.
- அவரது கலை நிர்மாணிப்புக்கள் இருவகைப்பட்டன. முதலாவது வகையானது அக்கடமிக் யதார்த்த வாத கலைபோக்குகளில் இருந்து விடுபட்டு பிரதிமை ஓவியங்கள் வரையும் மரபாகும். நவீன வாதக் கலைப் போக்குகளுடன் தரைத்தோற்றக் காட்சிகளை வரையும் மரபு இரண்டாவதாகும்.
- அவரது பிரதிமை ஓவியங்களில் ஒன்றாக ''இந்திராணி'' ஓவியத்தையும் தரைத்தோற்றக் காடசியாக ''ஜைன பவன'' (சமண சமய ஆச்சிரமம்) எனும் ஓவியத்தையும் குறிப்பிடலாம்.

**I. ஜைன பவன**

- தரைத்தோற்றக் காட்சியாகும். கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
- ஓவியக் கலைஞனின் உணர்வுகளுக்கேற்ப தரைத் தோற்றத்தின் தன்மையை அமைத்துள்ளார். அக்கடமிக் கலைக்கமைய இயற்கையை அதே தோற்றத்தில் வரையும் பண்பிலிருந்து விடுபட்டுள்ளார்.
- கண்ணுக்குப் புலப்படும் விதத்தில் இயற்கையைச் சித்தரிக்கவில்லை. இவ்வோவியம் அரூப (abstract) மற்றும் இயல் காட்சித் தன்மை (representational) ஆகிய இரண்டினதும் கலவையாக உள்ளது.

**II. இந்திராணி**

- கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட பிரதிமை ஓவியமாகும்.
- அக்கடமிக் யதார்த்த வாத பிரதிமை கலைப் பாணியில் இருந்து விடுபட்டு வெளிப் பாட்டுவாத (Expressionsm) பண்புகளுடன் நிரமாணிக்கப்பட்டுள்ளது.
- தொல்சீர் வர்ணப் பயன்பாட்டைக் கொண்டது. குளிர் வெப்ப இரு வர்ணங்களும் சமனாக சமநிலையில் இடப்பட்டுள்ளது.

**ஐவன் பீரிஸ் (1921 - 1988)**

- 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களுள் நவீனத்துவ வாதக் கலைப் பாணிகளைக் கொண்ட கலைஞனாகக் காணப்படுகிறார்.
- ஐவன் பீரிஸ் அவர்கள் இலங்கையின் நவீன சித்திர அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்தப் பங்களிப்பை வழங்கினார்.

DRAFT

- அதிகமான ஓவியங்கள் தனி வர்ணச்சாயல்கள் (Monocrome) உடையதாக இருந்தன.
- இவரது பெரும்பாலான ஓவியங்கள் அமைதி, நிசப்த, சாந்த குண இயல்புகள் வெளிப்படுவதாக இருக்கினறன.

## I. திரும்பி வருதல் (The return)

- கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட ஓவியமாகும்.
- ஐரோப்பிய சித்திரம் வரையும் நவீன கால முறையொன்றான சதுரக் கோட்டு வலை அமைப்பு இவ்வோவியத்தில் உள்ளது. இதனூடாகச் சிறப்பான ஒழுங்கு முறையான வடிவமைப்பொன்றை உருவாக்கியுள்ளார்.
- வெளிப்பாட்டு வாத பண்புகளுக்கு அதாவது பாவ வெளிப்பாட்டு பண்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.
- இவரது ஓவியங்கள் அதிகமாக தனி வர்ணச் சாயல்களைக் கொண்டுள்ளன. இவ்வோவியத்திலும் அப்பண்பையே அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

## II. கல்கிசை (Mount Lavinia)

- கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட இவ்வோவியத்தில் காணப்படும் சகல உருவங்களம் கனவடிவப் பண்புகளையும் நிலைத்த தன்மையையும் கொண்டுள்ளன.
- இயற்கையில் காணப்படுபவற்றின் இயல்பான தன்மையை திரிவுபடுத்தி, எளிமையான வடிவங்களாக இதனை முன்வைத்துள்ளார்.
- நவீன ஓவியக் கலையின் தர்க்க ரீதியான கட்டமைப்புப் பண்புகள் புலப்படுவதாக உள்ளன.
- கனவடிவவாத ஓவியக் கலையின் செல்வாக்கையும் பியற் மொன்றியலின் ஓவியக் கலை செல்வாக்கினையும் பெற்றுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

DRAFT

## ஜஸ்டின் தெரணியகல (1903 - 1967)

- 43ம் குழுவில் வெளிப்பாட்டு ஓவியக் கலைஞனாக இருந்தவர் ஜஸ்டின் தெரணியல என்பவரே.
- பொருட்களின் சுபாவத்தை திரிவுபடுத்தி வெளிப்படுத்தும் முறையை இவரது ஓவியங்கள் கொண்டுள்ளன.
- இலங்கையின் வெளிப்பாட்டுவாதத்தை ஏற்படுத்திய முதற் கலைஞர் இவராவார்.

## I. தங்கமீனும் பெண் பிள்ளையும்

- எண்ணெய் வர்ணத்தினால் கன்வசு மீது வரையப்பட்ட ஓவியமாகும்.
- பொருட்களின் தன்மை திரிவுபடுத்தப்பட்டு (விகாரப்படுத்தப்பட்டு) இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. அக்கடமிக் வர்ணம் தீட்டும் முறையில் இருந்து விடுபட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள ஓவியமாகும்.
- இலங்கைக்கான நவீனத்துவவாதக் கலையின், வெளிப்பாட்டுவாத கலை இயல்புகளை இனங்காண இவ்வோவியம் துணை புரிகின்றது.
- எதிர்வர்ணங்களை உபயோகித்திருப்பதால் இவ்வோவியத்தின் வெளிப்பாட்டுவாதம் தீவிரமடைந்துள்ளது.

- நவீன வாதக் கலை இயல்பான பொருட்களைத் திரிவுபடுத்திக் காட்டும் இயல்பைக் கலைஞன் சுய விருப்பத்தின்படி உபயோகித்துள்ளதை இவ்வோவியத்தில் காணலாம்.

**II. கண்ணாடியின் முன்னால் பெண்**

- எண்ணெய் வர்ணத்தினால் கன்வசு மீது வரையப்பட்ட ஓவியமாகும்.
- வெளிப்பாட்டுவாத இயல்புகளைக் கொண்டது.
- தளத்தின் மத்திய பகுதியில் திட்டமிட்டு வரையப்பட்டுள்ள ஓவியமாகும்.
- அரைத் திரிபுபடுத்தலுடன் பெண் உருவங்களை வரைந்தள்ளார்.

**ரிச்சட் கேப்ரியல் (1924 - 2016)**

- ரிச்சட் கேப்ரியல் என்பவர் 43ம் குழுவின் உறுப்பினராவார்.
- இவரது ஓவியங்கள் கிராமம், கிராமத்துக் கருப்பொருள்கள் மையமாகக் கொண்டுள்ளதில் பிரபல்யமடைந்துள்ளன. அத்துடன் கிறிஸ்தவ மதத் தொனிப் பொருள்கள் பலவற்றையும் இவர் வரைந்துள்ளார்.
- இவரது நிர்மாணிப்புகள் மோடிப்படுத்தப்பட்ட தன்மையைக் கொண்டிருக்கும் போதிலும் அவர் இயற்கைத் தன்மையைத் தீவிரமாக மோடிப்படுத்த முயலவில்லை.

**I. ஞானமுள்ள, ஞானமற்ற கன்னியர்கள்**

- எண்ணெய் வர்ணத்தினால் கன்வசு மீது வரையப்பட்டுள்ளது.
- பெண்களின் கூட்டமே இவ்வோவியத்தின் பிரதான உருவங்களாக அமைந்துள்ளன.
- ஓவியத்தில் காணப்படும் உருவங்கள் இயல்காட்சி தன்மையைக் கொண்டிருப்பதுடன் கருப்பொருள் புலப்புடம் விதத்தில் வர்ணங்கள் உபயோகப்படத்தியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.
- கறுப்பு நிறத்தினால் வெளிப்புறக் கோடுகள் காண்பிக்கப்பட்டள்ளன.

DRAFT

**II. வயல்**

- கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
- பாரம்பரிய கிராமத்தையும் கிராமத்தின் தோற்றத்தையும் நவீனவாதக் கலை உத்திகளினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ஓவியமொன்றாகும்.
- இயல் காட்சிக்குரிய பண்புகளையும் மோடிப்படுத்தப்பட்ட பண்புகளையும் கொண்டுள்ளன.
- அயல் வர்ணங்களையும் ஒரே வர்ணத்தின் (Monochrome) சாயல்களையும் உபயோகித்துள்ளமை ஓவியத்தின் முக்கியமானதொரு பண்பாகும்.

**டப்ளியூ. ஜே. ஜீ. பீலிங் (1907 - 1977)**

- இவரது கலை நிர்மாணிப்புக்கள் கனவடிவவாத இயல்புகளைக் கொண்டுள்ளன.
- இயல்புத் தன்மையை மோடிப்படுத்தி வரையப்பட்டுள்ள தன்மையை இவரது ஓவியத்தில் காணலாம்.
- கல்வித் திணைக்களத்தின் கீழ் பாடசாலைகளை பரிசோதிக்கும் பரிசோதகர் பதவியை வகித்த முதல் இலங்கையருமாவார்.

**I. ஐஸ்கிறீம் வண்டி**

- எண்ணெய் வர்ணத்தினால் கன்வசு மீது வரையப்பட்டுள்ளது.
- இதில் முன்னணி, இடையணி, பின்னணி என்பன தெளிவாக இனங்காணக் கூடியதாக இருக்கின்றன.
- கட்புலனான நோக்கங்கள் வெளிப்படுத்தியுள்ள விதத்தின்படி, ஒருங்கிணைந்துள்ள அசையாப் பொருட்களின் கலைத்துவப் பண்புகள் புலப்படுகின்றன. அக்கடமிக் ஓவியக் கட்டமைப்புக்கு ஏற்ப அசையாத, திண்ம, உருவங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

**அசையாப் பொருட்களை ஒருங்கிணைத்தல்**

- கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
- கனவடிவவாத கலை இயல்புகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- ஒட்டுமொத்த ஓவியமும் கனவடிவவாத கலைப் பண்புகளைக் கொண்டுள்ளது.

**ஜோஜ் கீட் (1901 - 1997)**

- ஜோஜ் கீட் என்பவர் 43ம் குழுவின் பிரபல்யமடைந்த கலைஞராவார்.
- இவரது ஓவியங்கள் கனவடிவ வாத கலை உத்திகளைக் கொண்டுள்ளன.
- கீட் வரைந்த ஓவியங்களின் கருப்பொருட்கள் தெற்காசிய புனைக் கதைகள், மத ரீதியான நம்பிக்கைகள், இலக்கியம் என்பவற்றுடன் தொடர்புடையதாக உள்ளன.

**I. இயமனைத் தோற்கடித்தல் (மார பராஜய)**

- இது பொரளை கோதமீ விகாரையில் வரையப்பட்டுள்ள சுவரோவியமாகும். (Mural)
- இயமன்களின் முகங்கள் கனவடிவவாத கலைப் பண்புகளைக் கொண்டுள்ளன.
- நவீன கால பௌத்த சித்திரக் கலையை எடுத்துக் காட்டுவதாக இது அமைந்துள்ளது.
- வெளிப்பாட்டை தீவிரப்படுத்த இரேகைகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- பௌத்த மதக் கலையின் பிரபல்யமான ஒரு தொனிப்பொருளாக இது உள்ளது.

DRAFT

**II. பீமனும் ஜரசந்தனும்**

- இவ்வோவியம் 1943 இல் கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
- இவ்வோவியத்தின் கருப்பொருள் இந்து வீர காவியமான மகா பாரதத்தின் கதையொன்றைத் தழுவி அமைந்துள்ளது.
- ஓவியத்தின் கலைத்துவ மொழி கனவடிவவாத கட்டமைப்புக்குள் உரவாகியுள்ளது.
- கட்டமைப்புக்களுடன் வெளிப்பாட்டு வாத இயல்புகளையும் கொண்டுள்ளன.

**எல். பீ. டீ. மஞ்சு ஸ்ரீ (1902 - 1982)**

- 43ம் குழுவின் ஆரம்ப கால உறுப்பினராவார். பிற்காலத்தில் அவர் அக்குழுவில் இருந்து விலகினார்.
- நவீன வாதக் கலை நம்பிக்கைகளுக்கு ஏற்ப கட்புலனான நோக்கங்கள், பலவித கலைப் பாணிகளுடன் முன்வைத்தார்.
- பாரம்பரிய ஓவியங்களைக் கற்றறியவும் பிரதியிடவும் மஞ்சு ஸ்ரீ அவர்கள் பெரும் பணியாற்றினார்.

### I. பத்தினி ஆலயம்

- நீர் வர்ணத்தினாலானது.
- தனி வர்ணத்தின் சாயல்களை இவ்வோவியம் கொண்டுள்ளது.
- இயல்காட்சி தன்மையையும் அரூப வடிவத் தன்மையையும் ஒரே ஓவியத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.
- இயல்பான தன்மையில் இருந்து விலகி வரையப்பட்ட ஓவியமாகும். இது நவீனத்துவவாத கலையின் முக்கிய நிர்மாணிப்பாகும்.

### II. பெண் உருவங்கள்

- நீர் வர்ணத்தினாலானது.
- எல்.டீ.பீ. மஞ்சு ஸ்ரீ பல கலைப் பாணிகளை உபயோகித்து ஓவியத்தை பூரணப்படுத்தியுள்ளார். மனித உருவங்களைக் கலைப்பாணியுடன் வரைந்துள்ளார்.
- இவ்வோவியமும் தற்காலவாதக் கலையுடன் இணைந்த கலைப் பண்புகளைக் கொண்டுள்ள போதிலும் அக்கடமிக் யதார்த்தவாத பண்புகளில் இருந்து விலகியுள்ளது.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- 43 ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் செல்வாக்கைப் பெற்ற ஐரோப்பிய கலைஞர்களின் கலைப் போக்குகளை விபரிக்குக.
- ஒவ்வொரு கலைஞர்களினதும் ஓவிய நிர்மாணிப்புகளை ஆதாரமாகக் கொண்டு அவற்றின் கருப்பொருள், கலைப்பாணி, ஊடகங்களின் உபயோகம் என்பன தொடர்பாகப் பகுப்பாய்வு செய்க.

DRAFT

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் உண்ணாட்டு, வெளி நாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப் படைப்புகள், சமகாலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 :** **இலங்கையின் நவீனகால ஓவியச், சிற்பக் கலைஞர் களின் ஆக்கங்களைக் கற்றறிவார்**

**செயற்பாடு 6.2.1 :** **இலங்கையின் நவீன ஓவியச், சிற்பக் கலைஞர்களின் நிர்மாணிப்புகளைக் கற்றறிவோம்.**

- ஸ்டென்லி அபேசிங்க
- ஏ. மார்க்கு
- திஸ்ஸ றணசிங்க
- எச்.ஏ. கருணாரட்ன

**பாடவேளைகள் :** 08

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவெட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி (Projector), கணிணி இயந்திரங்கள்

DRAFT

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையின் நவீன ஓவியச் சிற்பக் கலையை விபரித்துக் கூறுவார்
- அவ் ஒவ்வொரு கலைஞனும் செல்வாக்கைப் பெற்ற ஐரோப்பிய கலைப் போக்கையும் தெற்காசியக் கலைப் பாரம்பரியத்தையும் விளக்குவார்.
- அவ்வொவ்வொரு கலைஞனது கலைப்பாணிக்குரிய பண்புகளை விளக்குவார்.
- நுட்ப முறைகளை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**ஸ்டான்லி அபேசிங்க (1914 - 1993)**

- இலங்கையின் அக்கடமிக் கலையை நவீனத்துவக் கலை வடிவில் ஆரம்பித்து வைத்தவர் ஸ்டான்லி அபேசிங்க ஆவார். அதாவது நவீனவாதக் கலையை ஹேவுட் நிறுவனத்தில் இவரே ஆரம்பித்து வைத்தார்.
- ஸ்டான்லி அபேசிங்கவின் நிர்மாணிப்புகள் போல் செசான், ஹென்ரி மத்தீஸ் போன்ற ஐரோப்பிய நவீனக்கலைஞர்களின் கனவடிவவாத, வெளிப்பாட்டுவாத ஓவிய கலை போக்குகளின் உத்திகளையும், சுதேச பாரம்பரியக் கலை இயல்புகளையும் கொண்டதாக (பாலி, கோலம்) அமைந்தன.

**(1) கடற் கன்னியின் நடனம் (1976)**

- சுதேச பாரம்பரிய கலைப் பண்புகளையும் ஐரோப்பிய நவீன கலைப் பண்புகளையும் (பின் ஒளியியல் வாதம், போவிசம் (Fauvism) ஒன்றிணைத்து இதனை நிர்மாணித்துள்ளார்.
- அக்கடமிக் கலையின் பழமையான இயல்புகளில் இருந்து விலகி இவ் ஓவியத்தை வரைந்துள்ளார்.
- கண்ணுக்குப் புலப்படும் இயற்கையான பண்புகள் மோடிப்படுத்தப்பட்டுள்ளன. தூர நோக்கு இயல்புகள் பிரயோகிக்கப்படவில்லை.

**(11) குழந்தைப் பருவமும் இளைமையும் (Infant and young)**

- இவ்வோவியம் நவீன வாதக் கலைப் பண்புகளில் ஒன்றான இயற்கைத் தன்மையை திரிபுபடுத்தும் முறையினைக் கொண்டு, ஓவியத்தின் கருத்து வெளிப்படுத்தப்படுகிறது.
- அக்கடமிக் யதார்த்தவாத கலை இயல்புகளான பின்னணி, முன்னணி எனும் கோட்பாட்டு விதிகளை விலக்கி இவ்வோவியம் திட்டமிடப்பட்டுள்ளது.
- இடப்பரப்புக்குள் அடங்க வேண்டிய வடிவங்களின் திட்டவட்டமான தன்மையை இவ்வோவியம் புலப்படுத்தவில்லை.
- மனப்பதிவுவாதம், பின் மனப்பதிவுவாதம், ஜேர்மன் வெளிப்பாட்டுவாத கலைப் பண்புகளின் செல்வாக்கினை இவ்வோவியம் பெற்றுள்ளது.

DRAFT

**ஏ. மார்க் (1933 - 2000)**

- இலங்கை நவீன வாத கலைத்துறையின் முன்னோடிக் கலைஞராக இவரை இனங் காணலாம்.
- அவர் ஓவியக் கலை அமைப்புகளை உருவாக்க தனது பங்களிப்பை முக்கியமாக வழங்கினார்.
- ஐரோப்பிய நவீனவாத கலையின் செல்வாக்குடன் நிர்மாணிப்புக்களில் ஈடுபட்ட கலைஞராவார்.

**(1) பெயரிடப்படாத ஓவியம்**

- கலப்பு ஊடகத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சிதைந்து காணப்படும் சுவர்களுக்கு இடையில் உள்ள முகங்கள் இவ்வோவியத்தின் கருப்பொருள்களாக அமைந்துள்ளன.
- கனவடிவவாதக் கலையின் இயல்புகளைக் காணலாம்.
- உருவச் சிதைப்புப் பண்புகளை வெளிப்படுத்துகிறது. (Abstraction)

**(11) மனிதனும் நாயும்**

- நவீன கலைப் பிரயோகங்களைக் கொண்ட இக்கலைப் படைப்பு மீது கனவடிவ வாதக் கலைப் பண்புகளும் கலைஞர் ஹென்ரி மூவரின் சிற்ப நிர்மாணிப்பியல்புகளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.
- இப்படைப்புக்காக சூழலில் இருந்து பொறுக்கியெடுத்த பொருட்கள் (Found Objects) அதாவது பிளாஸ்டிக் போத்தல்கள், பிளாஸ்டிக் குழாய்கள் போன்றவை பயன்படுத்தப் பட்டுள்ளன.
- நீளமான கோறையுடைய பிளாஸ்டிக் போத்தல்களை வெட்டி, உருவங்கள் சந்தத்துக்கு இசைவாகவும் சமநிலையாகவும் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் வெளித் தள்ளிய மற்றும் உட்குழிந்த பரப்புகளால் இது நிரமாணிக்கப்பட்டுள்ளது.
- விபரிப்புத் தன்மை குறைந்து எளிய வடிவங்களைக் கொண்ட எளிமையான வெளிப் பாடானது இக்கலைப் படைப்பின் முக்கிய பண்பாகும்.
- ஏ. மார்க் எனும் கலைஞனால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களில் சிறப்பானதொரு ஆக்கமாக இதனைக் குறிப்பிடலாம்.
- முன்னங்கால்களை உயர்த்தி பின்னங்கால்களை ஊன்றி நிற்கும் இரு நாய்களுடன் ஒரு மனிதனின் உருவம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- நிற்கும் நிலையிலுள்ள நாய்களின் உருவங்களை விட சிறியதாக மனித உருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஏ. மார்க்கு எனும் கலைஞனால் வடிவமைக்கப்பட்ட இச் சிற்பமானது அவருக்கே உரித்தான புதிய சிற்ப அமைப்பைக் கொண்டுள்ளது.
- நவீன கலை பயன்பாட்டைக் கொண்ட இச் சிற்ப நிர்மாணிப்பு கனவடிவவாத கலைப்புண்புகளினதும், ஹென்ரி மூவரின் சிற்ப நிர்மாணிப்புப் பண்புகளினதும் செல்வாக் கைப் பெற்றுள்ளது என்பது விமர்சகர்களின் கருத்தாக அமைகிறது.
- வீசப்படும்/சூழலில் இருந்து பொறுக்கியெடுத்த பொருட்கள் (Found objects) என்பனந உபயோகித்து அமைக்கப்பட்ட இப் பைப்புக்காக பிளாஸ்ரிக் போத்தல்கள், பிளாஸ்ரிக் பரப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- பிளாஸ்ரிக் போத்தல்களின் நீளமான மற்றும் கோறையான வடிவங்கள், சந்தத்துக்கு இசைவாகவும் சமநிலையாகவும் அமையுமாறு வெளித்தள்ளப்பட்டுள்ள மற்றும் உட்குழிந்த பகுதிகள் தோன்றும் விதத்தில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**திஸ்ஸ ரணசிங்க (1925)**

- இலங்கை நவீனத்துவ சிற்பக் கலைத்துறையின் முன்னோடிக் கலைஞராவார்.
- ஐரோப்பிய நவீனத்துவ சிற்பக் கலையின் கலை உத்திகளையும் தொழில் நுட்ப முறைகளையும் நவீன சிற்பக் கலையுடன் ஒன்றிணைத்த கலைஞன் இவராவார்.

**(1) கடினச் செயல் (துஷ்கர கிரியாவ)**

- தியான முறையில் கடினச் செயலில் ஈடுபட்டிருக்கும் போதி சத்துவரை நினைவு படுத்தும் சிற்பமாகும்.
- வார்ப்பு முறையில் வெண்கலத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இது ஐரோப்பிய நவீனவாத சிற்பக் கலை இயல்புகளையும் தெற்காசிய மதமொன்றின் தொனிப்பொருளையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.
- கரடு முடான மேற்பரப்பு, இயல்பில் இருந்து விடுபட்ட தன்மை, உடலுறுப்புகளை மிகைப்படுத்திக் காண்பித்தல் எனும் பண்புகளைக் கொண்டுள்ளது.

DRAFT

**(11) "மஹீஷாசுர" எனும் சிற்பம்**

- இந்து மதத்தின் இலக்கியக் கருப்பொருளான சூரன் போரின் நிகழ்வொன்றையே இது குறிக்கிறது.
- எருதின் தோற்றமுடைய மஹீச எனப்படும் அசுரனை தோற்கடித்த/கொலைசெய்த காட்சி புலப்படுகிறது.
- அரூபவாதத்தன்மை, இயல்காட்சித்தன்மை என்பன ஒன்றிணைந்ததாக இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இது மரபையும் நவீனத்துவத்தையும் இணைக்கும் வகையில் உள்ளது.
- எளிமை, உருவச் சிதைப்பு, உருவக் குறைப்பு எனும் நவீனவாத சிற்பக் கலை இயல்புகளைக் கொண்டது.

**எச். ஏ. கருணாரத்தின (1929)**

- இவர் இலங்கையின் நவீன கலையின் அரூப கலைப் பள்ளியை ஆரம்பித்து வைத்தவராவார்.
- இவரது ஓவியங்கள் அமெரிக்க அரூப வெளிப்பாட்டு வாதத்தினதும் (Abstract Expresionism) ஆசிய கலை நிர்மாணிப்புகளினதும் செல்வாக்கைப் பெற்றுள்ளன.

**(1) வாழ்க்கையின் அரவணைப்பு**

- கலப்பு ஊடகங்கள் (Mixed medium) உபயோகிக்கப்பட்டள்ளன. அத்துடன் கலப்பு நுட்பத்திறனுடன் உயர் நவீனவாத ஓவியமாக இவ்வோவியம் வரையப் பட்டுள்ளது.
- சேர்மானக் கனவடிவவாத (Synthetic Cubism) கலை உத்திகளுடனும் அமெரிக்க அரூப வெளிப்பாட்டுவாத பண்புகளுடனும் இவ்வோவியம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதாவது கொலாஜ் முறையை உபயோகித்து மை ஊற்றப்பட்டு (Drip) இது நிர்மாணிக் கப்பட்டுள்ளது.
- அமெரிக்க அரூப வெளிப்பாட்டுவாத (Abstract Expresionism) கலை மரபுக்குரிய நிர்மாணிப்பாகும்.

DRAFT

**(11) பெயரிடப்படாத ஓவியம்**

- இச்சிற்பம் சேர்மானக் கனவடிவ வாதத்தின் செல்வாக்கைப் பெற்றுள்ளது.
- தெற்காசிய விக்கிரகவியற் பண்புகளுடன் இச்சிற்பம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.
- கழிவுப் பொருட்களை உபயோகித்து இதனை நிர்மாணித்துள்ள விதம் சிறப்பானது.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- இலங்கையின் நவீன ஓவியம் மற்றும் சிற்பக்கலையில் தாக்கத்தினை ஏற்படுத்திய கலைப்போக்குகளை ஸ்டான்லி அபேசிங்க, ஏ. மார்க்கு, திஸ்ஸ ரணசிங்க, எச்.ஏ. கருணாரத்ன எனும் கலைஞர்களுடைய ஆக்கங்களைக் கொண்டு விசாரிக்குக.
- அக்கலைஞர்களுடைய ஆக்கங்களில் காணப்படும் கலை உத்திகளின் பயன்பாட்டையும் விசாரிக்குக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள், சமகால கலைப் படைப்புக்கள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 :** **இந்திய கலைஞர்களுடைய ஆக்கங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.3.1 :** **ஜமினி றோய், அம்ரிதா ஷர்கில் ஆகியோரின் ஓவியங்களை மதிப்பிடுவோம்**

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணிணி இயந்திரங்கள்
- இந்திய நவீனத்துவக் கலையை விபரித்துக் கூறுவார்.

**கற்றற் பேறுகள் :**

- ஜமினி றோயின் (Jamini Roy) ஓவியங்களுக்கு தாக்கத்தினை ஏற்படுத்திய தழுவல்களை விபரித்துக் கூறுவார்.
- ஜமினி றோயின் ஓவியங்களில் காணப்படும் உருவங்கள், வர்ணங்கள், இரேகைப் பயன்பாடு என்பவற்றை மதிப்பீட்டுக் குட்படுத்துவார்.
- அம்ரிதா ஷர்கில் (Amrita Sher-Gil) இனது ஓவியங்கள் பெற்றுள்ள தழுவல்களை விபரித்துக் கூறுவார்.
- அம்ரிதா ஷர்கில் இன் ஓவியங்களுடைய கருப்பொருள், கலைப் பாணிக்குரிய இயல்புகள், வர்ண உபயோகம் என்பவற்றை விபரித்துக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலைநிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

DRAFT

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### ஜமினி றோய் (1887 - 1972)

- இந்திய நாட்டார் கலை மரபின் செல்வாக்கை அதிகளவில் பெற்ற ஓவியராவார்.
- இந்திய சுதேச கலைப் பாணியையும் ஐரோப்பிய நவீன கலையின் கலைப் பாணிக்குரிய இயல்புகளையும் இவரது ஓவியங்கள் கொண்டுள்ளன.
- எளிமை, பிரகாசமான, தட்டையான வர்ண உபயோகம், விளிம்புகளில் உள்ள தடித்த இரேகைகள் என்பன இவரது ஓவியங்களில் காணப்படுகின்றன.

### (1) தாயும் சேயும் (Mother and Child)

- இக்கருப்பொருளில் ஜெமினி றோய் பல ஓவியங்களை வரைந்துள்ளார்.
- அமர்ந்த நிலையில் குழந்தைக்குப் பாலூட்டும் தாய் இவ்வோவியத்தில் காணப்படுகிறார். தாயும் சேயும் எளிமையாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இது முப்பரிமாணத் தன்மையில் இருந்து விலகியுள்ளது.
- தாய், சேய் உருவங்கள் அவர்களது உடலின் புறத்தோற்றங்களின் சிலவற்றை மட்டுமே பிரதிபலிக்கின்றன.
- வெள்ளை, இளஞ்சிவப்பு, இருளான மஞ்சள் ஆகிய குறிப்பிட்ட வர்ணங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஓவியத்தின் வலப்புற மேற் பக்கத்தில் சூரியனின் அடையாளம் காணப்படுகிறது.

### (11) பூனையும் சிங்கறாலும்

- சிங்கறால் ஒன்றை வாயில் கௌவிக் கொண்டிருக்கும் பூனையொன்று இவ்வோவியத்தில் காணப்படுகின்றது.
- பாரம்பரிய அல்லது அக்கடமிக் ஓவியக் கலையின் கவனத்துக்கு உள்ளாகாத கருப்பொருள் இவ்வோவியத்தின் மூல காரணமாகியுள்ளது.
- கறுப்பு நிறத் தடித்த புறவரை இரேகைகளும், தட்டையான முறையிலான வர்ணப் பயன்பாட்டையும் இதில் காணலாம்.
- சிங்கரால் மஞ்சள் நிறத்தினாலும் பூனை வெள்ளை நிறத்தினாலும் காட்டப்பட்டுள்ளன. பின்னணி இள நீல நிறத்தையுடையது.
- இந்திய நாட்டார் கலையில் இருந்து பெற்ற செல்வாக்குடன் மோடிப்படுத்தப்பட்ட முறையில் இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.

### அம்ரிதா ஷர்கில் : (1913 - 1941)

- 20ம் நூற்றாண்டில் இந்திய ஓவியக் கலையுடன் பணியாற்றிய முக்கியமான பெண் கலைஞராவார்.
- இந்திய பெண்களும், பெண் பிள்ளைகளும் ஓவியங்களின் கருப்பொருள்களாகின.
- பல பாவங்களைக்கொண்ட உடல் நிலைகளின் உணர்ச்சி ததும்பும் முகங்கள் இவ்வோவியங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன.
- பிரான்ஸ் நாட்டுக் கலைக் கல்வியின் காரணமாக மனப்பதிவு வாதம் மற்றும் பின் மனப்பதிவு வாதங்களின் கலைப்பண்புகள் அவரது ஓவியங்களுக்கு செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

DRAFT

### (1) மூன்று பெண் பிள்ளைகள் (Three Girls)

- செயலிழந்த நிலையில் அமர்ந்திருக்கும் மூன்று பெண் பிள்ளைகள் இதற்கு கருப் பொருளாக அமைந்துள்ளன.
- அவர்கள் பளபளப்பான வர்ண ஆடைகள் அணிந்திருக்கும் போதிலும் முகம் சந்தோசமற்ற நிலையை உணர்த்துகிறது. நிச்சயமற்ற நிலையில் பார்த்த வண்ணம் உள்ளனர்.
- மூன்று உருவங்களும் அருகருகே இருக்கும் போதிலும் அவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமான வெவ்வேறான சிந்தனைகளில் ஆழ்ந்திருப்பவர்களாகத் தோற்றமளிக்கின்றனர்.
- சுவரில் பதிந்திருக்கும் அவர்களது இருளான நிழல் மூன்று பெண்களினதும் நிலையை அடையாளப்படுத்துவதாக உள்ளன.

### (11) மணம் முடிப்பதற்குத் தயாராகும் மணப்பெண்

- ஐரோப்பிய அக்கடமிக் அறிவுக்கு அப்பாற்பட்டதாக வரையப்பட்ட ஓவியமாகும்.
- கிராமத்தின் மணப்பெண் ஒருவரே இவ்வோவியத்தின் கருப்பொருளாகியுள்ளார். அவள் குளியலுக்கான ஓரிடத்தில் அதற்காகத் தயாராகும் நிகழ்வு சித்தரிக்கப் பட்டுள்ளது.
- இந்திய கிராமத்து கலைப்பண்புகளும், இயல்பு நிலையை இயல்புக்கு மாறான ஓவியக் கலைப்பண்புகளும் இதில் காணக்கூடியதாக உள்ளது.
- பின் மனப்பதிவுவாத ஓவியனான போல் கொகேனின் உருவ அமைப்பு, வர்ணப் பயன்பாடு போன்ற பண்புகளைக் கொண்ட நவீன போக்கின் கலை நிர்மாணிப்பாகும்.
- இயல்பான வர்ணத் தொகுதியையும் செந்நெறிக்கு அடங்காத கருப்பொருளையும் இது சித்தரிக்கிறது.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பிடும்

- ஜமினி றோய் வரைந்த ஓவியங்களின் கருப்பொருள், கலை உத்தி என்பன தொடர்பாக மதிப்பீடொன்றைச் செய்க.
- அம்ரிதா ஷர்கில் வரைந்த ஓவியங்களின் கருப்பொருள், கலை உத்தி என்பன தொடர்பாக மதிப்பீடொன்றைச் செய்க.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள், சமகால கலைப் படைப்புக்கள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4 :** **ஐரோப்பிய மீயதார்த்தவாத அகவய தாத்வீகக் கலையின் முன்னோடிக் கலைஞர்களின் நிர்மாணிப்புக் களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.4.1 :** **சல்வடோர் டாலி (Salvador Dali) யின் நிர்மாணிப்புக் களைக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணிணி இயந்திரங்கள்

DRAFT

**கற்றற் பேறுகள் :**

- மீயதார்த்தவாதக் கலையின் அடிப்படை இயல்பு, எண்ணக் கருக்கள் என்பவற்றை விளக்குவார்.
- சல்வடோர் டாலியின் ஓவியங்களின் கருப்பொருள்களை விபரிப்பார்.
- சல்வடோர் டாலியின் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களின் கலை உத்திகளை பகுத்தாய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**மீயதார்த்தவாதக் கலையின் அடிப்படை இயல்புகள்**

- 20ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் உருவான முக்கிய கலைப்போக்காகும்.
- முதலாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களே இவரது ஓவியங்களுக்கு அடித்தளம் அமைந்தது.
- சிக்மன் பிரொய்ட் அவர்களின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாடுகளான நனவிலிநிலை அடிமனதின் உணர்வுகள், கனவு எனும் காரணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை
- முரண்பாடான தன்மை எழுமாற்று மற்றும் தன்னியக்க செயற்பாடுகள் என்பன மீயதார்த்தவாதக் கலையின் முக்கிய பண்புகளாகின்றன.
- முரண்பாடான தன்மை (illogical) மீயதார்த்தவாதக் கலையின் முக்கிய பண்பாகும்
- இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட, இயற்கைக்கு மாறான, கற்பனைத்திறன் கொண்ட, புதிரான உருவங்களைக் காணலாம்.
- மீயதார்த்தவாதத்துக்குரிய கலைஞர்கள் கலைத்துவமான ஆக்கங்களை உருவாக்கும் போது வெளிப்புற உலகைவிட மனதை ஆக்கிரமிக்கும் மனோபாவத்தின் முக்கியத் துவத்தைத் திடமாக நம்பினர்.

**சல்வடோர் டாலி (1904 - 1984)**

- ஸ்பானியாவில் பிறந்த இவர் மீயதார்த்தவாத்தின் முக்கியமான ஓவியரொருவராவார்.
- அடி மனதின் உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில் உருவான தொனிப்பொருள்களை இவரது ஓவியங்கள் கொண்டுள்ளன.
- சிக்மன் பிரொயிட் அவர்களின் மனோதத்தவ எண்ணக்கருக்கள் டாலியின் நிர்மாணிப்புக்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
- டாலியின் ஓவியங்கள் அதிர்ச்சியான தன்மை, கனவின் சுபாவம், மிகைப்படுத்திக் காண்பித்தல். குறியீட்டு வடிவங்கள் எனும் முக்கிய பன்புகளைக் கொண்டுள்ளன.

DRAFT

### (i) நீடித்த நினைவு (The Persistance of Memory)

- எண்ணெய் வர்ணத்தினாலான இது குறியீட்டு உருவங்கள் அதிகம் கொண்ட நிர்மாணிப் பாகும்.
- உருகிய நிலையில் உள்ள கடிகாரங்களும் எறும்புகளும் இதில் குறியீட்டுருக்களாக அமைந்துள்ளன.
- ஓவியத்தின் மத்தியில் நீளமான மூக்குடன் தலையொன்று காணப்படுகிறது. இது உறக்கத்தில் கனவு காணும் ஒருவரை நினைவுபடுத்துகின்றது.
- வியப்பூட்டும் இத்தலையை நுணுக்கமாக நோக்கினால் அதன் உறுப்புகள் பலவித பூச்சிகளின் அங்கங்களுக்கு ஒத்த வடிவமைப்புகளைக் கொண்டுள்ளதை அவதானிக்க லாம். மயிர்கொட்டியின் நீண்ட உரோமங்கள் உடையதாக புருவங்கள் வரையப் பட்டுள்ளன. மூக்குக்குள் நத்தையின் வடிவம் ஒன்று தென்படுகின்றது.
- காலம், இடப்பரப்பு, சுபாவம் எனும் மூன்று காரணிகளுக்கிடையிலான தொடர்பை புலப்படுத்துகின்ற ஓவியமொன்றாகும்.

### (ii) உறக்கம் (Sleep) 1937

- இயற்கைக்கு மாறாக தரைக் காட்சியொன்றில் இழைகள் தாங்கி நிற்கும் விதத்தில் பொருத்தி வைக்கப்பட்டுள்ள, உறக்க நிலையிலுள்ள தலையொன்று இவ்வோவியத்தின் முக்கிய உருவமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.
- மீயதார்த்தவாதிகளின் நம்பிக்கையான உறக்கத்துடன் நனவிலி நிலை இதன் கருப்பொருளாக இடப்பட்டள்ள விதம் புலனாகின்றது.
- தொடுவானத்துக்கு அப்பால் விசித்திரமான மற்றும் மறைவான தன்மையுடைய மலைகளுடனான தரையொன்று தென்படுகின்றது.
- தாங்கும் இழைகளால் பொருத்தப்பட்ட முகம் இழுபடும் மற்றும் இடிந்து விழக்கூடிய பொருளொன்றினால் அமைக்கப்பட்ட தன்மையைக் கொண்டுள்ளது.
- இயல்காட்சிக் கலையின் முப்பரிமாண, தூரநோக்குப் பண்புகளுடன் இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட விடயங்களையும் உருவங்களையும் கருப்பொருளாகக் கொண்டுள்ள மையை இவ்வோவியத்தில் காணலாம்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- மீயதார்த்தவாதக் கலையின் அடிப்படைப் பண்புகள் அடங்கிய அட்டவணையொன்றை அமைக்க.
- சல்வடோர் டாலியின் நிர்மாணிப்புகளின் கருப்பொருள் மற்றும் கலை உத்திகள் தொடர்பான மதிப்பீடொன்றை செய்க.
- ப்ரீடா காலோவின் ஓவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகளை அட்டவணைப்படுத்துக.
- ப்ரீடா காலோவின் ஓவியங்களைக் கொண்டு கலை உத்திகள் பிரயோகிக்கப்பட்டுள்ள விதத்தை விபரிக்குக.

DRAFT

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள், சமகால கலைப் படைப்புக்கள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.4 : ஐரோப்பிய மீயதார்த்தவாத அகவய தாத்வீகக் கலையின் முன்னோடிக் கலைஞர்களின் நிர்மாணிப்புக் களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.4.2 : ப்ரீடா கலோவின் ஓவியங்களைக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவட்டுக்கள், Power Point Presentation காணொளி எறிவைக் கருவி, கணிணி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- ப்ரீடா காலோ வரைந்த ஓவியங்களின் கருப்பொருட்களை விபரித்துக் கூறுவார்.
- ப்ரீடா காலோ வரைந்த ஓவியங்களின் சிறப்பியல்புகளை மதிப்பீட்டுக்குடுட்படுத்துவார்.
- அவரது ஆக்கங்களின் கலை உத்திகளை பகுப்பாய்வுக்குட் படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### மீயதார்த்தவாதக் கலையின் அடிப்படை இயல்புகள்

### ப்ரீடா காலோ - Frida Khalo (1907 - 1954)

- வாழ்க்கை அனுபவங்களையும் உணர்வுகளையும் கருப்பொருளாகக் கொண்ட அவரது ஓவியங்கள் புதுமையான கனவுகளையும் மறைவான கருத்துகளையும் வெளிப்படுத்தும் காரணத்தினால் மீயதார்த்தவாதக் கலைப்போக்கின் முக்கியமானதொரு கலைஞராகக் கருதப்படுகின்றார்.

DRAFT

- இவர் சுயமாகக் கற்றே தனது ஆக்கங்களைப் படைத்துள்ளார்.
- அவரது ஓவியக் கலையில் மக்சியன் நாட்டார் கலையும் தியோகா றிவேராவின் கலை நிர்மாணிப்புகளின் பண்புகளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
- நிரம்பிய தளபரப்பொன்றில், குறியீடு வடிவிலான உருவங்கள் அதிகமாக உபயோகித்திருப்பதுடன் ஓவியக்கலையின் முப்பரிமாண, தூரநோக்குப் பண்புகளும் காணக்கூடியதாக இருக்கிறது.

### (i) முள் மாலை தரித்த சுய பிரதிமை ஓவியம் (Self Portrait with Necklace of Throns)

- கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட ஓவியம் சுய பிரதிமையைக் குறிக்கிறது.
- கழுத்தை சுற்றியுள்ள முட்களைக் கொண்ட மாலை மார்புப் பகுதியெங்கும் வியாபித்திருக்கிறது. மாலையின் நடுப்பகுதியில் சிறிய பறவையொன்று உள்ளது. (Humming bird) தோள்களின் இரு புறத்தில் குரங்கொன்றும் பூனையொன்றும் காணப்படுகிறது.
- தனிப்பட்ட வாழ்க்கையின் உணர்வுகள் குறியீட்டு வடிவில் இவ்விலங்குகளால் குறிக்கப் படுகின்றன.
- தெளிவான வர்ணத்தொகுதி உபயோகப்பட்டிருப்பதுடன், உருவங்களின் முப்பரிமாணப் பண்பும் விபரிப்புப் பண்புளும் நன்றாகப் புலப்படுகின்றன.

### (ii) ப்ரீடா இருவர் (Two frida) 1938

- கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்ட இவ்வோவியத்தில் முக்கியமான உருவங்கள் இரண்டும் ப்ரீடாவின் இரண்டு விதமான பிரதிமை ஓவியங்களாகின்றன.
- ஹங்கேரிய - யேர்மன் தொடர்புடைய ப்ரீடா ஒருவராகவும் மக்சியன் உரிமையுடைய ப்ரீடா இன்னொருவராகவும் பிரதிமை ஓவியங்களில் காட்சி தருகிறார்.
- இப்பிரதிமை உருவங்கள் இரண்டிலும் இதயம் திறந்த நிலையில் உள்ளது.
- விபரிப்புத் தன்மையடன் உருவங்களை சித்தரித்து இருத்தல், குறியீடுடு வடிவில் பொருளை வெளிப்படுத்துதல், முப்பரிமாண இயல்பு வர்ண பயன்பாடு என்பன இவ்வோதியத்தின் சிறப்பியல்புகளாகின்றன.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- மீயதார்த்தவாதக் கலையின் அடிப்படைப் பண்புகள் அடங்கிய அட்டவணையொன்றை அமைக்க.
- சல்வடோர் டாலியின் நிர்மாணிப்புகளின் கருப்பொருள் மற்றும் கலை உத்திகள் தொடர்பான மதிப்பீடொன்றை செய்க.
- ப்ரீடா காலோவின் ஓவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகளை அட்டவணைப்படுத்துக.
- ப்ரீடா காலோவின் ஓவியங்களைக் கொண்டு கலை உத்திகள் பிரயோகிக்கப்பட்டுள்ள விதத்தை விபரிக்குக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள் உண்ணாட்டு, வெளி நாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப் படைப்புகள் சமகால கட்புல கலைப் படைப்புக்கள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 : அரூபவாத கலையின் முன்னோடிக் கலைஞர்களது நிர்மாணிப்புகளைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.1 : வசிலி கன்டிஸ்கியின் நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்**

**பாடவேளைகள்** : 02

**தரவிருத்தி உள்ளீடு** :

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணிணி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள்** :

- அரூப வாதக் கலையின் அடிப்படைப் பண்புகளை விளக்குவார்.
- அரூப வாதக் கலையானது, நவீனத்துவவாதக் கலையில் ஏற்படுத்திய மாற்றத்தினை விளக்குவார்.
- அரூப வாதக் கலைஞர்களைக் குறிப்பிடுவார்.
- வசிலி கன்டிஸ்கியின் நிர்மாணிப்புகளை விமர்சித்து நயந்துரைப்பார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

DRAFT

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### அரூப வாதக் கலை

- அரூபகக் கலையென்பது ''இனங்கண்டு கொள்ளக்கூடிய உருவமல்லாத'' கட்புலக் கலையாகும்.
- வசிலி கன்டிஸ்கி, மலேவிச், பியற் மொன்றியன், பிறன்குசி என்பவர்கள் இக்கலைப் போக்கில் பங்காற்றிய கலைஞர்களாவார்.
- இக்கலை இரு போக்குகளைக் கொண்டுள்ளது. இயற்கையில் உள்ள கட்புல நோக்கங்கள் எளிமையாக்கப்பட்டு ஓவியமாக சித்தரித்தல் முதலாவது போக்காகும். மனதில் உருவாகிய அரூப வடிவங்களின் துணையுடன் ஓவியத்தை ஒழுங்கமைத்தல் இரண்டாவது போக்காகும்.
- இயற்கை அல்லது அதிலடங்கும் பொருட்கள் அதே விதத்தில், அவற்றை போல செய்து, மீள் நிர்மாணம் செய்து அல்லது கைவிடப்பட்டு விடும் செயற்பாடுகள் இக்கலைத்துறையில் உண்டானது.

### வசிலி கன்டிஸ்கி (1866 - 1944)

- மொஸ்கோ நகரின் செல்வந்தக் குடும்பமொன்றில் பிறந்த கண்டிஸ்கி ரஷ்ய கிராமியக் கலையினூடாக ஓவியக் கலையில் பிரவேசித்தார்.
- அரூப வடிவக் கலைப்பாணியுடன் ஓவியங்களை வரையும் கலைஞராவார்.
- இரேகைகளால் உருவாக்கிய அசைவு மற்றும் நெகிழ்வுத் தன்மையுடைய வடிவங்களும் அவற்றுக்கு வர்ணங்கள் பூசப்பட்டிருப்பதையும் அவரது ஆரம்பகால ஓவியங்களில் காணக்கூடியதாக இருந்தது. இவை இயக்க அரூப (Organic abstract) ஓவியங்கள் எனப்பட்டது.
- பின்னர் இருபரிமாண கேத்திரகணிதர தள வடிவங்களால் வரைந்த ஓவியங்கள் கேத்திர கணித அரூப வடிவ ஓவியங்கள் எனப்படுகின்றது.

DRAFT

### (1) ஒழுங்கமைப்பு VII (Composition VII) 1913

- கன்டிஸ்கியின் அரூபவாதக் கலையின் முதிர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. 1913 இல் கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
- விசித்திரமான வர்ணத் தொகுதியைக் கொண்டுள்ளது. சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா, செம்மஞ்சள், வெள்ளை வர்ணங்களின் பேதங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- ஓவியத்தின் தலைப்புக்கு ஏற்ற விதத்தில் சந்தத்துடன் வர்ணக் கலவைகளால் ஓவியம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- இவ்வோவியம் முன் ஏற்பாடுகள் எதுவுமின்றி புதுமை வடிவில் வரையப்படும் கலைப் பாணியைக் கொண்டது. (Improvisation)

### (11) சிறப்பு வெளிப்பாடான Accented Corners No. 247 (1923)

- இவ்வோவியத்தில் இயற்கை வடிவங்கள் உபயோகிக்கப்படவில்லை.
- கேத்திரகணித தளவடிவங்களும் உருவங்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன.
- இவ்வோவியம் அக்கணத்திலான ஆக்கத்தின் கலைப்பாணியை விட முற்று முழுதான மாற்றத்தைக் கொண்டது.

- இக்கலைப்பாணியானது தொழில் துறையினர் அறிமுகப்படுத்திய வடிவங்களை வியப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.
- தொழில் துறையின் அடிப்படைப் பண்புகளான இயக்கம், வேகம் என்பன இவ்வோவியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.
- தொழில் துறையின் இயக்கம் தொடர்பான புதிய அழகியல் தன்மை உருவாக்கப் பட்டுள்ளது.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- அரூப வாதக் கலைப் பண்புகளை உள்ளடக்கி அட்டவணை ஒன்றைத் தயாரிக்க.
- கன்டிஸ்கியின் நிர்மாணிப்புகளை மதிப்பீடு செய்க.

DRAFT

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் சமகாலக் கட்புலக்கட்டமைப்புக்கள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.5 :** **ஐரோப்பிய அருபவாதக் கலைஞர்களது நிர்மாணிப்பைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.5.2 :** **பியற் மொன்றியனின் (Piet Mondrean) ஓவியங்களைக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சுப் பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக் கருவி, கணிணி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- பியற் மொன்றியனின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- பியற் மொன்றியனின் நிர்மாணிப்புக்களை விமர்ச்சித்து நயப்பார்.
- பியற் மொன்றியனின் நிர்மாணிப்புக்கள் அரூப கலைக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**பியற் மொன்றியன் (1872 - 1944)**

- நெதர்லாந்தில் பிறந்த மொன்றியனும் டி ஸ்டைல் (Destijl) எனும் கலைப்போக்கில் இணைந்த கலைஞராவார்.
- தரைத் தோற்றக் காட்சிகள் இவரது ஓவியக் கலையின் கருப்பொருளாக அமைந்தது ஆரம்ப காலத்தில் மனப்பதிவுவாத பண்புகளைக் கொண்ட தரைத் தோற்றக் காட்சிகளை நிர்மாணித்த போதிலும் பின்னர் மிகவும் எளிமையான இரேகைகள், நாற்பக்கல்களை அடிப்படை யாக அமைந்ததொரு வெளிப்பாட்டு முறையைக் கொண்டிருந்தார்.

- வெள்ளை நிறத்தளத்தை நாற்பக்கலான அமைப்புகள் தோன்றும் விதத்தில் செங்குத்து கிடைக்கோடுகள் வரைந்து வகுத்துக் கொண்டார்.
- இரேகைகள் கறுப்பு வர்ணத்தினால் இடப்பட்டுள்ளன. அதனால் உருவான கட்டடங்களை வர்ணம் தீட்ட நீலம், மஞ்சள், சிவப்பு எனும் அடிப்படை வர்ணங்களை உபயோகித்துள்ளார்.

**1. மஞ்சள், கறுப்பு, நீலம், சிவப்பு, சாம்பல் கலவை (1920)**

- மொன்றியலின் அதிகமான ஓவியங்களைப் போல இதுவும் தரை தோற்றக் காட்சிகளின் வடிவங்களால் உருவாக்கப்பட்டது.
- மொன்றியனின் அதிக ஓவியங்களில் காணப்படும் செங்குத்து கிடைக் கோடுகளைத் தவிர சாய்வான தன்மையுடைய வடிவங்களும் சேர்கக்ப் பட்டுள்ளன.
- இரேகைகள் வர்ணங்கள், தளம் ஆகியவற்றுக்கிடையில் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- De Stijl எனும் கலைக்கூடத்தைச் சேர்ந்த நிர்மாணிப்பாகும்.
- மொன்றியனும் அரூப வாதக் கலைஞர்களின் தீவிர உத்திகளில் ஒன்றான எளிமையை உபயோகித்துள்ளார். இயற்கையில் உள்ள சகல பொருட்களும் எளிமையான இரேகைகள் கட்டங்களாக மாறும் வரை சுருக்கி கன்வசு மீது மீள் நிரமாணம் செய்துள்ளார்.
- அடிப்படை வர்ணங்கள் தட்டையாகப் பூசப்பட்டுள்ளன.

**2. சிவப்பு, நீலம், மஞ்சள் கலவை II (1930)**

- சதுர வடிவ அமைப்புக்குள் செங்குத்து, கிடைக்கோடுகள் வரைந்து நாற்பக்கல் வடிவங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது.
- ஓவியத்துக்குள் சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை நிற கட்டங்களை முக்கியமாக இனங்காணக் கூடியதாக உள்ளன. அவை தடித்த கறுப்பு நிறக்கோடுகள் ஒன்றை ஒன்று இடைவெட்டுவதால் உருவாகியவை ஆகும்.
- ஓவியத்தின் வலப்பக்க மேற் பகுதியில் சிவப்பு நிறக் கட்டம் முக்கியமான வடிவமாக கணிக்கப்படுகிறது. அதற்கெதிராக நீல நிறக் கட்டமொன்று காண்பிக்கப்பட்டுள்ளது. ஓவியத்தின் வலப்பக்க கீழ் பகுதியில் சிறிய மஞ்சள் நிறக் கட்டமொன்று உள்ளது.
- இந்த சிவப்பு, நீல, மஞ்சள் கட்டங்கள் வேறுபட்ட பரிமாணத்தை கொண்டிக்கின்றன. அவை நிலைநாட்டப்பட்டுள்ள விதம் இணக்கப்பாடு வேறுபாடு ஆகிய இரண்டையும் பிரதிபலிக்கின்றன.
- பொருட்களின் முப்பரிமாணத் தன்மை நிழல்களை காண்பித்தல் போன்ற மெய்யான நிலையில் இருந்து விடுபட்டு, செங்குத்து கிடைக்கொடுகள் அனைத்தும் கட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.
- De Stijl எனும் கலைக்கூடத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 1930 இல் இது வரையப் பட்டுள்ளது.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பியற் மொன்றியனின் ஆக்கங்களின் அரூப வெளிப்பாட்டுப் பண்புகளை அட்டவணைப் படுத்துக.
- அப்பண்புகள் புலப்படும் பியற் மொன்றியனின் ஓவியங்களைப் பற்றிப் பகுத்தாய்வு செய்து மதிப்பிடுக.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் சமகாலக் கட்புல கலையமைப் புக்கள் மற்றும் பொதுசனத் தொடர் பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசனைக்குட்படுத்தி அவற்றின் இயல்பு களைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.6 :** **ஐரோப்பிய சிற்பக் கலைஞர்களது நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.6.1 :** **ஒகஸ்தே ரொடின் அவர்களின் சிற்ப நிர்மாணிப்புக் களைக் கற்றறிவோம்**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களைக் கொண்ட இறுவட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக்கருவி, கணிணி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- ஒகஸ்தே ரொடினின் நிர்மாணிப்புகளைக் ஆராய்ந்தறிவார்.
- ஒகஸ்தே ரொடினின் நிர்மாணிப்புகளை விமர்சித்து நயப்பார்.
- நவீன வாத சிற்பக் கலைக்கு ரொடின் ஆற்றிய பணியை ஆராய்ந்தறிவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**ஒகஸ்தே ரொடின் (1840 - 1917)**

- பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஒகஸ்தே ரொடின் என்பவர். நவீன வாத சிற்பக் கலையை அறிமுகப்படுத்தப் பெரும் பணியாற்றிய கலைஞர் ஒருவராவார்.
- இவர் மனப்பதிவு வாதக்கலையுடன் இணைந்து பணியாற்றினார்.
- ரொடினின் ஆரம்ப கால வாழ்க்கை மிகத் துன்பகரமானது. அவர் 30 வயதுக்கு பின்பே சிற்பக் கலைஞராகச் செயற்பட்டார்.
- 1875 இல் அவருக்கு இத்தாலிக்கு செல்ல வாய்ப்புக் கிடைத்தது. அங்கே அவர் மைக்கல் ஆஞ்சலோ, தெனாத்தெல்லோ பொன்ற சிற்பக் கலைஞர்களின் சிற்பங்களை பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது. மைக்கல் ஆஞ்சலோவின் நிர்மாணிப்புகள் அக்கடமிக் சிற்பக் கலையில் இருந்து தான் விலகியதற்குக் காரணமென ரொடின் ஒரு முறை கூறினார்.

- சிற்பம் ஒன்றின் பூரணப்பாடின்மையை (unfinishedness) கலைக் கொள்கையாக உருவாக்க ரொடினின் நிர்மாணிப்புக்கள் பெரிதும் உதவின.

**(1) சிந்தனையாளர் (The Thinker)**

- ரொடினின் நிர்மாணிப்புகளுள் மிகவும் பிரபல்யம் அடைந்த ஒரு படைப்பான இது வெண்கலத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.
- மிகவும் ஆழமான சிந்தனையில் மூழ்கியிருக்கும் நிர்வாணமான ஒரு ஆணின் உருவத்தைக் கருப்பொருளாக இச் சிற்பம் கொண்டுள்ளது.
- சிந்தனையாளர் வலது முழங்கையை தனது இடது முழங்கால் மீது வைத்திருப்பதால் அவரது உடல் சற்றுத் திரும்பிய நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பம் குனிந்திருக்கும் சுபாவத்தைக் கொண்டுள்ளது.
- உடலின் கடினத் தன்மை, கரடு முரடான தன்மை என்பவற்றை நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே சிந்தனையில் மூழ்கியிருக்கும் தன்மையின் ஆழம் நன்றாகவே புலப்படுகிறது.
- ஐரோப்பிய சிற்பக் கலை தொடர்பாக காணப்பட்ட இயற் பண்புவாதம் மத நம்பிக்கைகள் மற்றும் எண்ணங்கள் என்பன வெளிப்படுத்துதல் இச்சிற்ப நிர்மாணிப்பில் தவிர்க்கப் பட்டுள்ளது.
- சுருங்கிய நெற்றி, பெரிய மூக்குத் துவாரங்கள் இறுக மூடிய உதடுகள் என்பன ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதை மேலம் வலியுறுத்துகிறது.
- சிற்பத்தின் மேற்பரப்பு கரடு முரடாகவே காணப்படுகிறது. பூரணப்பாட்டுடன் காணப்படாததால் உணர்வு வெளிப்பாடு தெளிவாகப் புலப்படுகின்றன.

**(11) கலேஸ் (Calais) நகரத்தின் குடிமக்கள்**

- ரொடின் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட சிற்பத் தொகுதியாகும்.
- கலேஸ் நகரத்தை விடுவிப்பதற்காக உயிர் தியாகம் செய்ய முன்வந்த தேசப்பற்றுடைய குடிமக்கள் ஆறு (06) பேர் இதில் குறிக்கப்பட்டுள்ளனர்.
- எட்வேட் மன்னன் கலே நகரத்தைக் கைப்பற்றிய போது நகர மக்கள் மொத்தத்தில் அழிவதைத் தடுப்பதற்காக இவ்வாறு (06) பேரும் முன்னிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.
- இவர்கள் இறப்பதற்குத் தயாராகக் கழுத்தில் கயிற்றைக் கட்டி, தலைக்கவசம், பாதணிகள் எதுவுமின்றி இருக்கின்றனர்.
- அமைதியான முறையில் சிந்தனை, வதி, கலகம், வீரமரணம் எனப்படும் பாவ உணர்வுகள் வெளிப்படுத்துவதாக இவை உள்ளன.
- சிற்பத்தின் ஒட்டு மொத்த அசைவைக் கருதும்போது அவர்கள் மெல்ல மெல்ல முன்னோக்கி செல்லும் சுபாவத்தை வெளிப்படுத்கின்றன.
- உயிர் நிலை பருமனுடன் வடிவமைக்கப்பட்ட இச்சிற்பம் மனப்பதிவு வாதப் பண்புகளைக் கொண்டது. அதாவது மேற்பரப்புத் தன்மை மாறுபட்ட இயல்புகளைக் கொண்டுள்ளது.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- ஒகஸ்தே ரொடினின் சிற்பங்களின் கலைப் பண்புகளை மதிப்பீடு செய்க.
- நவீனத்துவக் கலைக்கு ரொடினின் நிர்மாணங்கள் ஆற்றிய பங்களிப்பை விசாரித்தறிக.

DRAFT

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் சமகாலக் கட்புலக்கட்டமைப்புக்கள் மற்றும் பொதுசனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங் கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.6 :** **ஐரோப்பிய சிற்பக் கலைஞர்களது நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 6.6.2 :** **ஹென்ரி மூரின் சிற்பங்களைக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 02

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கலை நிர்மாணிப்புக்களின் அச்சு பிரதிகள், வர்ண நிழற் பிரதிகள், நிழற்படங்களை கொண்ட இறுவட்டுக்கள், Power Point Presentation, காணொளி எறிவைக் கருவி, கணிணி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- ஹென்ரி மூரின் சிற்பங்களைக் கற்றறிவார்.
- ஹென்ரி மூரின் சிற்பங்களின் பண்புகளை விமர்சிப்பார்.
- 20ம் நூற்றாண்டு நவீன வாத சிற்பக்கலையில் மாற்றத்தை ஏற்படுத்த வென்ரி மூரின் சிற்பங்கள் ஆற்றிய பங்களிப்பு பற்றி நுணுகி ஆராய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- உரையாடல் முறை/ ஒப்படை முறை/ குழுச் செயற்பாடு களின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். தெரிவு செய்யப்பட்ட கலை நிர்மாணங்களின் தொகுப்புக்களின் பிரதிகள் அல்லது இடங்களைப் பார்வையிடல்/ செயற்றிட்ட முறைகள் ஆகிய முறைகளில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**ஹென்ரி மூர் (1898 - 1986)**

- ஹென்ரி மூர் 20ம் நூற்றாண்டில் நவீனவாதச் சிற்பக் கலைக்கு அரூபவாததின் வழியைத் தீர்மாமனிக்கப் பங்களிப்பு வழங்கிய முக்கியமான கலைஞரொருவர் ஆவார்.
- இவர் பிரித்தானியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பிரித்தானியாவின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார்.
- இவரது சிற்பங்கள் அரை அல்லது முழு அரூப வடிவங்களைக் கொண்டன.

DRAFT

- வெண்கலத்தைப் (Bronze) பிரதான ஊடகமாக உபயோகித்து அவர் சிற்பங்களை நிர்மாணித்தார்.
- மனித உடலே இவரது ஆக்கங்களின் கருப்பொருளாக அமைந்தன. சாய்ந்திருக்கும்பெண், தாயும் சேயும், அரச குடும்பம் எனும் கருப்பொருட்களும் இவரது ஆக்கங்களின் கருப்பொருளாக அமைந்தன.
- இக்கலைஞரின் சிற்பங்கள் பல நினைவுச் சின்னங்களாக பல இடங்களில் நிறுவப் பட்டுள்ளன.

**(1) சாய்ந்திருக்கும் பெண்**

- வெண்கலத்தினால் இது அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் சாய்ந்திருக்கும் பெண் ஒருவரின் உடலமைப்பை அரூப வடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (இக் கருப்பொருளின் கீழ் இவர் பல சிற்பங்களை நிர்மாணித்துள்ளார்.)
- அக்கடமிக் கலையில் காணக்கூடிய இயற்பண்புகளுடைய உடலுக்குப் பதிலாக எளிமைப் படுத்தப்பட்ட பெண்ணுக்குரிய உடலுருவமொன்றின் பண்புகள் கொண்ட அமைப்பாக இது காணப்படுகிறது.
- பெண்ணின் உருவம் சுயாதீனமாக முழங்கைகளை நிலத்தில் ஊன்றி, தலையை உயர்த்தி, சாய்ந்திருக்கும் தோற்றமொன்றுடன் காணக்கூடியதாக இருக்கிறது. அவளது உடலின் சில பகுதிகள் அகற்றப்பட்டுள்ளது. அதனால் உடலினூடாகப் பின்னணியைக் காணக்கூடியதாக உள்ளது. (உடலின் கோறைப் பகுதிகளினூடாக)

**(11) அரசனும் அரசியும் King and Queen**

- ஆசனமொன்றில் அமர்ந்து நேரே பார்த்துக் கொண்டிருக்கும் ஆண், பெண் இரு உருவங்கள் இதில் குறிக்கப்பட்டுள்ளன.
- அரச குடும்பம் என இதனைக் குறிப்பிட்ட போதிலும் இவற்றுக்கான மரபு ரீதியிலமைந்த ஆடையணிகளை இச்சிற்பத்தில் காண முடியாது.
- மனித உருவங்கள் அரூப வடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- இயற்கையான கண்கள், காதுகள், மூக்கு காணப்படாத போதிலும் தலையை வடிவங்களை உபயோகித்து அரூப வடிவில் வெளிப்படுத்தியுள்ளார். கண்களைக் காண்பிக்க சில இடங்களைக் கோறையாக அமைந்துள்ளார்.
- அவர்கள் இருவரும் அருகருகே அமர்ந்திருக்கும் போதிலும் அவர்கள் இருவரும் எந்த விதத்திலும் தொடர்பு இல்லாதவர்கள் என்பதைப் போல் காண்பித்துள்ளார். இருவரும் சிந்தனையில் மூழ்கியவர்களாக நேரே பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.
- பெண்ணின் உருவம் தனது கைகளை தன் மடிமீதும் ஆண் உருவம் தனது ஒரு கையை தனது மடிமீதும் ஏனையதை ஆசனத்தின்மீது வைத்திருப்பது தெரிகிறது.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- ஹென்றி மூரின் சிற்பங்களைப் பட்டியற்படுத்துக.
- ஹென்றி மூரின் சிற்ப நிர்மாணிப்புகளின் கலைத்துவப் பண்புகளை ஆய்வுக்கு உட்படுத்துக.
- 20ம் நூற்றாண்டின் நவீன வாத சிற்பக் கலைக்கு ஹென்றி மூரின் நிர்மாணிப்புகள் பங்களிப்பு வழங்கிய விதத்தை நுணுகி ஆராய்க.

DRAFT

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.1 :** யாப்பகுவ கட்டட நிர்மாணிப்பைக் கற்பார்.

**செயற்பாடு 7.1.1 :** யாப்பகுவ கட்டட நிர்மாணிப்புகளைக் கற்றிறிவார்

**பாடவேளைகள் :** 6

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- யாப்பகுவ கட்டட நிர்மாணிப்புகளின் நிழற்படங்கள், இறுவட்டுக்கள், கணினி இயந்திரங்கள் , எறிவை இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- யாப்பகுவ அரண்மனை தொகுப்பைச் சார்நத கட்டடக் கலை நிர்மாணிப்புக்களை குறிப்பிடுவார்.
- யாப்பகுவ கட்டட நிர்மாணிப்புக்காகப் பயன்படுத்திய தொழில் நுட்ப முறைகள், ஊடகம் மற்றும் கட்டட கலையின் தந்திரங்களை விளக்குவார்.
- யாப்பகுவ அரண்மனைத் தொகுப்பின் அழகுக்கான சிற்ப செதுக்கல்கள்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல் , கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல், கலந்துரையாடல் முறை

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:**

- யாப்பகுவ அரண்மனை மற்றும் கோட்டை 1ம் புவனேகபாகு மன்னனால் கி.பி. 1273 இல் கட்டபட்டதாகக் கருதப்படுகின்றது.
- தற்போது அங்கு எஞ்சியுள்ள கட்டடங்களை பார்க்கும்போது அவை 3 பிரதான பகுதிகளாக வகைப்படுத்த முடியும்.
  1. பாதுகாப்பு நடவடிக்கைகள்
  2. குடியிருப்புக்கள்
  3. சமய நடவடிக்கைகள்
- யாப்பகுவ குன்றைச் சார்ந்ததாக அமைக்கப்பட்டுள்ள அரண்மனை மற்றும் கோட்டைகளில் தொகுப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை. 300 அடி உயரமான குன்றொன்றின் மீது கிழக்கு மேற்கு திசைகள் சார்ந்ததாக வட்ட வடிவத்தில் நீர் ஓடைகள் மற்றும் அரண்கள் அமைத்து இது கட்டப்பட்டுள்ளது.

DRAFT

- அரண்மனையின் அடித்தளத்தின் பகுதிகளின் சிதைவுகள் இன்னும் காணப்படுகின்றன.
- எதிரிகளின் தொல்லைகள் அதிகமாக இருந்த காலப்பகுதியில் இது அமைக்கப்பட்டதால் அழகு போன்றே பாதுகாப்புத் தந்திரங்கள் பலவற்றைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்ட கட்டட நிர்மாணிப்பாகும்.
- இங்கு விலைமதிப்பற்ற கட்டட நிர்மாணத் தொகுதிகளும் செதுக்கல்கள் பலவும் காணக்கூடியதாக இருக்கின்றன.

**படி வரிசை**

- தற்போது எஞ்சியுள்ள கட்டடக் கலைகளினுள் மிகப் பாதுகாப்பான வடிவில் காணக் கூடிய பகுதியொன்றாக படி வரிசையைக் குறிப்பிடலாம்.
- நன்கு மெருகூட்டப்பட்ட கற்தகடுகளினால் அமைக்கப்பட்டுள்ளது.
- குன்றின் சரிவு காரணமாக பகுதிகள் பலவற்றைக் கொண்டதாக இவை அமைக்கப் பட்டுள்ளன.
- படி வரிசையில் உள்ள படிகள் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளது.
- படி வரிசையின் இரு பக்கங்களிலும் அழகான செதுக்கல்களும் உருவங்களும் காணப்படுகின்றன.

**புன்கலசத்துடனான பெண்ணுருவங்கள்**

- படிவரிசையின் நுழைவுப் பகுதியின் இரு புறத்திலும் காணப்படும் புன்கலசத்தை ஏந்தி நிற்கும் பெண் உருவங்கள் மிக முக்கியமான செதுக்கல்களாகின்றன.
- திரிபங்க (மூவளைவு) உடல் நிலையுடன் ஒரு கையில் புன்கலசத்தை ஏந்தியும் மற்றைய கையை தொடையின் மீது வைத்துக் கொண்டும் நேராக பார்த்துக் கொண்டும் விதத்தில் இவை காணப்படுகின்றன.
- இவ்வுருவங்களின் அடிப்படை வடிவமானது காவற்கற்களில் உள்ள நாகராஜ உருவங்களின் உடல்நிலைக்கு ஒத்த தன்மையைக் குறிக்கின்றன.
- பெரியளவிலான காதணிகளும் ஒரு பக்கமாக வாரி கட்டிவிடப்பட்ட கொண்டையும் முக்கியமான இயல்புகளாகத் தோற்றமளிக்கின்றன.

**சிங்க உருவங்கள்**

- முன்பக்கமாக உள்ள படிவரிசையின் இறுதியில் இரு புறத்திலும் இரண்டு சிங்க உருவங்கள் காணப்படுகின்றன.
- வாலை உயர்த்திக் கொண்டு முன் கால்களால் எழுந்து நிற்கும் சிங்கம் பாயத்தயராகும் நிலையில் காணப்படுகின்றது.
- சற்று குனிந்து இருக்குமாறு நேரே நோக்கியிருக்கும் இச்சிங்க உருவங்கள் பின்பக்கக் கால்களை மடித்து அமர்ந்து இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளன.
- மோடிப்படுத்தப்பட்ட உரோமம், பெரிய கண்கள், வெளித்தள்ளியிருக்கும் பெரிய பற்கள் ஆகியவை சிங்க உருவங்களில் காணப்படும் சிறப்பம்சங்களாகின்றன.

DRAFT

**நுழை மண்டபத்தின் அடித்தள செதுக்கல்கள்**

- யாப்பகுவையில் கற்களால் ஆன அடித்தளத்தை சார்ந்ததாகக் காணப்படும் செதுக்கல்களில் நடனமாடும் மற்றும் இசைக்கும் பெண் உருவங்கள் முக்கியமான காட்சிகளாகின்றன. சிலர் மேளம் மற்றும் தாளத்தினை இசைப்பதுடன் அதற்கேற்ப நடனமாடும் பெண்களும் காணப்படுகின்றனர்.
- நடனமாடும் மற்றும் இசைக்கும் உருவங்களின் நிலைகள் நளினத்தன்மையுடனும் நெகிழ்வுத்தன்மையுடனும் காணப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றன. சில உருவங்களின் முகங்கள் புன்னகையுடன் காணப்படுகின்றன.

**கதவு நிலைகள் மற்றும் காற்றுத் துளைகள்**

- கல்லால் அமைக்கப்பட்ட கதவு நிலைகளும் காற்றுத்துளைகளும் சார்ந்துள்ள செதுக்கல்கள் இன்னொரு முக்கியமான நிர்மாணிப்புகளாகின்றன.
- செவ்வக வடிவமான கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு கதவு நிலைகளும் காற்றுத் துளைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அதனுடைய சட்டங்களின் கரைகள் என்பன மணியுருக்கட்டுகளாலும் புதைந்து காணப்படும் தூண்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.
- காற்றுத் துளைகளுக்கு மேலால் கிஹிம்பி முகத்துடனான மகர தோரணம் காணப்படுகிறது.
- மகர தோரணத்தின் மத்தியில் ‘கஜ லக்ஷ்மி’ யின் உருவம் காணப்படுகிறது. அமர்ந்த நிலையில் இருக்கும் லக்ஷ்மியின் உருவத்தின் இருபுறத்தில், தும்பிக்கைகளை உயர்ந்திருக்கும் யானை உருவங்களால் லக்ஷ்மி க்கு நீர் விசிறப்படும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- யாப்பகுவையில் இருக்கும் கட்டட நிர்மாணிப்புக்களைக் குறிப்பிட்டு அவற்றின் விசேட அம்சங்கள் பற்றி கலந்துரையாடுக.
- யாப்பகுவ கட்டட கலை நிர்மாணிப்புக்காகச் சிற்பங்களையும் செதுக்கல்களையும் உபயோகித்து உள்ள விதம் மற்றும் அவற்றின் நிர்மாணப் பண்புகளைப் பற்றி ஆராய்க.

DRAFT

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.2 : கம்பளைக் காலத்துக் கட்டடக் கலை நிர்மாணங்களை விபரித்துக் கூறுவார்.**

**செயற்பாடு 7.2.1 : கடலாதெனிய இலங்காதிலக விகாரைகளின் கட்டடக் கலையையும் கலை நிர்மாணிப்புக்களையும் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 06

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- நிழற்படங்கள், இறுவட்டுக்கள், கணினி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- கடலாதெனிய இலங்காதிலக்க விகாரைகளின் கட்டட நிர்மாணிப்புகளின் அங்கங்களை விபரித்துக் கூறுவார்.
- கடலாதெனிய , இலங்காதிலக்க விகாரை நிர்மாணிப்பு களுக்குப் பயன்படுத்தியுள்ள ஊடகம், நுட்ப முறைகள், தொழில் நுட்பமுறைகள் என்பவற்றை விளக்குவார்.
- கடலாதெனிய , இலங்காதிலக்க விகாரை நிர்மாணிப்பு, கலை நிர்மாணிப்புகளின் கருப்பொருள், நுட்ப முறைகள், கலைப் பாணிகள் என்பவற்றை மதிப்பீட்டுக்குட்படுத்துவார்.
- கடலாதெனிய இலங்காதிலக்க விகாரைகளின் கட்டட நிர்மாணிப்புகள், கலை நிர்மாணிப்புகள் என்பவற்றில் செல்வாக்கு செலுத்திய பாரம்பரியங்களையும் நிர்மாணிப்பு ஆதாரங்களையும் விளக்குவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல் , கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல், கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**கடலாதெனிய விகாரை**

- கம்பளை காலத்துக்குரிய இவ்விகாரை 4ம் புவனேகபாகு மன்னனால் கி.பி 1344 இல் கட்டவிக்கப்பட்டது.
- தென் இந்தியக் கலைஞனான கணேஸ்வரச்சாரியார் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டார்.

- இது குன்றின்மீது அமைந்துள்ளது. கருங்கல்லை ஊடகமாகக் கொண்டே இது கட்டப்பட்டுள்ளது.
- கெடிகே பாரம்பரியத்தில் கட்டப்பட்டுள்ளது. சிகர அமைப்பைக் கொண்ட கூரை காணப்படுகிறது.
- பிரவேச மண்டபம், இடை மண்டபம், கர்ப்பக் கிரகம் என்பவற்றை இங்கே இனங்காணக் கூடியதாக இருக்கிறது. கர்ப்பக் கிரகத்தில் பிரதான அமர்ந்த புத்தர் சிலையைத் தவிர 4 நின்ற நிலை புத்தர் சிலைகள் காணப்படுகின்றன.
- கடலாதெனிய சிலை மனையின் வெளிச்சுவர்கள் அழகிய கற் சிற்பங்களாலும் செதுக்கல்களினாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவற்றள் மனித உருவங்கள், தெய்வ உருவங்கள், யானை உருவங்கள், எருது உருவங்கள், பூங்கொடிகள் என்பவற்றைக் காணக் கூடியதாக இருக்கின்றன.
- பிரவேச மண்டபத்தின் அடித்தளத்தில் பல உடல் நிலைகளைக் கொண்ட நடனத்தில் மற்றும் இசைத்தலில் ஈடுபட்டிருக்கும் உருவங்கள் அரை புடைப்பு வடிவில் செதுக்கப்பட்டுள்ளன.
- சிலைமனைக்கு நுழையும் பகுதியிலுள்ள அடித்தளத்தில் பல உடல் நிலைகளைக் கொண்ட நடனமாடுபவர்களும் இசைக்கலைஞர்களும் அரைபுடைப்பு முறையில் அமைக்ப்பட்டிருப்பதைக் காணலாம்.
- சிலைமனைக்குள் நுழையும் பிரதான நுழைவாயிலின் இரு புறத்தில் கஜ சிங்க, உருவங்கள் இடப்பட்டுள்ளன.
- இங்கே நுழையும் மண்டபத்தில் உள்ள தூண் வரிசைகள் எட்டு மூலைகளைக் கொணடதும் நான்கு முகங்களையும் கொண்டதுமான தூண்களாகக் காணப்படுகின்றன.
- இவ்வாறு மூன்று பகுதிகளுடன் இணைக்கப்பட்ட கற்றூண்கள் இந்தியாவின் விஜயநகர் கட்டடக் கலைப் பாணியைத் தழுவியுள்ளன.

DRAFT

**விஜயோத்பாய**

- சிலைமனையை அண்மித்து விஜயோத்பாய எனப்படும் அமைப்பும் சிறப்பு வாய்ந்ததொன்றாகும்.
- அதன் கீழ் பகுதி 4 புத்தர் சிலைகளுடன் நான்கு சிறிய சிலை மனைகளாகக் கல்லால் அமைக்கப்பட்டுள்ளன.
- அதன் மீது பெரியளவிலான சைத்தியத்துடன் இணைந்த சிறியளவிலான 4 தூபிகளைக் கொண்ட கட்டட நிர்மாணிப்பு காணப்படுகிறது.
- பாரிய அளவிலான தூபிக்கு மேலாக 4 தூண்கள் மீது அமைக்கப்பட்ட கூரையொன்று காணப்படுகிறது.

**இலங்கா திலக விகாரை**

- இது iv ம் புவனோகபாகு மன்னன் சேனாதிலங்கார அமைச்சரைக் கொண்டு கட்டுவிக்கப் பட்டதொன்றாகும்.
- இது கம்பளை காலத்துகுரிய விகாரைகளுடன் தொடர்புபட்டது.
- தென் இந்தியக் கலைஞரான ‘‘ஸ்தபதிராஜர்’’ என்பவரே இதனைக் கட்டியுள்ளார்.

- இயற்கையான குன்றின் மீது நிர்மாணிக்கப்பட்ட இவ்விகாரையின் அடித்தளத்தின் பகுதிகள் கல்லால் அமைக்கப்பட்டுள்ளன. சுவர் மற்றும் அவற்றின் அலங்கார வேலைப் பாடுகள் செங்கல்லினாலும் சுண்ணாம்புச் சாந்தினாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கூரை ஓட்டினால் வேயப்பட்டுள்ளது.
- தென்னிந்திய கட்டட நிர்மாண பண்புகளும் ஒன்றிணைந்ததாக இது காணப்படுகிறது.
- மேல் நோக்கிப் படிப்படியாகச் சிறுத்துச் செல்லும் விதத்தில் மூன்று மாடிகளைக் கொண்டதாக வெளிப்புறத்தில் தோற்றமளிக்குமாறு தற்போதைய கட்டடம் காணப்படுகிறது.
- சிலை மனையின் சுவர்கள், தூண்கள், யானை உருவங்கள், வெளித்தள்ளிய பகுதிகள் (பொரதம்) கோல் வடிவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. பிரதான நுழைவாயிலுக்கு மேலால் மிகவும் அழகான மகர தோரணம் ஒன்று காணப்படுகிறது.
- குன்றின் மேற்பகுதியில் காணப்படும் பாதையின் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வாலயத்தின் அமைப்பானது சதுர வடிவமான சிலைமனைகளை உள்ளடக்கிய சிலுவை அமைப்பை ஒத்ததாகக் கானப்படுகிறது.
- சிலைமனையின் உட்புறத்தில் கம்பளை காலத்துக்குரிய புத்தர் மற்றும் தெய்வ சிலைகளும், கண்டிக் காலத்துக்குரிய ஓவியங்களும் காணப்படுகின்றன.
- சிலை மனையுடன் இணைக்கப்பட்ட நாற்றிசையில் பல தெய்வங்களுக்காகத் தேவாலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- கடலாதெனிய விகாரையின் முக்கியமமான கட்டட நிர்மாணிப்பு அங்கங்களைக் குறிப்பிட்டு அவற்றின் அடிப்படைப் பண்புகள், ஊடகப் பாவனை அலங்கார வேலைப்பாடுகள் என்பவை பற்றிக் கலந்துரையாடுக.
- இலங்காதிலக்க விகாரையின் அடிப்படைக் கட்டட நிர்மாணிப்பு அங்கங்கள், அலங்கார வேலைப்பாடுகள், ஊடகப் பயன்பாடு, நுட்ப முறைகள், தொழில் நுட்ப உத்திகள் பற்றிக் கலந்துரையாடுக.
- இந்திய பாணியைத் தழுவிய கட்டட நிர்மாணிப்புகள் பௌத்த விகாரைகளில் உபயோகித்துள்ள விதம் பற்றி இலங்காதிலக்க கடலாதெனிய விகாரைகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்க.
- கடலாதெனிய இலங்காதிலக்க சிலை மனைகளில் காணப்படும் ஒருமைப்பாடு வேறுபாடு பற்றி ஒப்பீட்டளவில் மதிப்பிடுக.

DRAFT

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.3 : கம்பளைக் காலத்தினதும் கண்டிக்காலத்தினதும் மரச் செதுக்கல்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.3.1 : எம்பக்க ஆலயம், பனாவிட்டிய மடம் என்பனவற்றில் காணப்படும் மரச் செதுக்கல்களைக் கற்றறிவோம்.**

**பாடவேளைகள் :** 6

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- எம்பக்க ஆலயம், பனாவிட்டிய மடம் என்பவற்றில் உள்ள மரச் செதுக்கல்களைச் சித்தரிக்கும் நிழற்படங்கள், இறுவட்டுக்கள், கணினி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- எம்பக்க ஆலயம், பனாவிட்டிய மடம் என்பவற்றின் அடிப்படைக் கட்டட நிர்மாணிப்புக்களின் அம்சங்களை விபரித்துக் கூறுவார்.
- எம்பக்க ஆலயம், பனாவிட்டிய மடம் ஆகியவற்றின் அமைப்புக்கு உபயோகித்துள்ள ஊடகம், நுட்பமுறைகள் என்பவற்றை விபரித்துக் கூறுவார்.
- எம்பக்க ஆலயம், பனாவிட்டிய மடத்தின் செதுக்கல்களின் தொனிப்பொருட்களை விபரித்துக் கூறுவார்.
- எம்பக்க ஆலயத்தின் செதுக்கல்களின் ஒருங்கிணைப்பு, உணர்ச்சி வெளிப்பாடு கலைப் பாணிக்குரிய இயல்புகளை மதிப்பீடு செய்வார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை, செயற்றிட்ட முறை, குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளை வெளிப்படுத்தல் , கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல், கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### எம்பக்க ஆலயம்

- கம்பளையை ஆட்சி செய்த 3ம் விக்கிரமபாகு மன்னனால் 14ம் நூற்றாண்டில் எம்பக்க ஆலயம் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.

DRAFT

- தெல்மட மூலாச்சாரியாரின் தலைமையின் கீழ் அவரது சீடர்களின் ஒத்துழைப்புடன் இது நிர்மாணிக்கப்பட்டது.
- இவ்வாலயம் கதிர்காமத் தெய்வத்துக்காகக் கட்டப்பட்டது.
- எம்பக்க ஆலயம் பல பகுதிகளைக் கொண்டுள்ளன. அவற்றுள் பின்வரும் நிலையப்பகுதிகள் செதுக்கல்கள் தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்தவை.

i. **நீள் மண்டபம்** (திக்கெய அல்லது ஹேவிசி மண்டபய என அழைக்கப்படுகின்றன) இது 32 மரத்தூண்களைக் கொண்டுள்ளது. நான்கு புறத்திலும் உள்ள சட்டங்களில் 128 செதுக்கல்கள் காணப்படுகின்றன.

ii. **வாயில் மண்டபம்**

- இங்கு 10 மரத்தூண்கள் உள்ளன. நான்கு புறத்திலும் உள்ள சட்டங்களில் 40 செதுக்கல்கள் காணப்படுகின்றன.
- வட்டுக்குத்தி (மாடொல் குறப்பாவ) முறையில் அமைக்கப்பட்ட கூரை, கட்டட நிர்மாணிப்பின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. 26 குறுக்கு வளைகளும் மர ஆணியொன்றுடன் பொருந்தும்படி இது அமைக்கப்பட்டுள்ளது.
- எம்பக்க ஆலயத்தின் செதுக்கல்களுக்காக கம்மாலு வேங்கை, சித்திரவேம்பு, நாகமரம், கருங்காலி (கலுவர) மரங்கள் உபயோகப்பட்டுள்ளன.
- தூண் தலை போதிகை வடிவமுடையது. தூண்களின் செதுக்கல்களைக் கொண்ட மத்தியில் சதுர வடிவ சட்டகங்கள் காணப்படுகின்றன. அவை கண் மட்டத்தில் இருந்து அவதானிக்கக் கூடியவையாக இருக்கின்றன.
- சிறு புடைப்பு, அரை புடைப்பு முறைகளில் சட்டகத்துக்குள் செதுக்கல்கள் நிர்மாணிக்கப் பட்டுள்ளன.
- சதுர வடிவ சட்டகத்துக்குள்ளேயே செதுக்கு வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு செதுக்கலைக் சுற்றியும் கேத்திர கணித வடிவத்திலான அலங்காரங்கள் காணப்படுகின்றன.
- இவற்றின் கருப்பொருட்கள் பலவகைக்குள் அடங்குகின்றன.
    1. விலங்குருவங்கள் - சிங்கம், யானை, அன்னம்
    2. கற்பனை வடிவான உருவங்கள் - மகரம், கடற் கன்னி,(கிந்துரி) யானையைத் தூக்கும் பறவை/குஞ்சரப் பறவை, (எத்கந்த) லிகினியா, இருதலை பட்சி (பேருண்ட பட்சி)
    3. பூவேலைப்பாடுகள் கொடிவலை அலங்காரம்
       கொடிவலை, பிரை மலர், தாமரை மலர்
    4. அக்காலச் சமூகத் தொனிப்பொருட்கள்/மக்கள் வாழ்வு
       வெளிநாட்டுப் போர் வீரன், உள்நாட்டுப் படைவீரன், றபான் அடிப்போர், குழந்தைக்குப் பாலூட்டும் தாய்
    5. கரையலங்காரம் (லீஸ்தர)
- செதுக்கல்கள் மிகவும் உன்னதமானவையே. வெளிப்படுத்திய உருவங்கள் சற்று மோடிப்படுத்தப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்படட சதுர வடிவத் தளம் முழுவதிலும் செதுக்கு வேலைப்பாடு இடைவெளியின்றி நிரப்பப்பட்டுள்ளது.

DRAFT

- சிற்பி பாரம்பரிய அலங்கார வேலைப்பாடுகளை உபயோகித்துள்ள அதே வேளை தனது சொந்தத் தொனிப்பொருட்களிலும் செதுக்கல்களை சிறப்பாகச் செய்துள்ளார். வெளிநாட்டுப் படைவீரன், குழந்தைக்குப் பாலூட்டும் தாய் எனும் தொனிப் பொருட்கள் அதற்கு முன்னைய காலப்பகுதிகளில் இலங்கையில் காணப்படாத அரிதான தொனிப் பொருட்களாயின.
- மல்யுத்தம், நடனமாது, யானையின் மூளையை உண்ணும் சிங்கம் என்பனவும் இங்குள்ள சிறப்பான செதுக்கல்கள் ஆகும்.
- இவை அண்மையில் இருந்து பார்வையிடக் கூடிய விதத்தில் கண்மட்டத்தில் இருந்து அவதானிக்கக் கூடியதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன.

**பனாவிட்டிய மடம்**

- இது குருணாகல் மாவட்டத்தில் தம்பதெனிய - பனாவிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- எம்பக்க ஆலயத்துக்கு பிற்பட்ட காலத்துக்குரியது. இது கண்டியக் காலத்துக்கு உரியதெனக் கருதப்படுகிறது.
- இது அரசார்களுக்காகவும் பிரபுக்களுக்காகவும் தெய்வங்களுக்காகவும் அமைக்கப்பட்ட கட்டடம் அல்லாத போதும் பாமர மக்களுக்காகக் கட்டப்பட்ட பொது கட்டட மொன்றாகும்.
- நான்கு கற் சலாகைகள் மீது நில மட்டத்தில் இருந்து ஒரு அடி உயரத்தில் இது கட்டப்பட்டுள்ளது.
- தங்குமிடத்தின் மரத் தூண் ஒன்று ஆறு அடி உயரமுடையது. அத்தூண்கள் எம்பக்க ஆலயத் தூண்களுக்கு ஒத்துள்ளன. இருந்த போதும் சகல தூண்களும் சீராக அலங்கரிக்கப்படவில்லை. மடத்தின் உட்பகுதியில் உள்ள 9 தூண்களும் அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
- செதுக்கல்கள் அரை புடைப்புத் தன்மையைக் கொண்டுள்ளன.
- எம்பக்க செதுக்கல்களைப் போலன்றி இவை சற்று விறைப்புத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. சில செதுக்கல்களின் பகுதிகள் தேய்ந்துள்ளன.
- இங்கு காணப்படும் இன்னொரு முக்கிய வேலைப்பாடு கூரைக்கு இடப்பட்ட குறுக்கு வளைகள் செதுக்கப்பட்டிருப்பதாகும். அவை சுற்றுப்பிரகாரம் (பெரஹர), கொடிவலை அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
- பனாவிட்டிய மடத்தில் காணக்கூடிய செதுக்கல் நிர்மாணிப்புகள்
    1. மல்யுத்தம்
    2. நடனமாது, மேளம் அடிப்பவர்
    3. நடனமாது
    4. நடனக்காரர் (மலைநாட்டு)
    5. பிணைந்துள்ள பாம்புகள்
    6. மயிற் சோடி
    7. மான் சோடி
    8. சுற்றுப்பிரகாரம் (பெரஹர)

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- எம்பக்க ஆலயத்தின் கட்டட நிர்மாணிப்பின் திட்டமைப்பு, அலங்கார வேலைப்பாடுகள் என்பவற்றை விபரித்துக் கூறுக.
- எம்பக்க ஆலயத்தின் மரச் செதுக்கல்களின் கட்டடப் பொருள், கலைப்பாணி, நுட்ப முறைகள் என்பவற்றைக் கலந்துரையாடுக.
- பனாவிட்டிய தங்குமடத்தின் திட்டமைப்பு, அவற்றின் செதுக்கல் பற்றி மதிப்பீடு செய்க.
- எம்பக்க ஆலயம், பனாவிட்டிய தங்குமிடம் என்பவற்றின் செதுக்கல்களை ஒப்பிட்டு ஆராய்க.

DRAFT

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.4 : இந்தியாவின் பல்லவ சிற்பக்கட்டடக் கலை மரபைக் கற்பார்.**

**செயற்பாடு 7.4.1 : பல்லவ காலத்து நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.**
- பஞ்ச பாண்டவர் இரதங்கள்
- கடற்கரை கோவில்
- ஆகாய கங்கையின் இறக்கம்

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:** நிழற்படங்கள், காணொளிகள் உள்ளடங்கிய இறுவட்டுக்கள், கணினிகள் இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**
- பல்லவ சிற்பக் கட்டடக் கலை மரபை விளக்குவார்.
- பல்லவ கலை மரபின் கட்டட நிர்மாணப் பண்புகளையும் செலுக்கல்களையும் குறிப்பிடுவார்.
- நுட்ப முறைகள், கலைப் பாணிக்குரிய இயல்புகளை விளக்குவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**
- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/ குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**பல்லவ கட்டட நிர்மாணமும் செதுக்கல்களும்**

- பல்லவ கலை மரபானது தென் இந்திய கலை மரபாகும். பல்லவ கலை நிர்மாணிப்பகள் இயற்கைவாத பண்புகளைக்கொண்டுள்ளன.
- பல்லவ கலை மரபு கி.பி. 4ம் நூற்றாண்டில் இருந்து 9ம் நூறறாண்டு காலப் பகுதிக்குரியது.
- இந்து மதப் பின்னணியைக் கொண்டு உருவான இக்கலை மரபு மாமல்லபுர நகரத்தை மையமாகக் கொண்டு உருவாகியது.

## பல்லவ கட்டடக் கலை

- பல்லவ கட்டடக் கலை இரு வகைப்படும்
    - குடைவரை கோவில்கள் (கல்லை உட்புறம் மட்டும் குடைந்து அமைந்த ஆலயங்கள்) (Carved Temple)
    - கட்டப்பட்ட கோவில்கள் (கற்றளிவகைக் கோவில்கள்) கற்களைப் பொழிந்து அடுக்கி உருவாக்கப்படும். (Structural Temple/ Free standing Temples)

### பஞ்ச பாண்டவர் இரதங்கள்

- பஞ்ச பாண்டவர் இரதங்கள் தனிக் கருங்கல்லைப் பொழிந்து அமைக்கப்பட்ட ஆலயங்களாகும்.
- இந்த இரதங்கள் முறையே திரௌபதி, துர்க்கா இரதம், அர்ச்சுனன் இரதம், பீமன் இரதம், தர்மராஜ இரதம், நகுல சகாதேவ இரதம் என்பவையாகும். நகுல சகாதேவ இரதங்களைத் தவிர ஏனைய இரதங்கள் தனிக் கல்லால் அமைக்கப்பட்டுள்ளன.
- இவ்வாலயங்கள் கி.பி. 7ம் நூற்றாண்டின் மத்திய பகுதியை அல்லது பிற்பட்ட காலப் பகுதியைச் சேர்ந்ததாக நம்பப்படுகிறது.
- இவ்வாலயத் தொகுதி பல்லவ கட்டட நிர்மாணிப்பின் ஆரம்ப கால இயல்புகளை பிரதிபலிக்கின்றன.

### கடற்கரைக் கோவில் (Shore Temple)

- கடற்கரைக் கோவில் பல்லவ கட்டட நிரமாணிப்பின் கட்டப்பட்டகோவில் வகைக்குரியது.
- தென் இந்திய கட்டட நிர்மாணிப்புக் கலையின் ஆரம்ப காலத்தில் கட்டப்பட்ட கோவிலாக இக் கடற்கரைக் கோவிலை இனங்காணலாம்.
- கடற்கரைக் கோவில் தமிழ் நாடு மாநிலத்தின் மாமல்லபுரத்தில் அமைந்துள்ளது. இக்கோவில் கி.பி. 8ம் நூற்றாண்டுக்குரியது.
- அர்ச்சுனன் மற்றும் தர்மராஜ ஆலயங்களில் காணப்படும் கூம்பக வடிவக் கூரை எண்கோண சிகர அமைப்பு என்பன இதிலும் காணலாம்.

DRAFT

### பல்லவ செதுக்கல்கள்

- பல்லவ கலை மரபின் செதுக்கல்கள் முழுவதும் கல்லில் பொழியப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மாநிலத்தின் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள ஆலயங்களிலும் ஏனைய இந்து மத ஸ்தலங்களிலும் இச் செதுக்கல்களைக் காணக் கூடியதாக இருக்கின்றன.
- இவ்வொவ்வொரு செதுக்கல்களும் இந்து மத நம்பிக்கைகளை வெளிப்படுத்துபவையாக உள்ளன.

### ஆகாய கங்கையின் இறக்கம்/அர்ச்சுனனின் தவம் (மாமல்லபுரம்)

- தமிழ் நாடு மாநிலத்தின் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள புடைப்புக் கற்செதுக்கல் முறையில் அமைந்த பாரிய கற்செதுக்கலாகும். இது கங்கையின் இரக்கத்தை குறிப்பதாக கருதப்படுகின்றது.
- கி.பி. 7ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பகுதிக்கு அல்லது மத்திய பகுதிக்குரியதென கருதப்படுகிறது.

- புடைப்பு முறையில் உள்ள இச்செதுக்கல் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது.
- செதுக்கலின் நடுப் பகுதியில் கங்கை நதி கீழ் நோக்கி பாய்வதாக அமைக்கப்பட்டுள்ளது. நதியின் அருகில் கடும் தவ நிலையில் பகீரத முனிவரின் உருவம் அருகில் வரம் அளிக்கும் விதத்தில் சிவபெருமானின் வடிவமும் காணப்படுகிறது. அதன் இடப்புறத்தில் உள்ள பாரிய பகுதியில் தேவதை உருவங்களும் மனித விலங்குருவங்களும் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. கங்கை நதிக்கு வலப் பக்கத்தில் உள்ள பாரிய பகுதியில் சிறிய மனித விலங்குருவங்கள் காணப்படுவதுடன் உயிரோட்டமாக யானைகள் பொளியப்பட்டுள்ளன.
- இரு கைகளையும் உயர்த்தி ஒற்ளைக் காலில் நிற்கும் முனிவர் ஒருவரின் உருவமொன்றைம் அதற்கருகாமையில் சிவனின் உருவமொன்றையும் காணலாம்.
- இங்குள்ள சகல உருவங்களும் ஆக்கத்திறன் மிக்கவையாக உள்ளன. அத்துடன் இயற்பண்பு வாத கலைப் பாணியையும் கொண்டுள்ளன.
- கதை கூறும் வடிவில் இவ்வுருவங்கள் அமைந்துள்ளதையும் இனங்காணக் கூடியதாக இருக்கின்றது.

**திரௌபதி இரதம்**

- இரதத் தொகுதியின் எளிமையாக உள்ள சிறிய ஆலயமாகும்.
- கூரையானது பழைமையான ஓலை கொண்டு வேயப்படும் கோட்பாட்டினை அடிப்படை யாகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதுடன் செவ்வக வடிவ அமைப்புடன்கூடிய சிற்றறையையும் கொண்டது.

**அர்ச்சுனன் இரதம்**

- திரௌபதி இரதம் அமைந்த தளத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.
- செவ்வக வடிவ சிற்றறை மீது கூம்பக வடிவ கூரையமைப்பையும் எண்கோண சிகரத்தையும் கொண்டது.

**பீமன் இரதம்**

- இரண்டு அடுக்குகளைக் கொண்ட இவ்வாலயம் செவ்வக வடிவமானது.
- பூர்த்தி செய்யப்படாத இவ்வாலயக் கூரை வளைந்த தன்மையைக் கொண்டது.

**தர்மராஜ இரதம்**

- கட்டமைப்பை நோக்கும்போது அர்ச்சுனன் இரதத்தைப் போன்றிருக்கும் போதிலும் அதனை விட சற்று பெரியதாகும்.
- வேலைப்பாடுகள் அதிகளவைக் கொண்டுள்ளன.

**நலகு சகாதேவ**

- இவ் இரதம் ஏனையவற்றில் இருந்து தனித்துக் காணப்படுகின்றது.
- ஏனைய இரதங்களை விட வேறுபட்டது. அது வட்டவடிவமான அமைப்பைப் கொண்ட சிற்றறைகளைக் கொண்டது.

DRAFT

**கணப்பீடும் மதிப்பீடும்**

- இந்திய பல்லவ கலை மரபுக்குரிய கட்டட நிர்மாணிப்பை வகைப்படுத்தி பஞ்ச பாண்டவர் இரதங்களும் கடற்கரைக் கோவிலும் பற்றிய கலைத்துவ பண்புகளைக் கொண்ட மதிப்பீடு ஒன்று செய்க..
- ஆகாய கங்கையின் இறக்கம் எனும் செதுக்கலினூடாக பல்லவ கலை மரபுச் செதுக்கல்களின் சிறப்பியல்பகளை விளக்குக.

DRAFT

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.5 : இந்திய சோழர் கலை நிர்மாணங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.5.1 : சோழர் கலை நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்.**

- இராஜ ராஜேஸ்வரக் கோவில்
- கல்யாண சுந்தர் சிற்பம்
- சிவதட்சணாமூர்த்தி
- சிவ பிக்ஷாடனமூர்த்தி

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- சிலைமனையின் கட்டட நிர்மாணிப்பு அடங்கிய நிழற்படங்கள், காணொளிகள், இறுவட்டுகள், கணணி இயந்திரங்கள், நிழற்படப் பிரதிகள், உருவப்படங்கள்

**கற்றற் பேறுகள் :**

- சோழர் கலை மரபை விளக்குவார்.
- சோழர் கலை கட்டட நிர்மாணங்களைக் குறிப்பிடுவார்.
- கட்டட நிர்மாணங்களின் நுட்ப முறைகளை விளக்குவார்.
- சோழர்களின் சிற்பக்கலை நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடு வார்.
- சிற்ப நிர்மாணிப்புக்களின் ஊடகம், நுட்பமுறை, கலைப் பாணிக்குரிய இயல்புகள் என்பவற்றை விளக்குவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- செயற்றிட்ட முறை/ கலந்துரையாடல் முறை/ ஆய்வறிக்கை களைச் சமர்ப்பித்தல் ஆகியவற்றில் ஒன்று அல்லது பலவற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற் பாட்டை கட்டியெழுப்புக.

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிவன:
## சோழர் கலை மரபு

- இது தென் இந்திய கலை மரபாகும்.
- கி.பி. 900 - 1300 எனும் காலப் பகுதி சோழர் காலத்தின் முக்கிய காலப் பகுதியாகும்.
- சோழர் கலை ஆக்கத்திறன் மிக்கவை. அவை மோடிபடுத்தப்பட்ட கலைப் பாணிக்குரியவை. சோழர் கட்டடக் கலைக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது.
- சோழர் கட்டடக் கலையின் (ஆலய) சிறப்பான விடயம் என்னவெனின் பிரதான ஆலயத்தை விடக் கோபுரம் பெரிதாக அமைந்திருப்பதாகும். சோழர் கலை மரபு இந்து மத நம்பிக்கைகளுடன் தொடர்புடையதாக உள்ளது.

**இராஜ ராஜேஸ்வர கோவில்**

- இராஜ ராஜேஸ்வர கோவில் தமிழ் நாடு மாநிலத்தில் தஞ்சாவூர் எனும் பகுதியில் அமைந்துள்ளது. முதலாவது இராஜ ராஜ மன்னனின் அனுசரணையுடன் இது நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாலயம் கி.பி. 1003 - 1010 எனும் காலப்பகுதிக்குரியது.
- கல்லை உபயோகித்து இராஜ ராஜேஸ்வர கோவில் கட்டப்பட்டது.
- இதன் உட் புறத்திலும் வெளிப்புறத்திலும் பாரிய கோபுரங்கள் இரண்டு உள்ளன.
- இதிலுள்ள சகல செதுக்கல்களும் ஓவியங்களும் இயல்காட்சி தன்மையைக் கொண்டுள்ளன. அத்துடன் அவை மோடிப்படுத்தப்பட்ட கலைப் பாணியையும் கொண்டுள்ளன.
- பாரிய அளவிலான வெளிப்புறத்தையும் சிகரத்தையும் கொண்டது.
- இத் தேவாலயம் மண்டபம், வலம் வரும் பகுதி, இடை மண்டபம், கர்ப்பகக் கிரகம் எனும் கட்டட நிர்மாணிப்புத் தொகுதிகளைக் கொண்டுள்ளன.

**சிவ தட்சணா மூர்த்தி**

- (ராஜ ராஜேஸ்வர ஆலய தஞ்சாவூர்) சோழர் கலை மரபின் எண்ணக்கருவென்றாக இதனை இனங்காணலாம்.
- இராஜ ராஜேஸ்வர ஆலயத்தின் வலப்புறத்தில் உள்ள அறையொன்றில் இச்செதுக்கல் பொழியப்பட்டுள்ளன.
- ஆலமரமொன்று இராஜ லீலையுடனும் நான்கு கைகளுடனும் சிவனின் தட்சணா மூர்த்தி வேடம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சிவன் பேரறிவாளியாகவும் ஆசானாகவும் பிரதி பலிக்கிறார். இது மோடிப்படுத்தப்பட்ட வடிவில் பொழியப்பட்டுள்ளது.

DRAFT

**கல்யாண சுந்தர் சிற்பம்**

- இது சிவ பார்வதி அவர்களின் திருமணத்தைக் குறிக்கிறது.
- சிவ பார்வதிக்கு இரு புறத்தில் விஷ்ணு, லக்ஷ்மி என்பவர்கள் நிலைநாட்டப்பட்டுள்ளனர்.
- ஆண் தெய்வங்கள், பெண் தேவதைகளின் அளவுப் பரிமாணத்தைவிட பெரிதாக அமைக்கப்பட்டுள்ளன. தெய்வங்கள் மற்றும் தேவதைகளின் சிற்பங்கள் விக்கிரகவியற் பண்புகளைக் கொண்டுள்ளன.
- இயற்கைவாத பண்புகளடன் மோடிப்படுத்தப்பட்ட கலைப்பாணியில் வடிவமைக்கப் பட்டுள்ளன.

**சிவ பிக்ஷாடன சிற்பம்**

- வெண்கல உலோகத்தினால் வார்ப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்ட இச் சிற்பம் சோழ காலத்துக்குரியது.
- சிவபெருமான் யாசகன் ஒருவரைப் போன்று தோற்றமளிக்கின்றார்.
- நிர்வாணமான யோக நிலையில் உள்ள முனிவர் ஒருவரைப் போல் சிவபெருமானின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.
- மூளைவு (திரிபங்க நிலை) நிலை புலப்படுவதுடன் நடனமாடும் ஒரு சுபாவமும் தோன்றுகிறது.

- தென் இந்திய சோழ சிற்பங்களில் இவ்வாறான சிற்பங்கள் நான்கு கைகளைக் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இச்சிற்பத்தின் வலம்பக்க முன்னங்கை நிலத்தை நோக்கியுள்ளது. அக்கையை நோக்கி துள்ளும் மானொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. வலப்பக்க பின்னங்கையில் உடுக்கு ஒன்று காணப்படுகிறது.
- இடப்பக்க முன்னங்கையில் பாத்திரமொன்றும் பின்னங்கையில் திரிசூலமும் காணப்படுகிறது.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சோழ கலை மரபுக்குரிய கட்டட நிர்மாணங்களின் சிறப்பியல்புகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக.
- சோழ சிற்ப நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுக.
- சோழ சிற்ப நிரமாணிப்புகளைக் கொண்டு அவற்றின் தொனிப்பொருள், கலைப்பாணி, நுட்பமுறை உபயோகப்படுத்தியுள்ள விதம் தொடர்பாக மதிப்பீடு ஒன்றை செய்க.

DRAFT

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.6 : இந்திய மொகலாயக் கலையைக் கற்பார்.**

**செயற்பாடு 7.6.1 : இந்திய மொகலாயக் கட்டடக் கலை நிர்மாணிப்புக் களையும் ஓவியக் கலையையும் மதிப்பிடுவோம்.**

- தாஜ்மகால்
- பாபர் சக்கரவர்த்தியின் பூங்கா அவதானிப்பு
- அக்பார் அரசனின் யுத்தக் காட்சி

**பாடவேளைகள் :** 4

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சிலைமனையின் கட்டட நிர்மாணிப்பு அடங்கிய நிழற்படங்கள், காணொளிகள், இறுவட்டுகள், கணிணி இயந்திரங்கள், நிழற்படப் பிரதிகள், உருவப்படங்கள்

**கற்றற் பேறுகள் :**

- மொகலாயக் கலையின் ஆரம்பத்தையும் அதனுடன் தொடர்புடைய தகவல்களையும் விளக்குவார்.
- மொகலாயக் கலை நிர்மாணிப்புகளுக்குத் தாக்கம் செலுத்திய உண்ணாட்டு வெளிநாட்டுச் செல்வாக்கைத் தேடியறிவார்.
- மொகலாயக் கலை நிர்மாணிப்புகளில் உள்ள கலைத்துவ பண்புகளை மதிப்பிடுவார்.
- மொகலாயக் கலை நிர்மாணிப்புகளின் கலைப் பாணி, நுட்ப முறைகள் என்பவற்றைக் கற்றறிவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**

- செயற்றிட்ட முறை/ கலந்துரையாடல் முறை/ ஆய்வறிக்கை களைச் சமர்ப்பித்தல் ஆகியவற்றில் ஒன்று அல்லது பல வற்றை உபயோகித்துக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைக் கட்டியெழுப்புக.

**பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை: மொகலாயக் கலை**

- பாரசீக மொகலாய மக்களினத்துக்கிடையில் இருந்த தொடர்பின் அடிப்படையில் இந்தியாவின் மொகலாய ஓவியக் கலை உருவானது.
- மதங்களைச் சாராமல் உலகியலுடன் தொடர்புடைய தொனிப் பொருள்களை அடிப்படை யாகக் கொண்டு ஆரம்ப காலத்தில் ஓவியங்கள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் பிற்காலப் பகுதியில் இந்தியப் பண்புகளும் கலந்து முதிர்ச்சியான, பல்கூட்டமைப்பைக் கொண்ட மொகலாயக ஓவியக் கலைப் பாணி உருவானது.

DRAFT

- தரைத்தோற்றக் காட்சி, விலங்குருவங்கள், வேட்டையாடும் காட்சிகள், யுத்தக் காட்சிகள், அரச குடும்பக் காட்சிகள் மொகலாய ஓவியக் கலையின் கருப்பொருட்களாக அமைந்தன.
- தூரநோக்கு, உருவங்கள் விபரிப்புத் தன்மையுடன் மெல்லிய இரேகைகள் உபயோகித்து, வர்ணக் கலவை என்பவற்றுடன் வரையப்பட்டிருத்தல். வேலைப்பாடுகளைக் கொண்டதாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை எனும்பண்புகள் இவ்வோவியங்களுக்குச் சிறப்பைத் தருகின்றன.
- மொகலாய கட்டட நிர்மாணிப்பு கலைகளுள் மிகவும் சிறப்பானது சாஜஹான் காலத்தில் அமைக்கப்பட்ட தாஜ்மஹால் மண்டபம் ஆகும். ஆக்ரா நகரத்தின் யமுனா நதிகக்கரை அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இது வெண்மையான சலவைக்கல்லினால் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.
- கூரையின் மத்தியில் அரைக் கோளவடிவமான சிகரம் உள்ளது. உட்பகுதியில் பலவித சலவைக் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட செதுக்கல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**பாபர் சக்கரவர்த்தியின் பூங்கா அவதானிப்பு**

- மொகலாய மன்னர்களுடைய வாழ்க்கை மொகலாய ஓவியக் கலையின் பிரதான தொனிப் பொருளொன்றாக இருப்பதுடன் இவ்வோவியமும் அதற்குச் சான்று பகிர்கின்றன.
- ஓவியத்தின் கீழ்ப்பகுதியில் பாபர் சக்கரவர்த்தியும் அவரது பணியாளர்களும் மேற் பகுதியில் அழகான மண்டபமொன்றும் கல்மலைகளுடனான தரைத்தோற்றக் காட்சி யொன்றும் காணப்படுகின்றது
- ஓவியத்தின் மத்திய பகுதியில் வெள்ளை நிறப் பூக்களையுடைய பூ மரம் ஒன்று உள்ளது. பாபர் சக்கரவர்த்தி சிவப்பு நிற உடை அணிந்தவராகவும் பணியாளர்களுக்கு ஆணையிடுபவராகவும் காண்பிக்கப்பட்டுள்ளார். ஒரு பணியாளன் அவருடைய தலைக்கு மேலால் வெயிலில் இருந்து காக்க மறைப்பொன்றைப் பிடித்த வண்ணம் உள்ளார்.
- முன்னணியில் பூப்பாத்திகளைக் கவனிப்பவர்களாக இரு பணியாளர்கள் உள்ளனர்.
- மனித உருவங்களைப் போலவே சூழலில் உள்ள சகல பொருட்களும் மிக அவதானிப்புடன் வரையப்பட்டுள்ளன.
- அக்பார் அரசனின் யுத்தக் காட்சி
- யுத்தக் கட்சியை மையமாகக் கொண்டது. ஓவியத்தின் மத்தியில் கட்டுமரங்களால் அமைக்கப்பட்ட பாலத்தின் மீது ஓடிச் செல்லும் இரு யானை உருவங்கள் உள்ளன. இரு யானைகளும் வால்களை உயர்த்தித் தும்பிக்கைகளைச் சுருட்டி வேகமாக ஓடும் விதத்தில், கலைஞன் ஓவியத்தை மிகத் திறமையாகச் சித்தரித்துள்ளார்.
- சாய்வாக அமைக்கப்பட்ட அவர்களது உடல்களால் ஓவியத்தின் அசையும் தன்மை தீவிரமாக்கப்பட்டுள்ளது.
- இரு யானைகளுக்குப் பக்கத்தில் நீரில் மூழ்கும், ஓடம் செலுத்தும், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பல உடல்நிலைகளையுடைய மனித உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- ஒட்டுமொத்தத்தில் பரபரப்பான பண்பை வெளிப்படுத்துவதாக உள்ளன.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- மொகலாயக் கலையின் ஆரம்பத்தையும் அதனுடன் தொடர்புடைய தகவல்களையும் விளக்குவார்.
- மொகலாயக் கலை நிர்மாணிப்புக்கு ஆதிக்கம் செலுத்திய உண்ணாட்டு, வெளிநாட்டு செல்வாக்கை விளக்குக.
- மொகலாயக் கட்டட நிர்மாணங்களினதும் ஓவியங்களினதும் ஊடகம், நுட்ப முறைகள், கலைப் பண்புகள் என்பவற்றை உதாரணங்களுடன் மதிப்பீட்டுக்குட்படுத்துக.

DRAFT

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.7 :** **இந்திய ராஜபுத்தான ஓவியக் கலை நிர்மாணிப்புகளைக் கற்பார்.**

**செயற்பாடு 7.7.1 :** **இந்திய ராஜபுத்தான ஓவியக் கலையை மதிப்பிடுவோம்.**
- **இராக இராகினி ஓவியங்கள்**
- **ராதா கிருஸ்ணா ஓவியங்கள்**

**பாடவேளைகள் :** 03

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- நிழற்படங்கள், காணொளிகள் அடங்கிய இறுவட்டுக்கள், கணனி இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**
- இந்திய ராஜபுத்தான ஓவியக்கலையின் தாக்கத்தை ஏற்படுத்திய இந்து மத எண்ணக்கருக்கள், கதைகள், பிரதேசக் கலாசார அங்கங்கள் என்பன நுணுகி ஆராய்ந்து விளக்குவார்.
- ராஜபுத்தான ஓவியக் கலையின் கலைப்பாணி, நுட்ப முறைகள், உபயோகித்துள்ள ஊடகம், கலைப் பண்புகள் என்பனவை மதிப்பீடு செய்வார்.
- ராஜபுத்தான ஓவியங்களை வரையக் காரணமான கருப் பொருட்களை விளக்குவார்.

**கற்றல் கற்பித்தல் முறை:**
- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/ குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**ராஜபுத்தான கலை**

- மொகலாய ஓவியக் கலையுடன் தொடர்புபட்டு உருவான பிரதேசக் கலைப் பாணியொன்றாக ராஜபுத்தான ஓவியக் கலையைக் குறிப்பிடலாம்.
- ராஜபுத்தான ஓவியக்கலையின் கலைப் பாணியைக் கருதுகையில் இவை மொகலாய ஓவியங்களை ஒத்துள்ளன. இருந்த போதும் இந்து ஓவிய மரபின் தாக்கம் பெற்றதால் அவற்றின் கருப்பொருள் சுதேசிய இந்து இலக்கிய எண்ணக்கருக்களையும் கலாசார பண்புகளையும் கொண்டன.

DRAFT

- பகவத் கீதை, கீதகோவிந்தம், இரகசியப்ரிய, மகாபாரதம், இராமாயணம் எனும் இலக்கிய மத நிகழ்வுகளும் கதாபாத்திரங்களும் ஓவியங்களாக வரையப்பட்டன. அதனைத் தவிர அரண்மனைக் காட்சிகள், இயற்கைச் சூழல் வேட்டைக் காட்சிகள் என்பனவும் ஓவியங்களாக வரையப்பட்டன.
- விபரிப்புத்தன்மையுடன் அங்கங்களைக் காண்பித்தல், மென்மையான இரேகைகள், பொருத்தமான வர்ணக் கலவை, முப்பரிமாணத் தன்மை, தூரநோக்கு எனும் பண்புகள் இவ்வோவியங்களில் காணப்படுகின்றன.

**இராக ராகினி ஓவியங்கள்**

ஏதேனும் வகையான இராகத்துக்கு ஏற்ப அமைக்கப்படும் பாடல்களின் ஸ்வரங்கள் காரணமாக உருவாகும் உணர்வுகளை ஓவியமாக வரைதல் இராக இராஜினி ஓவியங்கள் எனப்படும்.

**ராதா கிருஸ்ணன் ஓவியங்கள்**

இந்து இலக்கிய படைப்புகளில் வரும் கதாபாத்திரங்கள் ஓவியமாக வரைதல் ராஜபுத்தானிய ஓவியக் கலையின் முக்கிய பண்பாகும்.

- இதற்கு ஏற்புடையதாக இந்து இலக்கியத்தில் வரும் காதல் மற்றும் வீரக் கதைகள் இராஜபுத்தானிய ஓவியங்களில் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக கிருஸ்ணன் ராதையுடன் தொடர்புபட்ட காதல் கதைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- இந்திய ராஜபுத்தான ஓவியக் கலையில் செல்வாக்குச் செலுத்திய இந்து மத எண்ணக்கருக்கள், கதைகள், பிரதேச ரீதியான கலாசார அங்கங்களை நுணுகி ஆராய்ந்து விளக்குக.
- ராஜபுத்தான ஓவியக் கலையின் கலைப்பாணி, நுட்பமுறை, ஊடகம், கலைப் பண்புகள் என்பன தெரிவு செய்யப்பட்ட ஒவியங்கள் சிலவற்றைக் கொண்டு மதிப்பீடு செய்க.
- ராஜபுத்தான ஓவியங்களை வரையக் காரணமாக அமைந்த கருப் பொருட்களை விளக்குக.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.8 : உரோமக் கட்டடக் கலை நிர்மாணங்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.8.1 : உரோமக் கட்டட நிர்மாணிப்புக்களை மதிப்பிடுவோம்**

- வெற்றி வில் வளைவு (Triumple Arches)
  – ரயிட்டஸ் (Arch of Titus)
  – கொன்ஸ்ரன்ரயின் வளைவு (The Arch of Constantine)
- வெற்றித்தூண்கள் (Column Victory)
  – ரொஜன் தூண் (The Trajan column)
  – கொளோசியம் விளையாட்டரங்கு (Colosseum)

**பாடவேளைகள்** : 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- நிழற்படங்கள், காணொளிகள் அடங்கிய இறுவட்டுக்கள், கணனி இயந்திரங்கள், எறிவை இயந்திரங்கள்

**கற்றற் பேறுகள் :**

- உரோம லௌகிகக் கட்டட கலையின் அடிப்படைக்குக் காரணமான சமூக அரசியல் பின்னணியை விளக்குவார்.
- உரோம கட்டட நிர்மாணிப்புகளை குறிப்பிடுவார்.
- உரோம கட்டட நிர்மாணிப்பின் திட்டமைப்பு, உபயோகித் துள்ள தொழில் நுட்பம், அலங்கார வேலைப் பாடுகள், உபயோகம் என்பவற்றை விளக்குவார்.

DRAFT

**கற்றல் கற்பித்தல் முறை:**

- ஒப்படை முறை/ செயற்றிட்ட முறை/ குழுச் செயற்பாடுகளின் மூலம் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்/ கலை வெளியீட்டுப் பிரதிகளை மதிப்பிடுதல்/ கலந்துரையாடல் முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**வெற்றி வில் வளைவுகளும் தூண்களும்**

- இவ் வில் விளைவுகள் உரோமர்களின் வெற்றியின் ஞாபகார்த்தமாகவும் பேரரசர்களின் ஞாபகர்த்தமாகவும் நிர்மாணிக்கப்பட்டவையாகும்.
- நவீன கட்டட நிர்மாணிப்புக் கலைக்கு தாக்கத்தினையும் செல்வாக்கினையும் வழங்கி சுயாதீனமாக எழுந்திருக்கும் வகையில் அமைக்கப்பட்ட வில் வளைவுகளும் தூண்களும் உரோமக் கட்டடக் கலையின் சிறப்பான நிர்மாணிப்புகளாகின்றன.
- பாதைகளில் நுழையும்போது அனைவரும் பார்க்கக் கூடியவாறு இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- அலங்கார வேலைப்பாடுகளுடைய தனி வில் வளைவுகளும் 3 வில் வளைவுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

- மூன்று வில் வளைவுகள் காணப்படும் போது மத்தியில் உள்ளது பெரியதாகவும் இரு புறத்தில் உள்ளவை சிறியதாகவும் அமைக்கப்பட்டன.
- உரோமர்களின் போரின் வெற்றி, பேரரசர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் என்பன வில் வளைவுகளிலும் தூண்களிலும் அலங்கார வேலைப்பாடுகளாக இடப்பட்டுள்ளன.

**ரயிட்டஸ் வில் வளைவு**

- ரயிட்டஸ் பேரரசரின் போர் வெற்றியின் ஞாபகார்த்தமாக அவரது மரணத்தின் பின் ரயிட்டஸின் சகோதரரான டெமிதியன் பேரரசனால் இது கட்டப்பட்டது.
- இது கி.பி. 01ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. இது உரோம நகரில் அமைந்துள்ளது.
- இதன் மத்தியில் பெரிய வில் வளைவொன்று மட்டுமே உள்ளது. சலவைக்கல் ஊடகத்தை உபயோகித்து இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் முகங்களில் கிடைப்பக்கமாக அலங்காரமான கோலங்களும் அலங்கார வேலைப்பாடுகளும் செதுக்கல்களும் போலித்தூண்களும் காணக் கூடியதாக இருக்கின்றன. ஜெருசலம் நகரை ஆக்கிரமித்தல் இச் செதுக்கல்களில் காணப்படும் ஒரு காட்சியாகும்.

**கொன்ஸ்ரன்ரைன் வில்வளைவு**

- 1ம் கொன்ஸ்ரன்ரைன் பேரரசனுடைய போர் வெற்றியின் ஞாபகார்ததமாக இது அமைக்கப்பட்டது.
- 3 வில் வளைவுகளைக் கொண்ட இது கி.பி. 315ம் ஆண்டில் அமைக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது.
- இதன் மத்தியில் வில் வளைவுடைய நுழைவாயில் பெரியதாகவும் இரு புறத்தில் இருக்கும் நுழைவாயில்கள் சிறியதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.
- சலவைக் கல் ஊடகத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில் அழகிய செதுக்கல்கள் காணப்படுகின்றன.

DRAFT

**ரொஜன் தூண்**

- உரோமர்களின் போர் வெற்றியின் ஞாபகாரத்தமாக இவ் வெற்றித் தூண்கள் அமைக்கப் பட்டுள்ளன. இத் தூண்கள் கி.பி. 107 - 113 காலப் பகுதியில் கட்டப்பட்டதாகக் கருதப்படுகின்றன. ரொஜன் தூண்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.
- இத்தூண் 98 அடி உயரமுடையது. அடிததளத்துடன் நோக்கும்போது இது 125 அடி உயரமுடையது.
- ரொஜன் பேரரசனின் டெசியன் (Decian) போர் வெற்றியின் ஞாபகார்த்தமாக இது அமைக்கப்பட்டது. தூண் முழுவதும் உரோம டெசியன் படையினருக்கிடையில் நடைபெற்ற போரின் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன.
- தூணின் உட்பகுதியில் மேலே ஏறிச் செல்ல உதவும் சுருள் வடிவான படிவரிசை காணப்படுகிறது. இத்தூணின் மேற் பகுதியில் ரொஜன் பேரரசனின் சிலை காணப்படுகிறது.

**கொளோசியம்**

- இது நீள்வட்ட வடிவ நில அமைப்புடைய பாரிய அரங்கமேடையாகும். அத்துடன் யுத்தக் காட்சிகளை பார்வையிடவும் வசதி கொண்டதாக இருந்தது.
- கி.பி. 70 - 80ம் காலப் பகுதிகளில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. இது உரோமர்களின் பலத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள முக்கியமான கட்டடமொன்றாகும்.
- இங்கு ஏறத்தாழ 50 000 - 80 000 பார்வையாளர்கள் அமரக்கூடிய இடவசதியைக் கொண்டது.
- சாந்தினால் நிர்மாணிக்கப்பட்ட இதில் வில் வளைவான வாயில்களைக் கொண்ட 3 மாடிகள் உள்ளன.
- கொலோசியத்தின் உள்ளே சுரங்கப்பாதைகள், ஆசனங்கள், அலங்கார அறைகள் என்பன அடங்கியுள்ளன.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- உரோம கட்டட நிர்மாணிப்புகள் அடங்கிய நிர்மாணிப்புகளைச் சேகரிக்குக.
- உரோம வெற்றியின் வில் வளைவுகள் பற்றிய தகவல்களை உதாரணங்களுடன் விளக்குக.
- வெற்றித் தூண் பற்றி உதாரணங்களுடன் விபரிக்குக.
- உரோம கட்டட நிரமாணிப்புக்கலைக்குள் அடங்கும் கொலோசியத்தின் முக்கியத் துவத்தைக் கலந்துரையாடுக.

DRAFT

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.9 : உரோம சிலைகளைக் கற்பார்.**

**செயற்பாடு 7.9.1 : உரோம சிற்பங்களை நிர்மாணிப்போம்**

- யூலியஸ் சீசர் (Julius Caesar) மார்பளவுச் சிலை
- கெரகெல்லா (Caracalla) மார்பளவுச் சிலை
- ஒகஸ்ரஸ் சீசர் (Auguatus Casesar) நின்ற நிலைச் சிலை

**பாடவேளைகள் :** 04

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

உருவப்படங்கள், இறுவட்டுகள், படவில்லை (Slides) எறிவை, கணணி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள் :**

- உரோம லௌகிக பிரதிமை/ சிற்பங்களைக் குறிப்பிடுவார்.
- உரோம சிற்பக் கலையின் நுட்ப முறைகள், உபயோகித்துள்ள ஊடகம் தொழில்நுட்பம், பாவ வெளிப்பாட்டு இயல்புகளைப் பகுத்தாய்வார்.
- தெரிவு செய்யப்பட்ட உரோம சிற்ப நிர்மாணிப்புகளின் தொகுதியொன்றை மதிப்பிடுவார்.

DRAFT

**கற்றற் கற்பித்தல் முறைகள்:**

செயற்றிட்ட முறை/ உரையாடல் முறை/ ஒப்படை முறை

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

**உரோம சிற்பக்கலை**

- கிரேக்க சிற்பங்கள் கருத்தியல் கொண்ட தெய்வீக அழகு வெளிப்படுமாறு அமைக்கப்பட்ட போதிலும் உரோம சிற்பங்கள் மனித நேயம், இயல்புநிலை என்பன அடிப்படையாகக் கொண்டே நிர்மாணிக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு தனிநபர்களினதும் பிரத்தியேக மற்றும் உள்ளார்ந்த குண இயல்புகள் மெய்யான வடிவில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

**யூலியஸ் சீசர் (நின்ற நிலை சிலை)**

- யூலியஸ் சீசர் எனும் சிற்பமானது ஏகாதிபத்திய தன்மையை இன்றி சாதாரண மனிதனின் தோற்றத்தைக் கொண்டுள்ளது.
- ஏகாதிபத்தியவாதியான யூலியஸ் சீசரின் உள்ளார்ந்த சரிதையின் பண்புகள் இவரது முகம் பிரதிபலிக்கிறது.

- உரோம சிற்பக்கலையின் இயல்பான தோற்றத்துடன் முகத்கதின் தன்மை
- சலவைக் கல் ஊடகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இச்சிற்பம் ஒளிநிழல் காண்பித்திருக்கும் தன்மைக்கேற்ப உணர்வு வெளிப்பாட்டை நன்று புலப்படுத்துவதாகவும் உள்ளது.

**கெரகெல்லா - மார்பளவுச் சிற்பம்**

- சலவைக் கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. இது இடுப்புக்கு மேல் உள்ள பகுதியுடனான சிற்பமாகும். கெரகெல்லா கூர்மையாக எதையோ நோக்கிய வண்ணம் காணப்படுகிறார்.
- உரோமச் சிலைகளுள் தனிப்பட்ட சரிதைப் பண்புகள் நன்றாகப் புலப்படும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- முறுக்கு வடிவில் அமைந்த தாடி, கூரான மூக்கு, இமைப்புருவங்களுக்கிடையிலான மடிப்புகள், இறுக மூடிய உதடுகள், அவருடைய பண்புகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- மிகக் கொடிய நிர்வாகியாகக் கருதப்படும் கெரகெல்லாவின் கொடூரமான மனதின் தன்மையை புலப்படுத்துவதாக உள்ளது.

**ஒகஸ்ரஸ் சீசர் - நின்றநிலை சிற்பம்**

- எடுப்பான தோற்றத்துடன் இருக்கும் ஒகஸ்ரஸ் பேரரசனின் நின்ற நிலை சிலையாகும். இவர் போருக்கான ஆடையுடன் வலக்கையை உயர்த்தி ஆட்காட்டி விரலை நீட்டி ஆணை இடுபவராகத் தோற்றமளிக்கிறார்.
- பேரரசனுக்குத் தெய்வீகத் தன்மையைச் சார்ந்த இச் சிலை நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. அதற்கு அடையாளமாக சிறிய தேவதையொன்று அவருடைய பாதங்களுக்கருகில் காண்பிக்கப்பட்டுள்ளது.
- சிறப்புவாய்ந்த கலைப் பண்புகள் அடங்கியுள்ளன. இச்சிலையின் உடல்நிலையும் பரிமாணமும் பழைமையான கிரேக்கக் கலையின் செல்வாக்கைப் பிரதி பலிக்கிறது.
- இடுப்புக்கு மேல் அணியப்பட்டுள்ள போர் உடை அலங்கார வேலைப் பாடுகளைக் கொண்டுள்ளது. இது கி.பி. 01ம் நூற்றாண்டுக்குரியது எனக் கருதப்படுகிறது. இச்சிலை சலவைக் கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

DRAFT

## கணிப்பீடும் மதிப்பீடும்

- உரோம பிரதிமைச் சிற்பங்கள் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்க.
- உரோம பிரதிமைச் சிற்பங்களைக் கொண்டு அவற்றின் கலைப் பண்புகள் தொடர்பான மதிப்பீடொன்றை செய்க.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 7.10 : உரோம ஓவியங்களைக் கற்றறிவார்.**

**செயற்பாடு 7.10.1 : உரோம ஓவியங்களைக் கற்றறிவோம்**

- டயோனிசியஸ் (Dionysius) தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய ஓவியங்கள் - பெண் ஒருவரை தண்டிக்கும் காட்சி
- Mummy protrait of a woman with Ringlet gairstyle
  சுருள் வடிவ கேசமுடைய பெண் ஒருத்தியின் இடுப்பு வரையான உருவம்

**பாடவேளைகள்** : 04

**தரவிருத்தி உள்ளீடுகள்:** கலா நிர்மாணிப்புகளின் நிழற் பிரதிகள், Power point Presentation, காணொளி நிகழ்ச்சிகள், எறிவை இயந்திரங்கள், கணணி இயந்திரங்கள்.

**கற்றற் பேறுகள்** :
- உரோம ஓவியங்களைக் குறிப்பிடுவார்.
- உரோம ஓவியங்களின் அடிப்படை இயல்புகள், கலைப் பண்புகள், கலைப்பாணி, கருப்பொருள் என்பவற்றை விளக்குவார்.
- தெரிவு செய்யப்பட்ட ஓவியங்கள் சிலவற்றை நயப்பார்.

DRAFT

**கற்றற் கற்பித்தல் முறைகள்:**

கலந்துரையாடல் முறை, குழுச் செயற்பாடு ஒப்படை செயற்றிட்டங்கள் ஆய்வறிக்கைகளைச் சமர்ப்பித்தல் கலைப்படைப்புகளை மதிப்பிடல்

## பாட விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத் துணைபுரிபவை:

### டயோனிசியஸ் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய ஓவியங்கள்

**பெண் ஒருவரை தண்டிக்கும் காட்சி**

- இங்கு ஒரு பெண் நடனமாடுவதாகத் தோன்றுகிறாள். அத்துடன் சாய்ந்திருக்கும் பெண் ஒருவரைத் தாக்கும் காட்சியும் இங்கே சித்தரிக்கப்பட்டுள்ளது.
- கி.மு. முதலாம் நூற்றாண்டுக்குரிய இது பொம்பெய் நகரத்தின் விலா மிஸ்டரிஸ் (Villa of Mysteries - Poppeii) எனப்படும் கட்டடத்தில் காணப்படுகிறது.
- டயோனிசியஸ் தெய் வழிபாட்டுடன் தொடர்புடைய காட்சிகளைச் சித்திரிக்கும் ஓவியத் தொகுதியொன்று கட்டடத்தில் பார்வையிடக்கூடியதாக இருக்கிறது. அத்தொகுதியில் காணப்படும் ஓவியங்களில் இதுவும் ஒன்றாகும்.

- இவ்வோவியத்தில் காணப்படும் பின்புறம் திரும்பி நடனத்தில் ஈடுபடும் உருவம் சிறப்பாக உள்ளது.
- மோடிப்படுத்தப்படும் பாரம்பரிய முறையை விட வேறுபட்ட உரோம இயல்பான மெய்க்கலைப் பண்புகள் இதில் வெளிப்படுகின்றன.
- சிவப்பு வர்ணப் பின்னணியின் மீது சந்தத்துடன் கூடிய உடல் நிலைகள், ஆடைகளின் மடிப்புகள் என்பன மிகவும் தத்ரூபமாக சித்தரிக்கப் பட்டுள்ளன.
- பிரெஸ்கோ முறையில் வரையப்பட்ட ஓவியமாகும்.

**வர்ணமூட்டப்பட்ட சிலையுடன் காணப்படும் சட்டகத்துடன் உள்ளே இருக்கும் ஓவியங்களின் பிரதிமை**

- உரோம ஓவியனின் செயற்பாடுகளை எடுத்துக்காட்டும் ஒரு முக்கியமான ஓவியமாகும். இயற்கைவாத பண்புகள் உறுதிப்படுத்தும் வகையில் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- சாம்பல் நிற உடை அணிந்தவராக ஆசனமொன்றில் அமர்ந்திருக்கும் விதத்தில் ஓவியத்தின் மத்திய பகுதியில் ஓவியன் காணப்படுகிறார். அவருக்கு இடப்பக்கத்தில் ஏந்தியொன்றில் பொருத்தப்பட்ட மார்பளவுச் சிலை ஒன்று உள்ளது. காலடியில் அவர் வரைந்த ஓவியமொன்றும் காணப்படுகிறது.
- ஓவியன் வலக்கையால் தூரிகையொன்றை ஏந்திச் செயற்படும் விதம் காண்பிக்கப்பட்ள்ளது. ஒரு புறத்தில் பூச்சுகள் அடங்கிய பெட்டியொன்றும் உள்ளது.
- ஓவியனுக்குப்பின்னால் காணப்படும் இரு பெண்களும் இவரது செயற்பாட்டினை உன்னிப்பாக அவதானிக்கின்றனர்.
- இது பிரெஸ்கோ முறையில் சுவரில் வரையப்பட்டுள்ளது.

**சுருள் வடிவ கேசமுடைய பெண் ஒருத்தியின் இடுப்பு வரையுள்ள உருவம்**

- இது இளம் யுவதி ஒருவருடைய உருவத்தை இயற்பண்புவாதம் வெளிப்படும் விதத்தில் மரப் பலகை மீது வரையப்பட்ட ஓவியமொன்றாகும்.
- அவளுடைய நவ நாகரிகத் தன்மை, ஆபரணங்கள், ஆடையணிகள் என்பவற்றைக் கருதும் போது செல்வந்தக் குடும்பத்தை சேர்ந்த பெண் ஒருவரின் தோற்றத்தைக் குறிக்கிறது.
- இப் பெண் உருவம் எதையோ ஒன்றை அறியும் அவாவுடன் காணப்படுகிறார்.
- மாணிக்கக் கற்கள், மணிகள் பதிக்கப்பட்ட ஆபரணங்கள் அணிந்தவராகவம் அழகிய சிகை அலங்காரத்தைக் கொண்டதாகவம் இப்பெண் தோற்றமளிக்கிறார்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- உரோம ஓவியங்கள் 5 ஐக் குறிப்பிடுக.
- உரோம ஓவியங்கள் பற்றிய கலைமதிப்பீடொன்றைச் செய்க.

DRAFT

சித்திரக்கலை

தரம் 13

ஆசிரியர் வழிகாட்டி

# புகைப்படத்திரட்டு


## தேர்ச்சி 6.0

சமய பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் உண்ணாட்டு, வெளிநாட்டுத் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புகள் மற்றும் பொது சனத் தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து, இரசனைக்குட்படுத்தி, அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.


# தேர்ச்சி மட்டம் 6.1



படம் 1 - ஜைன பவனம், ஹரி பீரிஸ்



படம் 2 - இந்திராணி, பிரதிமை ஓவியம்



படம் 3 - திரும்பி வருதல், ஐவன்பீரிஸ் (The Return)



படம் 4 - கல்கிஸ்ஸை



படம் 5 - தங்கமீனுடன் பிள்ளை, ஜஸ்டீன் தெரணியகல



படம் 6 - கண்ணாடியின் முன்னால் பெண், ஜஸ்டீன் தெரணியகல



படம் 7 - ஞானமுள்ள, ஞானமற்ற கன்னியர்கள், றிச்சட் கேப்றியல்



படம் 8 - வயல், றிச்சட் கேப்றியல்



படம் 9 - ஐஸ்கிறீம் வண்டி, டபிள்யூ.ஜே.ஜீ. பீளிங்



படம் 10 - அசையாப் பொருள் கூட்டம், டபிள்யூ.ஜே.ஜீ. பீளிங்



படம் 11 - மாரனின் தோல்வி, ஜோஜ் கீட் - கோதமீ விகாரை சுவரோவியங்கள்



படம் 12 - பீமனும் ஜரசந்தனும், ஜோஜ் கீட்



படம் 13 - பத்தினி தேவாலயம், எல்.ரி.பீ. மஞ்சுஸ்ரீ




படம் 14 - பெண் உருவம், எல்.ரி.பீ. மஞ்சுஸ்ரீ

# தேர்ச்சி மட்டம் 6.2



படம் 15 - கடற் கன்னியின் நடனம், ஸ்டென்லி அபேசிங்க



இபடம் 16 - இளமையும் குழந்தைப் பருவமும் - ஸ்டென்லி அபேசிங்க



படம் 17 - பெயரிடப்படாத ஓவியம், ஏ. மார்க்



படம் 18 - மனிதனும் நாய்களும், ஏ. மார்க்



படம் 19 - கடினச் செயல், திஸ்ஸ றணசிங்க



படம் 20 - மகீஷாசுரச் சிலை (Buffalo Demon's End), திஸ்ஸ றணசிங்க




படம் 21 - வாழ்க்கையின் அரவணைப்பு, எச்.ஏ. கருணாரட்ன



படம் 22 - பெயரிடப்படாத (Untitle) சிற்பம், எச்.ஏ. கருணாரட்ன


## தேர்ச்சி மட்டம் 6.3



படம் 23 - தாயும் சேயும், ஜொமினி றோய்



படம் 24 - பூனையும் சிங்கறாலும், ஜொமினி றோய்




படம் 25 - மூன்று பெண் பிள்ளைகள், அம்ரிதா ஷர்கில்




படம் 26 - மணம் முடிப்பதற்கு தயாராகும் மணப்பெண், அம்ரிதா ஷர்கில்


# தேர்ச்சி மட்டம் 6.4



படம் 27 - நீடித்த நினைவு **(The Persistence of Memory)),**
சல்வதோர் டாலி **(Salvador Dali)**



படம் 28 - உறக்கம் **(Sleep),** சல்வதோர் டாலி **(Salvador Dali)**



படம் 29 - முள் மாலை தரித்த சுய பிரதிமை ஓவியம் **(Self portait with Nechlase of Throns),** ப்ரீடா காலோ **(Frida Khalo)**



படம் 30 - ப்ரீடா இருவர் **(Two Fridas),** ப்ரீடா காலோ **(Frida Khalo)**


# தேர்ச்சி மட்டம் 6.5




படம் 31 - ஒழுங்கமைப்பு - VII **(Composition - VII),**
வெசிலி கன்திஸ்கி **(Wassily Kandinsky)**




படம் 32 - சிறப்பான வகையில் வெளிப்படுத்தப்பட்ட கோண இல. 247 **(Assended Corners No. 247),** வெசிலி கன்திஸ்கி **(Wassily Kandinsky)**




படம் 33 - மஞ்சள், கறுப்பு, நீலம், சிவப்பு வர்ணங்களை ஒருங்கிணைத்தல் **(Lozenge Co position with yellow, black, blue, red and gray),**
பியே மொன்றியன் **(Piet Mondrian)**



படம் 34 - மஞ்சள், நீலம், சிவப்பு வர்ணங்களை ஒருங்கிணைத்தல் **II (Composition II in red, blue and yellow)** பியே மொன்றியன் **(Piet Mondrian)**



படம் 35 - சிந்தனையாளர் **(The Thinker),** ஒகஸ்தே ரொடின் **(Auguste Rodin)**



படம் 36 - குடிமகன் **(The Burghers of Calais),**
ஒகஸ்தே ரொடின் **(Auguste Rodin)**



படம் 37 - சாய்ந்திருக்கும் உருவம் **(Reclining figure),** ஹென்ரி மூர் **(Henry Moore)**




படம் 38 - அரச குடும்பம் **(King and Queen),** ஹென்ரி மூர் **(Henry Moore)**

## தேர்ச்சி 7.0

வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டுச் சித்திர, சிற்ப, செதுக்கல் மட்டும் கட்டட நிர்மாணிப்புக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.


# தேர்ச்சி மட்டம் 7.1



படம் 39 - யாப்பகூவ அரண்மனை படிவரிசை



படம் 40 - யாப்பகூவ சிங்க உருவம்



படம் 41 - யாப்பகூவ அடித்தளத்தின் செதுக்கல்



படம் 42 - யாப்பகூவ நிலையின் செதுக்கல் காற்றுத்துளை

# தேர்ச்சி மட்டம் 7.2



படம் 43 - லங்காதிலக விகாரை, கம்பளைக் காலம்



படம் 44 - கடலதெனிய விகாரை, கம்பளைக் காலம்




படம் 45 - விஜயோத்பாய, கடலதெனிய விகாரை, கம்பளைக் காலம்

# தேர்ச்சி மட்டம் 7.3



படம் 46 - அம்பக்கே தேவாலயம், கம்பளைக் காலம்



படம் 47 - வட்டுக்குத்தி அம்பக்கே தேவலாயம், கம்பளைக் காலம்



படம் 48 - போதிகை செதுக்கல், அம்பக்கே தேவாலயம், கம்பளைக் காலம்



படம் 49 -
நடனமாது
அம்பக்கே தேவாலயம்,
கம்பளைக் காலம்



படம் 50 -
பிள்ளைக்கு பாலுட்டும் தாய்,
அம்பக்கே தேவாலயம்,
கம்பளைக் காலம்



படம் 51 -
மல்யுத்தம்,
அம்பக்கே தேவாலயம்,
கம்பளைக் காலம்



படம் 52 -
வெளிநாட்டு குதிரையோட்டி,
அம்பக்கே தேவாலயம்,
கம்பளைக் காலம்



படம் 53 -
கடற்கன்னி,
அம்பக்கே தேவாலயம்,
கம்பளைக் காலம்



படம் 54 -
சிங்கம்,
அம்பக்கே தேவாலயம்,
கம்பளைக் காலம்



படம் 55 - பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 56 - தூண்களும் போதிகைகளும், பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 57 - மரச் செதுக்கல், பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 58 - நடனமாது, பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 59 - மல்யுத்தம், பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 60 - பாம்புப் பிணையல் பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 61 - நடனக்காரரும் மேளக்காரரும், பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 62 - வணக்கம் தெரிவித்தல், பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்



படம் 63 - தாமரை, பனாவிட்டிய அம்பலம், கம்பளைக் காலம்

# தேர்ச்சி மட்டம் 7.4




படம் 64 - பஞ்சபாண்டவர் இரதம், பல்லவர் கால நிர்மாணம், இந்தியா




படம் 65 - தர்மர் இரதம், பஞ்சபாண்டவர் இரதம்
பல்லவர் கால நிர்மாணம், இந்தியா




படம் 66 - அர்ஜுனர் இரதம்,
பஞ்சபாண்டவர் இரதம்,
பல்லவர் கால நிர்மாணம், இந்தியா



படம் 67 - பீமர் இரதம், பஞ்சபாண்டவர் இரதம்,
பல்லவர் கால நிர்மாணம், இந்தியா



படம் 68 - திரௌபதி இரதம்,
பஞ்சபாண்டவர் இரதம்,
பல்லவர் கால நிர்மாணம், இந்தியா



படம் 69 - நகுலன் சகாதேவன் இரதம்,
பஞ்சபாண்டவர் இரதம்,
பல்லவர் கால நிர்மாணம், இந்தியா



படம் 70 - கடற்கரைக் கோவில், பல்லவர் கால நிர்மாணம், இந்தியா



படம் 71 - கங்கையின் இறக்கம் (மாமல்லபுரம்), பல்லவர் கால நிர்மாணம், இந்தியா

# தேர்ச்சி மட்டம் 7.5



படம் 72 - இராஜராஜேஸ்வரம் கோயில், சோழர் கால நிர்மாணம், இந்தியா



படம் 73 - கல்யாண சுந்தரர் மூர்த்தம், சோழர் கால நிர்மாணம், இந்தியா



படம் 74 - சிவ தட்சணாமூர்த்தி (இராஜராஜேஸ்வரம் கோவில்), சோழர் கால நிர்மாணம், இந்தியா



படம் 75 - சிவ பிக்ஷாடனமூர்த்தி மூர்த்தம் (இராஜராஜேஸ்வரம் கோவில்) சோழர் கால நிர்மாணம், இந்தியா

# தேர்ச்சி மட்டம் 7.6



படம் 76 - தாஜ்மஹால், மொகலாயர் காலம், இந்தியா




படம் 77 - சாஜஹான் மற்றும் மும்தாஜின் கல்லறை, தாஜ்மஹால், இந்தியா



படம் 78 - அரைக்கோள வடிவ சிகரம், தாஜ்மஹால், இந்தியா




படம் 79 - மலர்க் கொடி அலங்காரம் தாஜ்மஹால், இந்தியா



படம் 80 - காற்றுத்துளைச் செதுக்கல்கல் தாஜ்மஹால், இந்தியா





படம் 81 - பாபூர் மன்னன் பூங்காவைப் பார்வையிடுதல் - மொகலாய ஓவியக்கலை, இந்தியா




படம் 82 - அக்பர் மன்னனின் யுத்தக் காட்சி - மொகலாய ஓவியக்கலை, இந்தியா


# தேர்ச்சி மட்டம் 7.7




படம் 83 - தோடி இராகம், ராகா ராகினி ஓவியம், ராஜ்பூத் ஓவியம், இந்தியா




படம் 84 - கேதார இராகம், ராகா ராகினி ஓவியம், ராஜ்பூத் ஓவியம், இந்தியா



படம் 85 - ராதா கிருஷ்ணா ஓவியம், ராஜ்பூத் ஓவியம், இந்தியா



படம் 86 - ராதா, ராஜ்பூத் ஓவியம், இந்தியா

# தேர்ச்சி மட்டம் 7.8



படம் 87 - ரய்ட்டஸ் வில்வளைவு நுழைவாயில், வெற்றி வளைவு, உரோம கட்டடக்கலை நிர்மாணம்



படம் 88 - ரய்ட்டஸ் வில்வளைவு நுழை வாயிலின் மேல் இருக்கும் பகுதி, உரோம கட்டடக்கலை நிர்மாணம்



படம் 89 - ஜெருசலேம் நகர முற்றுகையின் செதுக்கல், ரய்ட்டஸ் வில்வளைவு நுழை வாயில், உரோம கட்டடக்கலை நிர்மாணம்



படம் 90 - கொன்ஸ்ரன்ரயின் வளைவு (The Arch of Constantine),
உரோம கட்டடக்கலை நிர்மாணம்




படம் 91 - செதுக்கல்,
கொன்ஸ்ரன்ரயின் வளைவு,
உரோம கட்டடக்கலை நிர்மாணம்



படம் 92 - செதுக்கல்,
கொன்ஸ்ரன்ரயின் வளைவு,
உரோம கட்டடக்கலை நிர்மாணம்



படம் 93 - ரொஜன் தூண் (The Trajan Column), வெற்றித் தூண், உரோம கட்டடக்கலை நிர்மாணம்



படம் 94 - செதுக்கல், ரொஜன் தூண், உரோம கட்டடக்கலை நிர்மாணம்



படம் 95 - செதுக்கல், ரொஜன் தூண், உரோம கட்டடக்கலை நிர்மாணம்










படம் 96 - கொலோசியம், உரோம கட்டடக்கலை நிர்மாணம்

# தேர்ச்சி மட்டம் 7.9




படம் 97 - ஜுலியஸ் சீசர் சிற்பம், உரோம சிற்பக்கலை நிர்மாணம்



படம் 98 - கெரகெல்லா, உரோம சிற்பக்கலை நிர்மாணம்



படம் 99 - ஒகஸ்ரஸ் சீசர், உரோம சிற்பக்கலை நிர்மாணம்

# தேர்ச்சி மட்டம் 7.10



படம் 100 - டயோனியஸ் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய ஓவியங்கள், பெண் ஒருவரைத் தண்டிக்கும் காட்சி, உரோம ஓவியக்கலை



படம் 101 - சுருள் வடிவ கேசமுடைய பெண் ஒருத்தியின் இடுப்புக்கு மேல் உள்ள உருவம் (Mummy Portrait of a Woman with Ringlet Hairstyle), உரோம ஓவியக்கலை

## மேலதிக வாசிப்பு நூல்கள்


குமாரசுவாமி, ஆனந்த. (1994). மத்திய கால சிங்களக் கலை, கொழும்பு தேசிய நூதனசாலை

கொடகும்புரே, சார்ள்ஸ். (1981). பனாவிட்டிய விடுதியின் செதுக்கல்கள், தெல்பொருளியல் திணைக்களம், சமயவர்தன அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). காவற்கல், தெல்பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). திவங்க சிலை மனை சுவரோவியங்கள், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). சந்திரவட்டக்கல், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1982). பொலநறுவை வெண்கலச் சிலைகள், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

கொடகும்புரே, சார்ள்ஸ். (1984). புத்தர் சிலைகள், தொல் பொருளியல் திணைக்களம், இலங்கை அரச அச்சகம்

வனரத்தன தேரர், கம்புருட்டியே. (1983). இலங்கை புத்தர் சிலைகள், கம்புருட்டியே, வரையறுக்கப்பட்ட மாத்தற வர்த்தகர்கள்

சார்ள்ஸ், எஸ்.பீ. (2000). பழைமையான சுவரோவியங்கள், மத்திய பண்பாட்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

விக்கிரமகமகே, சந்திரா. (1995). இலங்கையின் பழைமையான கட்டட வாயில்கள், இலங்கை பண்பாட்டுக் கல்வி நிலையம்

விக்கிரமகமகே, சந்திரா. (1998). கல்விகாரையின் கலையும் வாஸ்துக் கலையும், ஸ்ரீதேவி அச்சகம் (தனியார்) லிமிடெட்

விக்கிரமகமகே, சந்திரா. (2001). அட்டமஸ்தான, தரஞ்சி அச்சகம்

விக்கிரமசிங்க, எஸ்.ஏ. (1992). இலங்கைக் கலை வரலாறு

விஜேசேகர, நந்ததேவ. (1990). சிற்பக்கலை, செம்மையாக்கம், தொல்பொருளியல் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - மெதவல, மத்திய பண்பாட்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - தம்புள்ளை, மத்திய பண்பாட்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்


DRAFT

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (2004) இலங்கையின் சிற்பங்கள் - பௌத்த, மத்திய பண்பாட்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - கத்தலுவ, மத்திய பண்பாட்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

சூட்டிவொங்ஸ், நந்தனவும் வேறு பலரும். (1990) இலங்கையின் சுவரோவியங்கள் - கரகம்பிட்டிய, மத்திய பண்பாட்டு நிதியம், கொழும்பு: அரச அச்சகத் திணைக்களம்

பரணவிததான, எஸ். (1963) இலங்கையின் தூபிகள்: Vம் பகுதி இலங்கை அரச அச்சகம்

பரணவிததான, எஸ். (1995) தொல்பொருளியல் சஞ்சிகை, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

குணவர்தன, பிரியசாந்த. (2005). பழைமையான இடங்களும் நினைவுத்தூபிகளும், தொல்பொருளியல் திணைக்களம்

தயானந்த, சார்ள்ஸ் (2002). சோலியஸ் மென்டிஸ்: களனி விகாரை சுவரோவியங்கள், சோலியஸ் மென்டிஸ் பண்பாட்டு மன்றம்

திசானாயக, ஜே.பீ. (1996). நாட்டின் மகிமை (தெகல்தொருவ), கொழும்பு: எஸ் கொடகே கம்பெனி

தர்மசிரி, அல்பேட். (2013). பெல்லன்வில சுவரோவியங்கள், சரசவி வெளியீட்டாளர், ஷாப் கிரபிக்ஸ்வறவுஸ் (தனியார்) லிமிடெட்

பஷாம் ஏ.எல். (1995). வியத்தகு இந்தியா, கொழும்: கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

பண்டார நாயக்க, சேனக்க. (1970) சந்திரவட்டக்கல்லும் வேறு ஆவணங்களும், எம்.டீ. குணசேன கம்பெனி

பஸ்நாயக்க, எச்.டீ. (1998). பழைமையான இநதிய நாகரிகம், கொழும்பு: குணசேன கம்பெனி

லக்துசிங்க, சிரிநிமல் (1990). கண்டிக்காலம், நந்ததேவ விஸேசேகர, சித்திரக்கலை, கொழும்பு: தொல்பொருளியல் திணைக்களம்

விமலவங்ச, பத்தேகம. (1969). எமது பண்பாடு

விஜேசேகர, நந்ததேவ. (1990). சித்திரக்கலை, செம்மையாக்கம் தொல் பொருளியல் திணைக்களம்

விஜேசேகர, நந்ததேவ. (1964). பழைமையான சிங்கள சுவரோவியங்கள், கொழும்பு: அரச கரும மொழித் திணைக்களம்

சமரசிங்க, எஸ்.ஜீ. (199). இலங்கை கலை சங்கத்தின் கலைச்சஞ்சிகை, சமயவர்தன அச்சகம், கொழும்பு

சிரிசேன. சிஹில் எம். (1992) இலங்கைக் கலைசெய்தி, சதற வெளியீட்டாளர்களும் அச்சக வினைஞரும்

DRAFT

சௌவிரத்தின, அனுராத. (1966) இலங்கையின் வட்டதாகே, வரையறுக்கபப்ட எம்.டீ. குணசேன கம்பெனி

செனவிரத்தின, அனுராத. (1995). அனுராதபுரம், கொழும்பு: தொல்பொருளியல் திணைக்களம்

செனவிரத்தின, அனுராத. (1998). பொலன்னறுவை, கொழும்பு: தொல்பொருளியல் திணைக்களம்

செனவிரத்தின, அனுராத. (2013). மலைநாடு:கண்டி, கொழும்பு: மத்திய பண்பாட்டு நிதியம்

சோமதிலக்க, எம். (2004) தொன்மையான இலங்கையின் சித்தரக்கலை, எஸ்.கொடகே

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1991) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, 36ம் இதழி, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், தரங்க அச்சகம், மகரகம

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1992) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, 4ம் இதழி, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், ஸ்ரீதேவி அச்சகம், தெகிவளை

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1991) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், தரங்க அச்சகம், மகரகம

சோமானந்த டீ. குலசூரிய, ஏ. குணரத்தின, ஈ.எம். (1991) இலங்கைக் கலை சங்கத்தின் மூன்று மாதங்களுக்கொரு முறை வெளியாகும் சங்சிகை, 36ம் இதழி, இலங்கை தொல் பொருளியல் திணைக்களம், ஸ்ரீதேவி அச்சகம், தெகிவளை

Adams, Laurie Schneider. (2008). *A History of western Art*, John Jay College and the Graduate Center, City University of Newyork, McGraw-Hill, New York.

Bandaranayaka, Senaka. (1986). *The Rock and Wall painting of Sri Lanka*, Stamford (pvt) Ltd.

Bronze from Ceylon, (1986). ***Bronze from Ceylon,*** National musium, Colombo.

Dharmasiri, Albert. (1988). *Modern Art in Sri Lanka,* Lakehouse.

Janson, H.W (2011). *History of Art: The Western Tradition*, Londan: laurence King Publishing Ltd.

Paranavithana, Senarath. (1971). *Art Of Ancient Sinhales*, Maharagama: Visudunu Prakashakayo.

Premathilaka, Lilananda. (1986). *Sri Lankan Bronzes*, National musium, Colombo.

DRAFT

Premathilaka, Lilananda. (1995). *The Heritege of Sri Lanken Bronze Sculpture,* lilananda Premathilaka, National musium, Colombo.

Rathus, Lois Fichner. (2004). *Undestanding Arts*, USA, Thomson Wordsworth.

Sholder, Von. (1992). *Buddist Sculpture of Sri lanka*, ,Hongkong.

Sholder, Von. (1992). *The Golden Age of Sculpture in Sri lanka*, Hongkong.

Somadeva, Raj. (2012). *Rock Painting and Engraving Sites in Sri Lanka*, PGIAR-Publication.

Turner, J. (1996). The Dictioíry of Art, Macmillan Publisher Limited, London.

DRAFT